Vol. IV.] May, 1912 [No. 11.




# விவேக போதினி

VIVEKA BODHINI

பொருளடக்கம்


| | |
|---|---|
| கீதா மஹான்கள் ... ... ... ... | 461 |
| விக்கிரஹ ரஹஸ்யம்.—6. சேஷசயனம் ... ... | 462 |
| ஸ்ரீமத் ராமானுஜாசாரியர் சரிதம் ... ... | 466 |
| ஆத்திச்சூடி விளக்கம்.—14. கண்டொன்று சொல்லேல் | 469 |
| பெற்றோர்களும் பிள்ளைகளும் ... ... | 472 |
| நியாயமாலை ... ... ... ... | 474 |
| உல்லாஸன் சரித்திரம். (தொடர்ச்சி) ... ... | 477 |
| கடற்கரை : ஓர் கதை ... ... ... | 482 |
| நாகானந்தம் ... ... ... ... | 485 |
| மாணவர் பக்கங்கள்.—வியாஸவிதானம்—லௌகிக ... குணங்கள்—மிதச்செலவு ... ... | 492 |
| சிறுவர்களுக்கான பக்கங்கள் ... ... ... | 495 |
| ஸ்திரீகளுக்கான பக்கங்கள் ... ... ... | 497 |
| விசேஷக் குறிப்புகள் ... ... ... | 501 |


காபிரைட்




இப்பத்திரிகைக்குரிய விஷயங்களை அனுமதியின்றி ஒருவரும் பிரசுரிக்கக்கூடாது.

# நமது சந்தா நேயர்களுக்கு

இப்பவும் ஜூன்மாதத்து சஞ்சிகையுடன் நமது பத்திரிகையின் நான்காவது வருஷம், சர்வேசுவரன் கிருபையால் பூர்ணமாகிறது. தொடங்கிய மூன்று வருஷங்களில் நமது நண்பர்கள், சந்தாதாரர்கள், கனவான்கள், கல்வியிலாகா அதிகாரிகள், விஷயதானம் செய்வோர் முதலியோர்களின் கூட்டுறவே, நான்காவது வருஷம் இனிது பூர்ணமாவதற்கு உற்ற ஸாதனமாகும். இப்படி இவ்வருஷங்களை இனிது முடியுமாறு உடனின்று உதவிய விஷயதானம் செய்வோர் முதலியவர்களுக்கு நாம் நன்றியறிதலுள்ளவர்களா யிருக்கிறோம்.

பத்திரிகை படிக்கும் பல வகுப்பினர்க்கும் உபயோகமாமாறு அவரவர்களின் ஸந்தோஷத்திற்கும் பிரியத்திற்கும் தக்கபடி கடந்த வருஷங்களைக் காட்டிலும் இவ்வருஷத்தில் அவ்வக்காலங்களில் விஷயங்களை ஒருவித ஒழுங்குபட வகுத்தும், அநேகம் விஷயங்கள் சேர்த்தும் பிரசுரித்து வந்தது நமது பத்திரிகாபிமானிகளுக்கு சொல்லாமே விளங்கும்.

ஹைஸ்கூல் பள்ளிக்கூடப் பிள்ளைகளும், எலிமெண்டரி பள்ளிக்கூட உபாத்தியாயர்களும் வாசித்து இன்புற்றுப் பயனடையுமாறு, இந்த நான்காம் தொகுதியில் வியாஸ விதானம் என்ற ஓர் வகுப்பு எழுத ஏற்பாடு செய்து பலராலும் ஸந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேற்படி பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு உபகாரார்த்தமாகவே மொழி பெயர்ப்பு விளக்கமொன்றும் நூதனமாகச் சேர்க்கப்பட்ருக்கிறது. பெரியோர் சரித்திரங்கள், இயற்கை அற்புதங்கள், நமது நோன்புகள், ஜீவவர்க்க விசாரம், சுகாதாரம் விவஸாயம் முதலியவற்றையே பிரதான அங்கங்களாகக் கொண்டு வெளிப்படுத்தும் நோக்கங்கொண்டு செய்யும் கார்யம் நமது விஷயதானம் செய்வோரின் ஒற்றுமையினால் இதுவரையில் ஒருவாறு முற்றுப்பெற்று வந்துகொண்டிருக்கிறது. தமிழ் உலகத்திற்கு பிரயோஜனம் தரத்தக்க கைத்தொழில் நாடகங்கள் இடையிடையே பிரசுரித்துத் தமிழ் வசன நூல்களின் பெருக்கத்திற்காக வேண்டிய ஏற்பாடுகளும் செய்துகொண்டு வருகிறோம். தற்காலத்து யூனிவர்ஸிடியாரின் நோக்கங்களை அனுஸரித்துத் தமிழ் எளிய வசன நடையையே தழுவியிருக்கிறோமாயினும், இடைஇடையே தமிழ்ப்பாஷையின் அருமையான ஆராய்ச்சிகளுக்கும் இடங்கொடுத்து வருவதையும் அநேக நேயர்கள் விரும்பிப்போற்றுகிறார்கள். சென்ற சிலகாலமாக நமக்குச் சந்தாதாரர்களாலும் நண்பர்களாலும் கிடைத்த ஆதரவின்பேரில் பத்திரிகை ஆரம்பமான முதல்வருஷக் கடைசியில் சொன்னபடி இதுவரையில் பிரசுரித்த 40-பக்கங்களுடனும் அநேக சித்திரப்படங்களுடனும் பிரசுரித்து வருகிறோம். எவ்வளவுக் கெவ்வளவு இன்னும் சந்தாதாரர்களின் ஒற்றுமை அதிகமாகிறதோ பொதுஜன ஊக்கத்தினால் எவ்வளவுக் கெவ்வளவு நாம் தூண்டப்படுகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு எம்மாலியன்றமட்டும் பத்திரிகையின் பக்கங்களை விருத்தி செய்து நமது 'விவேக போதினி'யைத் தமிழ்ப் பத்திரிகைகளில் முதன்மையாக விளங்கச் செய்யவேண்டுமென்பதே எமது கோரிக்கை. விஷயதானம் செய்யும் உத்தம நண்பர்கள் தம்முடைய ஸஹாயத்தால் விசேஷமான உதவிகள் செய்கிறதாக வாக்குதத்தம் செய்கிறமையாலும் இது வரையில் அபிமானித்த சந்தாதார்களும், நண்பர்களும், கைவிடாது, நம் பத்திரிகையை முன்னுக்குக் கொண்டு வருவார்களென்ற முழுநம்பிக்கை நமக்கிருக்கும் தைர்யத்தாலும் ஊக்கத்தோடு இதனை எம்பெருமான் அனுக்ரஹத்தினால் மேலும் மேலும் முன்னுக்குக் கொண்டுவா வேண்டுமென்னும் எண்ணங்கொண்டிருக்கிறோம். நாம் கைக்கொண்டிருக்கும் அரும்பெரும் கார்யமாகிய பத்திரிகை நடாத்தும் இத்தொழிலை யாதொரு விக்கினமுமில்லாமல் அப்போதப்போது நடாத்தி தோன்றாத்துணையாய் நின்று உதவியருளும் ஸ்ரீ நடராஜப்பெருமானை எம்மனம் மொழிமெய்களாற் றொழுகுகின்றனம்.

"போதினி"யின் ஐந்தாவது தொகுதி ஜூலைமாதம் ஆரம்பிப்பதால், சந்தாநேயர்கள் தயவு செய்து அவரவர்கள் சந்தாவை தாமதமன்னியில் அனுப்பக் கோருகிறோம்.

சந்தாத்தொகையை அனுப்பாத நேயர்களுக்கு, ஜூலை மாத பத்ரிகையை வி. பீ- மூலமாய் அனுப்புவோம். அதைத் தயவுசெய்து அங்கீகரித்து "போதினி"யை எப்பவும் ஆதரிக்கக்கோருகிறோம். பத்ரிகை வேண்டாதவர்கள், நம்மை வீண்செலவுக்கும் கஷ்டத்துக்கும் உட்படுத்தாது முன்னாடியே தெரிவித்தல் ஓர் பேருபகாரமே. சந்தாதாரர்களுக்கு எங்கள் தமிழ்ப் பதிப்புகள் அநேகம் குறைந்த விலைக்குக் கொடுக்கப்படுவதையும், நம் சந்தாநேயர்கள் அறியவும்.

விவேகபோதினி ஆபீஸ்,
மயிலாப்பூர். 1-5-1912

மானேஜர்

495


# THE "VIVEKA BODHINI"

**An Illustrated Popular Tamil Monthly : Has a large list of able contributors**

**(Started in 1908—Annual Subscription including Postage Rs 3)**

MAINLY DEVOTED TO

**Education, Science, Philosophy, Morality, Literature and Art, History, Biography and Fiction, Agriculture, Industry, Commerce & Economics.**

**THE ONLY JOURNAL OF ITS KIND IN INDIA.**

*Accuracy and originality form its speciality : Articles penned by the best of intellects.*

**Vol. IV** **MAY 1912** **No. 11**


## CONTENTS


| | Page |
|---|---|
| The Great Men of the Gita ... | 461 |
| The Inner Meanings of Images—6. Seshasayanam ... | 462 |
| Life of Sri Ramanuja ... | 466 |
| Moral Sayings explained ... | 469 |
| Parents and their Children : by M. R.-Ry. V. Radhakrishnan ... | 472 |
| Popular Maxims explained ... | 474 |
| Adventures of Ulysses : by M. R. Ry. K. Venkatarama Aiyar Avl., B.A. ... | 477 |
| On the Bench : A Reverie : by a Dreamer ... | 482 |
| Naganandam : A Classical Drama : by M. R. Ry. V. Seshagiri Sastri Avl., B.A. ... | 485 |
| Students' Pages : Essay writing : Reflective Essays : Worldly qualities—Thrift ... | 492 |
| Children's Pages ... | 495 |
| Ladies' Pages ... | 497 |
| Interesting News ... | 501 |


*All literary contributions, books, &c., for review, should be addressed to the Editor,* and all communications and remittances to the Manager, the "Viveka Bodhini," Mylapore, Madras.

496




புதிய கம்பெனி !!     புதுச்சரக்குகள் !!     புது ஏற்பாடு !!

பழைய ஸ்டாக்கு கிடையாது.

திருப்தியில்லாத சாமான்களை, திருப்பிப் பெற்றுக்கொள்ளப்படும்.

## குழந்தைகள் !

குழந்தைகள் விளையாடக்கூடிய பித்தளை வெங்கலத்தால் செய்த செம்பு, குடம், கரண்டி முதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும், நேர்த்தியும், நைசும், பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறு செட்டு 1-க்கு ... ரூபா 2 0 0. பெரிய செட்டு 1-க்கு ... ரூபா 4 0 0

## உருத்திராக்ஷங்கள் !!     பரிசுத்தமானது.     ஜபமாலைகள் !!

108 உள்ள மாலை 1-க்கு 6 அணு முதல் ரூபா 12 வரை. விலை அதிகப்படுவது போல் மணிகள் சிறிதாக இருக்கும். 6 முகக்கண்டிகள் 33 உள்ளது. கண்டி 1-க்கு ரூபா 1 முதல் 10 வரை. 5 முகக்கண்டி 32 உள்ளது. கண்டி 1-க்கு அணு 10 முதல் ரூபா 10 வரை. விலை அதிகப்படுவது போல் மணிகள் பெரிதாக இருக்கும்

## வெண்பட்டு வேஷ்டிகள்.

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | முழம் | 2½ | அகலம் | 1-க்கு ரூ | 6-முதல் | 8-வரை | 7 | முழம் | 3 | அகலம் | 1-க்கு ரூ | 10-முதல் | 13-வரை |
| 5 | ,, | 3 | ,, | ,, ,, | 7 ,, | 9 ,, | 8 | ,, | 3 | ,, | ,, ,, | 12 ,, | 15 ,, |
| 6 | ,, | 2½ | ,, | ,, ,, | 8 ,, | 9 ,, | 9 | ,, | 3 | ,, | ,, ,, | 14 ,, | 16 ,, |
| 6 | ,, | 3 | ,, | ,, ,, | 9 ,, | 12 ,, | 10 | ,, | 3 | ,, | ,, ,, | 15 ,, | 18 ,, |

## காசி பட்டுப் பீதாம்பரங்கள்

பட்டுப் பீதாம்பரங்கள் சகல தினுசுகளும் விலை சரசமாக அனுப்பப்படும். ஜாப்தா இனும். உடனே எழுதவும்.

விலாசம்: மானேஜர்.—பட்டுப் பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி.

---

✓ பார்த்தவுடன் சந்தோஷத்தையும், கேட்டவுடன் ஆனந்தத்தையும்,

வாசித்தவுடன் மனோஉற்சாகத்தையும்,

முடித்தவுடன் வியப்பையும் கொடுக்கும் நாவல்கள் எவை?

## “இராஜாம்பாள்” “சந்திரகாந்தா” “மோஹனசுந்தரம்”

என்னும் நாவல்கள்தான்.

இவைகளைப்போல் தமிழ்ப் பாஷையில் வேறு நாவல்கள் இதுவரையில் பிரசுரமானதில்லையென்பது இதை வாசித்த ஒவ்வொருவருடைய அபிப்பிராயம். இந்த மூன்று நாவல்களில் ஏதையாவது ஒன்றைத் தாங்கள் வாசித்தால் மற்ற இரண்டையும் அவஸ்யம் வாங்குவீர்களென்பது நிச்சயம். இந்த நாவல் ஒவ்வொன்றிலும் கண்டோர் மனதைக் கவரும் மூன்று சித்திரப்படங்கள் வளவளப்பான கடிதத்தில் அச்சடித்துச் சேர்க்கப்பட்டிருக்கிறது. இவைகளைப் புகழ்ந்து எழுதியிருக்கும் கடிதங்கள் நம்மிடம் ஆயிரக்கணக்காயிருக்கின்றன இந்த அபூர்வமாகிய நாவல் ஒவ்வொன்றின் விலை அணு 12. போஸ்டேஜ் வி. பி. கமிஷன் பிரத்தியேகம்.

## ✓ கிருஷிகன்

மாதந்தோறும் பிரசுரமாகும் ஓர் விவசாயப்பத்திரிகை. ஷை பத்திரிகையானது விவசாயத்தில் அனுபோகமும் பாண்டித்தியமுமுள்ளவர்களால் எழுதப்பட்டு வருகிறது. ஒவ்வொருவரும் வாங்கி வாசித்து நமது தேசத்து விவசாயம் விருத்தியடையவேண்டும் என்னும் எண்ணத்துடன் காகிதக்கிரயமும் அச்சுக்கூலியும் தபால் செலவும் மாத்திரம் கிடைக்கும்படிக்காக வருஷத்திற்குத் தபால்கூலி உட்பட அணு 12 என்று குறைந்த சந்தா வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு வருஷத்திற்குக் குறைந்தசந்தா அங்கீகரிக்கப்படமாட்டாது. ஒவ்வொரு வருஷமும் சித்திரைமீ முதல் ஆரம்பமாகிறது. கடந்த சஞ்சிகைகளைக் கூடுமானவரையில் சப்ளை செய்யப்படும்.

---

ரங்கராஜு அண்ட் பிரதர்ஸ், 5. மௌண்ட் ரோட், சென்னை.



க்ஷீராப்தி நாதர்



சேஷ சயனம்.

# விவேக போதினி

“எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.”——திருவள்ளுவர்

தொகுதி IV } பரீதாபி௵ சித்திரை : 1912-௵ மேமீ { பகுதி 11


## கீதா மஹான்கள்

### THE GREAT MEN OF THE GITA

**9. ஆத்மஞானி (அத். 7. சுலோ. 16—19:3)**

நான்கு வகையான நல்லோர்கள் என்னைப் பற்றுகின்றனர். அவர்கள், துக்கத்தில் மொத்துண்டவர்கள், உண்மையை உணர விரும்புபவர்கள், பொருள் விரும்புவோர், ஞானி, ஆகிய இவர்களே. இவர்களுள் ஒன்றிலேயே மாறுப் பற்றுடன் ஒருமைப்பட்டு நிற்கும் ஞானியே சிறந்தவன். ஞானிக்கு என்னிடத்திலும் எனக்கு ஞானியிடத்தில் மிகுந்த விருப்பம் உண்டு. எல்லோரும் பெருந்தன்மை உடையவர்களாயினும், மனம் நிலைபெற்று என்னையே பரமபதமாக அடையும் ஞானியே ஆத்மா என்று யான் மதிக்கிறேன். பல பிறவிகளின் முடிவில் ஞானி ‘எல்லாம் வாஸுதேவன்’ என்று அனுபவித்து என்னை அடைவான். இந்த மஹாத்மா கிடைப்பதரிது. ஆயிரம்பெயர்களுள் ஒருவன்தான் ஸித்தி பெற முயல்கின்றான். இம்மாதிரி முயன்றுஸித்தி பெற்றவர்கள் அநேகருள் ஒருவன்தான் என்னை உள்ளபடி உணர்வன்.

**10. ப்ரமநிஷ்டன் (அத். 9. சுலோ. 13-15)**

மஹான்கள் தெய்வ ஸம்பத்தாகிய ஸத்வ குணத்தைப் பின்பற்றி வேறொன்றிலும் மனம் செல்லாது என்னை அழிவில்லா ஆதிகாரணமாக உணர்ந்து வழிபடுகிறார்கள். என்னைப்பற்றியே இடைவிடாது பேசிக்கொண்டு, விடாமுயற்சி; திருடவிருதம், ஆகிய இவைகளுடன் என்னிடம் நிலைபெற்று என்னைப் பக்தியாக வணங்குகின்றனர். இவர்களுள் சிலர் என்னை ஞானமாகிய யக்ஞத்தால் வழிபட்டு, எங்கும் நோக்குபவனாகி, ஒன்றாயும் பலவாயும் நிற்பதாக மதித்து வணங்குகின்றனர்.

**11. ஸத்குண ஸம்பூர்ணன்**
**(அத் 13. சுலோ. 7—11. அத் 16: சுலோ. 1—3)**

பணிவு, அடக்கம், குற்றமின்மை, பொறுமை, நேர்மை, ஸத்குருஸேவை, பரிசுத்தம், உறுதி, மனமடக்கல், விஷயப்பற்றின்மை, அகங்காரமின்மை, பிறப்பு இறப்பு மூப்ப பிணி துக்கம் இவைகளில் தோஷதிருஷ்டி, பற்றின்மை, ஈஷணாத்ரயமின்மை(மண் பெண்பொன் ஆகிய இவைகளில் பற்றில்லாதிருத்தல்). விருப்பு வெறுப்பு உண்டாக்கக் கூடியவைகள் வந்த விடத்தும் ஒரே தன்மையுடனிருத்தல், என்னிடம் மாறு பக்தி, தனித்திருக்க விரும்புவது, பாமரர் சேர்க்கை விரும்பாமை, ஆத்மஞானத்தில் நிலைபெறுதல், உண்மை ஞானத்தின் முடிவை உணர்தல், நிர்பயம், மனத்தூய்மை, ஞானத்திலும் யோகத்திலும் நிலைபெறுதல், கொடை, மனஅடக்கம், ஆராதித்தல், தன் வேதம் ஓதுதல், தவம், நேர்மை, அஹிம்ஸை, ஸத்யம், கோபம் அடக்குதல், துறவு, சாந்தம், புறஞ்சொல்லாமை, ஜீவகாருண்யம், பிறர்பொருள் விரும்பாமை, மனக்கனிவு, முன்வாராமை, சஞ்சலமின்மை, தேஜஸ், கோபமின்மை, மனோதைர்யம் பரிசுத்தம், வெறுப்பின்மை, கர்வமின்மை ஆகிய இவைகள் நிறைந்தவனே ஸத்குணபரிபூர்ணன்.

இப்பதினொருவிதமாக மஹானை கீதையில் வர்ணித்திருக்கின்றன. அத்யாய முறைமைப்படி அவைகளைக்கூறப்புகுவோம். (1) ஸிதிதப்ரஞ்ஞன், (2) க்ருதக்ருத்யன், (3) ப்ருஹ்மஞானி, (4) ஸந்யாஸி, (5) ஸமதர்சி, (6) யோகி, (7) ஆத்மஞானி, (8) ப்ருஹ்மநிஷ்டன், (9) பவத்பக்தன், (10) ஸத்குண பூர்ணன் (11) திரிகுணாதீதன் ஆகிய ஸம்லக்ஷணங்கள் இவர்கள் முறையே 2, 3, 4, 5, 5, 6, 7, 9, 12, (13 : 16), 14 ஆகிய அத்யாயங்களில் அமைந்து கிடக்கின்றன. இவர்கள் ஸம்பந்தமான விஷயத்தைப் பின்னர் ஆராய்வோம்.

# விவேக போதினி

தொ 4] பரிதாபி௵ சித்திரை௴ [பகுதி 11


## விக்ரஹ ரஹஸ்யம்

## THE INNER MEANING OF IMAGES

### 6. சேஷசயனம்

இந்த விக்ரஹம் ஒரு திவ்ய புருஷன் சங்கு சக்ர கதாபத்ம முதலிய திவ்ய ஆயுதங்களையும் ஆபரணங்களையும் அணிந்து ஐந்துதலைப் பாம்பின் தேஹத்தில் படுத்துக்கொண்டு ஒருவிதநித்திரையிலிருப்பதாகவும், பாம்பு படமெடுத்துக் கொடை பிடிப்பதாகவும், கால்மாட்டில் மஹாலக்ஷ்மி என்ற தனது அம்பிகை உட்கார்ந்திருப்பதாகவும் அமைந்துள்ளது. இது மஹா விஷ்ணுவின் விக்ரஹங்களுள் மிகச் சிறந்தது. இதில் ஸ்ருஷ்டி ரஹஸ்யங்களும் அதற்கு அப்பாற்பட்ட அரிய பெரிய விஷயங்களும் அடங்கியுள்ளன. இங்கு சயனித்திருக்கும் புருஷன் பரம்பொருளாகிய கடவுள். இவர் தூங்கும் தூக்கம் ஸாதாரணமாக நாம் தூங்கும் அக்ஞானத்தூக்கம் அல்ல. இது தோன்றவே இதற்கு யோக நித்ரை என்று பெயர் இடப்பட்டிருக்கிறது. இதை அறிதுயில் என்று தமிழில் கூறலாம். படுத்துவிட்டால் திக்கு திசை விவரம் பின்னர் ஒன்றும் இல்லாததால், இங்கு படுத்திருப்பது நகசிக பரியந்த எங்கும் பேதா பேதமின்றிப்பரம்பொருள் கலந்திருப்பதையும், உறங்குவது மேல் கீழ் பக்கங்கள் எல்லாம் நிறைந்து ஏக ரூபமாகப்பரம்பொருள் பூரணமாகவிருப்பதையும் உணர்த்தும்.

கணேசர் முதலிய விக்ரஹங்களது ஆயுதங்களுள் அடங்கியிருக்கும் உட்கருத்துப்போலவே இங்குள்ள ஆபரணம் முதலியவைகளுக்கும் உட்பொருள்கள் உண்டு. இவர் ஆபரணங்கள் யாவை? மாரில் கௌஸ்துபமணி, நெற்றியில் ஸ்ரீவத்ஸம் வன்றமரு, பாஞ்சஜன்யம் என்ற சங்கு, சாரங்கம் என்ற வில், ஸுதர்சனம் என்ற சக்ரம், வைஜயந்தி என்ற கண்டமணி, அச்யுதம் என்ற கத்தி, நந்தகம் என்ற கதை ஆகிய இவைகளேய

கௌஸ்துபமணி ப்ரபஞ்சத்துள் ஆடும் பரம்ஜியோதியாகிய அந்தராத்மாவையும், நெற்றியிலுள்ள ஸ்ரீவத்ஸம், ஸகலத்திற்கும் ஆதாரமாகிய ப்ரதானம் என்ற தத்வத்தையும், கதை என்பது, ஓயா சஞ்சலம் நிறைந்த உலக வாழ்வாம் பெரும்போரில்நம்மைத்தாக்கும் ஸுகதுக்க ரூபமான அம்புகளைத் தடுக்கும் புத்தியையும், சங்கம், ப்ரபஞ்சம் சப்தத்திலிருந்து வெளிப்பட்டது என்பதையும், வில் ப்ரபஞ்ச விஷயங்களை உணரும்இந்திரியாதிகளையும், சக்ரம் ஸதாஓயாது சலித்துக்கொண்டு தொன்றுதொட்டிருக்கும் மனத்தையும், முத்து கெம்பு, பச்சை, வயிரம், வயிடூர்யம் ஆகிய பஞ்சரத்னத்தாலாகிய வைஜயந்திமணி பாஞ்சபூதிகமான ப்ரபஞ்சத்தையும், உணர்த்தும். அறிவு தொழில் ஆகிய இவை இந்திரியங்களாகிய வில்லிலிருந்து வெளிப்படும் பாணங்கள். இம்மாதிரி கிளம்பி க்ஷணே க்ஷணே மாறிக்கொண்டிருக்கும் இவைகளை அரிந்து பறக்கடிக்கக்கூடிய கத்தி, அச்யுதம் என்பதே. ப்ரபஞ்ச வ்யாபாரத்தின் மூலமான மாயை பகவானிடமே அடங்கியுள்ளது. அவர்சங்கத்தால் தான் ஸ்ருஷ்டி கர்த்தா என்பதைக்குறிக்கிறார். இந்த ப்ரபஞ்சமாகி அசுவத்த விருக்ஷத்திற்கு, வேதங்களே இலைகள். இவைகள் இலைகளைப்போல நிழல் தருவதால் இவைகளுக்கு இப்பெயரிடப்பட்டன. புத்தியே பெருங்கிளைகள், அகங்காரம், பஞ்சபூதங்கள், இந்திரிய ஸ்தானங்கள் ஆகிய இவைகளே சிறுகிளைகள், இந்திரியங்கள் பொந்துகள், பாப புண்ணியங்கள் புஷ்பங்கள், ஸுகதுக்கங்களே பழங்கள். இதை நன்றாக வெட்டி எறிய சக்தி யுடையது அச்யுத மென்ற கத்தி. இது அஞ்ஞானம் என்ற உறையால் மூடப்பட்டிருக்கிறது. ஆதலால் நாம்மரத்தைச் சுற்றிச்சுற்றி வருகிறோம். வில்லாகிய அகங்காரம் பாணங்களாகிய உலகவ்யாபாரம், அக்ஞானமாகிய கத்தியுறை இவைகளால் ப்ரபஞ்சம் தத்தளித்து வருவதெல்லாம் இக்கடவுள் லீலையே.

இக்கடவுள் கால்மாட்டில் உட்கார்ந்திருக்கும் லக்ஷ்மி உலக ஆடம்பர ஸுகநிலயம் ஆகிய கடவுளது விபூதி ஆதலால் இவளை ஸம்ஸார ஆடம்பரமென்றும், ஜகஜ்ஜாலவைபவம் என்றும் புராணங்கள்கூறுகின்றன. இவள் கடவுளின் கால் அதாவது ஏகதேசம் ஒதுங்கிய பாகத்தில் ஒட்டியிருப்பவள். இந்தபாதம் அவித்யாபதம் என்னப்

படும். இவளால்தான் மாயாமயஜகத் உண்டாகி நிலைபெற்றுத்தோற்றுவது.

இவ்வாறு எல்லாவற்றையும் அடக்கி உலகமாகிய லீலை ஸரிவர நடந்தேறி ஜீவராசிகள் உய்யும் வண்ணம் தூங்கும் பிரான் ஐந்துதலை நாகத்தின்மேல் அமர்ந்திருக்கிறார். பாம்பு விஷஜந்து. மிகக் கோபமுடையது, எல்லாத் தோற்றமும் ஒடுங்குங்கால் அவை தாமத குணத்தில் அடங்க அதுவே மேலிட்டிருக்கும். இதை அடங்கி தாமதகுணம் மேலிட்ட அசித்தை ஸர்ப்பம் உணர்த்துகிறது. இது பகவானுக்குக் கீழ்ப்படிந்து அடங்கிக்கிடக்கும், ஆதலால் அவர் படுக்கையாக அமைக்கப்பட்டுள்ளது. இந்தப்பாம்பு அலையில்லாப் பாற்கடலில் அமைந்துள்ளது. பால் எவ்வாறு ப்ராணிகளை வளரச்செய்யும் திறனுடையதோ அதுபோல, மாயையாகிய லக்ஷ்மி, அசித்தாகியப்ருகிருதிஎன்றபாம்பு எல்லாம் பகவானுள் அடங்கியிருக்கும் நிலையே இந்தப் பாலாகிய கடல். இது அலையற்ற திரவமாகிய பாலாகவிருப்பது ஒருவித மாறுபாடின்றிச் சூன்யம்போலிருந்து மேல் ப்ரபஞ்ச ஒழுங்கிற்குக் காரணமாக விருப்பதை உணர்த்தும். ஆகவே சேதனம் அசேதனம் ஆகி நானுவாகக்காணப்படும் எல்லாம் ஒடுங்கி ஒவ்வொன்றும் பரம்பொருளாகிய கடவுளுக்கு ஒவ்வொரு ஸாதனமாக அவருள் அடங்கி நிற்கும் என்பது இதிலிருந்து வெளிவரும். ப்ரபஞ்சம் எல்லாம் பரம்பொருளிலிருந்து வெளியாகி அவரிடம் நிலைபெற்று முடிவில் அவரிடமே ஒடுங்கும் என்பதை இந்தச்சேஷசயனவிக்ரஹம் நன்கு உணர்த்தும். ஆதலால் ‘கடுகைத் துளைத்து எழ்கடலைப் புகட்டிக் குருகத் தரித்த குறள்’ என்று கூறியபடி இந்த அற்புத விக்ரஹத்தில் ப்ரபஞ்ச விஷயம், அதிலிருந்து ஜீவராசிகள் விடுபடுவதற்கு வேண்டிய ஸாதனங்கள், அப்பொழுது ப்ரபஞ்ச விஷயங்களைக் கருதவேண்டிய விதம் எல்லாவற்றையும் அடக்கியுள்ளார் நம்முன்னோர்.

இம்மாதிரியாகப் பரம்பொருள் நிலைக்கு ஈடுபட்டே புராணவிஷயங்களுடன் பொருத்தி சீர்காழி அருணாசலக் கவிராயர் ஸ்ரீரங்கம் சேஷசயனப் பெருமானைத் துதித்திருக்கிறார்;—

தரு-மோஹனராகம்-ஆதிதாளம்

பல்லவி

ஏன்பள்ளி கொண்டீர் அய்யா
ஸ்ரீரங்கநாதரே நீர்
ஏன் பள்ளிகொண்டீர் அய்யா.

அநுபல்லவி

ஆம்பல் பூத்தசய பருவதமடுவிலே
அவதரித்து இரண்டாற்று நடுவிலே (ஏன்)

சரணங்கள்

கோசிகன் சொல் குறித்ததற்கோ
அரக்கி குலையில் அம்பு தெரித்ததற்கோ
ஈசன் வில்லை முறித்ததற்கோ
பாசுராமன் உரம்பரித்ததற்கோ
மாசிலாத மிதிலேசன் பெண்ணுடன்
வழி நடந்த இளைப்போ
தூசிலாத குகன் ஓடத்திலே கங்கைத்
துறைகடந்த இளைப்போ.
மீசரமாம் சித்ரகூட சிகரக்கல்
மிசைகடந்த இளைப்போ.
காசினிமேல் மாரீசன் ஓடிய
கதிதொடர்ந்த இளைப்போ—ஓடிக்
களைத்தோ தேவியைத் தேடி
இளைத்தோ மாங்கள் ஏழும்
தொளைத்தோ கடலைக்கட்டி
வளைத்தோ இலங்கை என்னும்
காவல்மா நகரை
இடித்த வருத்தமோ
ராவணாதிகளை
அடித்த வருத்தமோ (ஏன்பள்ளி)

மதுரையிலே வருங்களையோ முதலை
வாய்மகளைத் தரும் களையோ
எதிர் எருதைப் பொருகளையோ கன்றை
எடுத்தெறிந்த பெருங்களையோ
புதுவை ஆனமுலையுண்டு பேயின் உயிர்
போக்கி அலுத்தீரோ!
அதிர ஓடிவருங் குருவி வாயை யிரண்டாக்கி அலுத்தீரோ.
துதிசெய் காலினல் காளிங்கன் மணிமுடி
தாக்கி அலுத்தீரோ—மருதம்
சாய்த்தோ ஆடு மாடுகள்
மேய்த்தோ சகடுருளை
தேய்த்தோ கஞ்சன் உயிரை
மாய்த்தோ அர்ச்சுனனுக்காச்
சாரதி யாய்த்தேர்
விடுத்த வருத்தமோ
போரிலே சக்கரம்
எடுத்த வருத்தமோ. (ஏன் பள்ளி)

இனி! சேஷசயன விக்கிரஹத்தின் ஞானபரமான உட்பொருளை எடுத்துரைக்கப்புகுவோம்,

சயனித்திருக்கும் புருஷன் அவன் ஆபரணங்கள் முதலியன பாதத்திலிருக்கும்லக்ஷ்மி ஆகியஇவைகள் எல்லாம், இப்பொருளுக்கும் பொருத்தமே. இவைகளால் ஆசார்யரூபமான அந்த விக்கிரஹம் தன்னிலை நன்கு முமுக்ஷுவுக்குணர்த்தி, பிரபஞ்சவிஷயங்கள் தனக்கு லீலாமாத்ரம், எல்லாம் அஹங்காரமாகிய அம்மைப் பொருத்து, சக்ரமாகிய ஓயாச் சலமுள்ள மனத்தால் வளருவது, இதுவும் இதன் காரியங்களும் புத்தி என்னும் கதை, அச்யுதம் என்னும் கத்தி ஆகிய இவைகளால் தடுக்கப்பட்டு அறக்களையப்பட்டால் தன் உண்மைநிலையாகிய பரமநிலையை அடையலாம். அப்பொழுது மாயை ஒதுங்கி விடுவாள்' என்று உபதேசிக்கிறது.

சேஷன், பாற்கடல் ஆகிய இவைகளில் தான் பெரிய மாறுபாடு ஞானபரமான உட்பொருளில் காணப்படுகிறது. இம்மாதிரி மாயை ஒதுங்கி சாந்தமாக நிற்கும் நிலை எங்கு ஏற்படும்? என்று சங்கிக்கும் முமுக்ஷுவுக்குத் தகுந்த விடை இவ்விரண்டும் நன்றாகக் கொடுக்கும்.

முதலில்பாற்கடலின் விஷயம்எடுத்துக்கொள்ளுவோம். இதன் உண்மைப்பொருள் பரம ஆசார்யனை அடுத்து அனுபவித்தறிந்தாலன்றி முற்றிலும் விளங்காது. ஆனால் பொத்தி வைக்கவேண்டும் என்ற ரஹஸ்யம் ஒன்றும் இல்லை. இவ்வாறு பொத்தி வைத்து ஒரு ஸங்கமும் மதவிஷயங்களில் ஏற்படுத்தலாகாது. ஆதலால் வாக்கிற்குளட்டியமட்டும் கூறிஇதன் விஷயத்தை ஒருவாறு அறிவிக்கப் புகுவோம். தியானம் செய்து வருங்கால் தேஹப்ரக்ஞை, மனப்ரக்ஞை, இதற்கப்பால் தோன்றும் சூன்யப்ரக்ஞை இவை எல்லாம் கழன்ற விடத்திலேயே இப்பாற்கடல் நன்கு விளங்கும். இங்கு கூறப்பட்டுள்ள சூன்யப்ரக்ஞையைத் தாண்டுவது மிகக் கஷ்டம். இங்கு காத்துக்கிடந்து காலத்தை எதிர்பார்த்து கிழும் நோக்காது பரபரப்புடன இருப்பதற்கு வேண்டிய தீரம், பொறுமை முதலியன மற்றைய எந்த விஷயத்திற்கு வேண்டியதில்லை. இவைகளுக்கே முமுக்ஷுத்வம் என்று பெயர். ஜகத் தோற்றமும் நீங்கி, இதை தாண்டினால் தான் பாற்கடல் அனுபவம் வெளிப்படும். சர்க்கரையின் தித்திப்பை எவ்வளவு வர்ணித்த போதிலும், அது இன்னபடி இருக்கும் என்று முற்றிலும் உணர்த்திவிட முடியுமா? தின்று பார்த்தாலன்றோ விளங்கும். இதுபோலப் பாற்கடல் அனுபவம் வருங்கால்தான் அதன் ஒப்புயர்வில்லாச் சிறப்பு நன்கு விளங்கும். அதை வேதவாக்கியங்களால் வர்ணிக்க புகுந்தால்:—

'இது இனிமையான சஞ்சலமற்ற அமிருதமயமான சாந்தம். இதில் வர்ணாச்ரம பேதம், வாழ்வு மரணம், பந்தமோக்ஷம், ரூபாரூபம், குணம், குறி, நாமரூபம் முதலிய துவந்தவபேதங்களில்லை. இந்தத்தெய்வீகமாயும்பூர்ணமாயும்உள்ள சாந்தம், ஸாவதானமாக எங்கும் பரவி நின்றும், அக்ஞான நிறைந்தவர்களிடமிருந்து ஒடி ஒளித்துத் தேடித்திரியும்படி லீலை புரிகின்றது. இதுதான் தேஜஸ் மாறு அருள்முதலியவைகள் ரூபமானசாந்தம்; மனக்குரங்குக்கு அப்பாற்பட்ட ஒளிரும் துரியநிலை;எல்லாவற்றிலும் உயர்ந்தது; சேர்க்கை, பிரிவு, பற்று, போக்கு, வரவு, முதலியன அற்றது; நெருங்கியுமிருப்பது,மிக விலகியுமிருப்பது, மலைபோல அசைவற்றது, மழுங்காதது, பஞ்ச பூதங்களுக்கு அப்பாற்பட்டது; அனுபவஞப்திக்கும் அப்பாற்பட்டது; ஒன்று இரண்டு என்று வகுத்துக் கூற முடியாதது;குழறும் வாக்கு அலையும் மனம் ஆகிய இவைகளுக்கு அப்பாற்பட்டது; இதுதான் பூர்ண நிரதிசய ஆனந்த ஸாகரம், இதைத்தான் பாற்கடல் என்று கூறவேண்டியது. கண்கொள்ளா காட்சியான இப்பாற்கடலைக் காண கடவுள் அருளும் குருக்ருபையும்தான் வேண்டும். இது பொய்வளரும் நெஞ்சினர் காணாத காட்சி; விஷய ஆவல், கொடுமை, பணத்தாசை, தன்னயம் கருதுவது ஆகிய துக்குணங்களுடையவரை விட்டு மிக விலகி நிற்பது, என்றுதான் கூறவேண்டும். இதைப்பற்றித் தான் ஒரு பெரியவர் 'இடித்துப் பார் கதவு திறக்கும், தேடிப்பார் உண்மை வெளியாகும்' என்று வற்புறுத்தியிருக்கிறார்.

இனி ஸர்ப்பரூபமான சேஷனைப்பற்றி விசாரிப்போம். 'காலைமுதல் மாலை வரையிலும் மாலை முதல் காலைவரையிலும் விடாது இப்பதினான்கு உலகம் பஞ்சபூதம் ஆகிய இவைகளை அடக்கி இவைகளூடு ப்ரகாசித்துக் கொண்டிருப்பதும், எல்லாம் மறையும்தூக்கத்திலும் தான்சேஷித்து நிற்பதுமாகிய ப்ரக்ஞையே நான், ஆத்மா என்னப்படுவது. இதுதான் சேஷன். இதன் உட்ப்ரகாசம் மஹா விஷ்ணு, இவர்தான் நாதன், பக்தி, ஸச்சிதானந்தம்,பலம்' இத்தகையசேஷனை பெரிய சர்ப்பமாக உருவகப்படுத்துவானேன் என்ற சங்கைபிறக்கும். பாம்புகளுள் நாகஸர்ப்பமே எல்லா

தேசங்களிலும் சிறந்தது என்று கொண்டாடப்படுகிறது. இதன் விரிந்த படம், நுட்பமான ஸங்கீதத்தில் ஈடுபடும் திறன், இதன் தலையிலுள்ள நாகரத்னம், பளப்புடன்கூடிய இதன் அழகியதேஹம், கண்ணாலேயே கேட்கும் திறன், தானாக ஒருவித கெடுதியும்செய்யாதிருத்தல் (வாழும் பாம்புகளைப் பார்க்க) மந்திரம் ஸத்பம் இவைகளுக்குக் கட்டுபடுவது, இது பழகியக்கால் கண்ணுக்கு மையிடுதல் முதலிய குணங்களை அடைவது, ஆகிய இவைகள் எல்லாம் ஒருங்கு சேர்ந்து இதன் சிறப்பிற்குக் காரணமாக விருக்கலாம். பாம்பு ஆராதனமில்லா நாடு அதிகமில்லை. ஸிதியர் என்ற ஜாதியார்கள் இதைக் கடவுளாக மதித்து வந்தனர். கடவுள் ஆபரணம் படுக்கை யாகிய சிறந்த ஸ்தானங்கள் இதற்கு ஸநாதன தர்மத்தில் ஏறப்பட்டு உள்ளன. ஆகவே இங்கு இந்தப் பாம்பு எங்கும் நிறைந்துள்ள ப்ரக்ஞையைக் குறிக்கிறது. இது உள்வெளி மேல் கீழ் பக்கம் எங்கும் நிறைந்துள்ளது. செடிகொடிகளில் இது உறங்கும் நிலையிலும், ஜந்துக்களில் கனவு நிலையிலும், மானிடரில் இது விழிப்பு நிலையிலும் உள்ளது. இம்மாதிரி அநேக நிலையிலிருக்கும் ப்ரக்ஞையையே இச்சேஷ ரூபமாகக் காட்டப்பட்டிருக்கிறது. இதன் மண்டலம், பருமன் முதலியன ப்ரக்ஞையின் அகண்டத்வம், ஸர்வாந்தர்யாமித்வம், அழிவற்ற சிறப்பு ஆகிய இவைகளை உணர்த்தும். நாமரூபம் அதாவது தேசகால நிமித்தம் ஆகிய இவைகளுக்கு அப்பாற்பட்ட ப்ரக்ஞையே இந்தக் சேஷன். சேஷன் என்ற பதத்திற்கு எல்லாம் போனபின்பும் மிகுந்திருப்பவன் என்று பொருள்.

ஆகவே இந்தச் சேஷசயன ரூபத்தால் ஞானியின் பாவத்தைச் சுருக்கிக்கூறுவோம். 'நாமரூபாதிகளுக்கு அப்பாற்பட்ட பரவெளியாகிய சாந்த நிலையில் ப்ரக்ஞாமாத்திரமாகச் சேவித்துநின்று பரம்பொருளே ஆகியிருக்கும் விக்ரஹரூபமான ஆசார்யன் தம் நிலையை அடைய ஆவலுடன் பாடுபடும் சிஷ்யனுக்குத் தமது ஆபரண ஆயுதங்கள் மூலமாக அகங்காரத்தை மாயத்தால் எல்லாம் ஒய்ந்து தம் நிலைக்கு வந்து நிலைபெறலாம் என்பதைச் சுருக்கி உபதேசிக்கிறார்' என்று கொண்டு ஞானி ஆனந்த பரவசனாவான்.

இந்தச் சேஷசயன விக்ரஹத்திற்கு ஸ்ரீரங்கநாதர் என்ற ஒரு பெயர் உண்டு. இவர் கோயில் காவிரிகொள்ளிடம் ஆகிய இருநதிகளுக்கு இடையில் உள்ள ஸ்ரீரங்கத்தில் அமைந்துள்ளது. இந்த அமைப்பு நம்முள் ஸங்கல்ப விகல்பமாகிய இரு ப்ரவாஹங்களுக்கு இடையில் அமைந்து உள்ளது பரமாத்மா என்பதை உணர்த்துகிறது. இந்த ரங்கநாதரை ஒரு பெரியவர் பின் வருமாறு துதித்து ஈடுபடுகிறார் என்பதாக ஒரு கதையில் வருகிறது. "ஒ பரம்பொருளே! நீர் அஞ்ஞானிகளுக்கு உறங்குபவராகவும், ஞானிகளுக்கும் பக்தர்களுக்கும் ஸதா விழித்துக்கொண்டிருப்பவராகவும் தென்படுகிறீர்! உம்முடைய மூச்சுக்காற்றால் வெகுதூரத்திலுள்ள நக்ஷத்ரரூபமான அண்டகோடிகளை அடக்கியாளுகிறீர்! உறக்கத்திலிருந்தும் ப்ரபஞ்சத்தை ஆளுகிறீர். மஹான்கள் பருகியும் திருப்தி பெறாப் பெருமை வாய்ந்த பாற்கடலே உமது இருப்பிடம், நீரே என்னுள்ளிருக்கும் அந்தர்யாமி! நீரே என் ஆத்மா,' என்று கூறி அவர் கோயில் எதிரே நின்றபடியே அசையாதிருந்து ஒருகணத்தில், கோபுரம், க்ருஹ நக்ஷத்ரங்கள் ஆகிய இவர்களுக்கு அப்பாற்பட்டு எதிரேயுள்ள ரங்கநாதர் போல தாமும் பாற்கடலில், ஆதிசேஷன் மேல் அவருடன் சற்று உறங்கி, "நானே நீ, நீயே நான்' என்று அபேதமாகக் கூறும்படியான நிலையில் அமர்ந்திருந்தார்" இதுவே இந்த ஸ்ரீரங்கநாதரை அறிந்து அனுபவிக்கும் விதம்.

ரங்கநாதர் என்ற பதத்திற்கு நாடகவிடத்திற்கு அதிபதி என்பது பொருள். நடராஜர்என்பதற்கும் இதே பொருள். மேலும் ஞானபரமாக இவ்விரண்டு விக்ரஹங்களுக்கும் பொருள் ஒன்றேஎன்பது இதற்குள் விளங்கியிருக்கும். இதனாலே சைவ வைஷ்ணவ சண்டை வீண்வார்த்தைச் சண்டையே ஒழிய விஷயச்சண்டையில்லை, என்பது வெளிப்படை. மேலும் சண்டையிடுவது மிக பாபஹேது என்று சிவவாக்கியர் பின்வருமாறு வற்புறுத்திக்கூறுகிறார்.—

தில்லைநாயகன் அவன், திருவரங்கனுமவன்,
எல்லையான புவனமும் ஏகமுத்தி யானவன்
பல்லுநாவு முள்ளபேர் பகுந்துகூறி மகிழுவார்
வல்லபங்கள் பேசுவார் வாய்புழுத்து மாய்வரே!

சைவ வைஷ்ணவ ஸமரஸ ஸம்பந்தமான விஷயங்களைப் பொதுவாகத் தகுதியான வேறிடத்தில் எடுத்து விஸ்தரிப்போம்.

## ஸ்ரீமத் ராமானுஜாசாரியர்
## LIFE OF SRI RAMANUJA

ஸ்ரீமத் ராமானுஜாசாரியர் சென்னப்பட்டணத்திற்குத் தென்மேற்கில் ஸுமார் 20 மைல் தூரத்திலிருக்கும் ஸ்ரீ பெரம்பூதூர் என்ற ஊரில் சற்றேறக்குறைய 900 வருஷங்களுக்கு முன் அவதரித்தார். இவரை ஆதிசேஷனது அவதாரமென்று இவர் சரிதங்கள் கூறும். இவர் தாய் தந்தையர்கள் பெயர், முறையே அஸுரி கேசவ பட்டர் என்பவைகளே. அக்காலத்தில் ஸ்ரீரங்கத்தில் மதாதிபதியாயிருந்த ஸ்ரீ ஆளவந்தார் என்பவருக்கு இவர் தாய் வழியில் நெருங்கின உறவு உடையவர். இவருக்குத் தம்பி முறையில் கோவிந்தப்பட்டர் என்றொருவர் இருந்தார். இவர்கள் இருவரும் காஞ்சிபுரம் சென்று யாதவப்ரகாசர் என்ற ஓர் அத்வைத ஆசாரியரிடம் கல்வி கற்றனர். ராமானுஜர் படித்து மேன்மேலும் விருத்தியடைந்து வரும் சிறப்பைக் கேள்வியுற்று கொள்பாட்டனாகிய ஸ்ரீ ஆளவந்தார் ஸ்ரீரங்கத்திலிருந்து நேரிட வந்து காஞ்சிபுரத்தில் தம்மைவெளிப்படுத்திக்கொள்ளாது ரஹஸ்யமாகவேயிருந்து ராமானுஜரது கல்வித் திறமையைக் கண்டு மகிழ்ந்து "இவரே நமக்குப்பின் மத அதிபதியாயிருக்கத் தகுந்தவர் என்று மதித்து, தாம் வந்தது ராமானுஜருக்குத் தெரிந்தால் எங்கே அவர் கல்விக்கு இடையூறு நேரிடுமோ என்று அஞ்சி வந்தபடியே ரஹஸ்யமாக ஸ்ரீரங்கம் போய்ச்சேர்ந்தார்.

இவ்வாறு கல்விகற்று வரும் நாளில் சிற்சில விடங்களில் யாதவப்ரகாசர் எடுத்துக் கூறிய பொருள்கள் இவர் மனத்திற்குப் பொருந்தாதவை எனத் தோன்ற அவைகளின் பொருளைத் தாமே எடுத்து விஸ்தரிக்கலாயினர் இவர் கூறியது அங்கிருந்த சிஷ்யர்களுக்குப் பொருத்தமாகப்பட குருவுக்கும் சிஷ்யனுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது. மேலும் அங்கிருந்த அரசன் பெண்ணை ஓர் பேய் பிடித்து ஆட்ட அது யாதவ ப்ரகாசர் என்ன சொல்லியும் போகாது ராமானுஜரது உத்தரவின் பேரில் அப்பெண்ணை விட்டு ஓடிப்போய் விட்டது. இதனால் முன்னிருந்த மனஸ்தாபம் அதிகரிக்க இதன் பின்னர் ஏற்பட்ட அபிப்பிராய பேதத்தைச் சாக்கிட்டுக் கொண்டு ராமானுஜரை யாதவப்ரகாசர் தம் சிஷ்யக்கூட்டங்களிலிருந்து நீக்கிவிட்டார். இது போதாதென்று, சிஷ்யரைக் கொல்வதற்காகக் குரு ஓர் காசியாத்திரை யென்ற வியாஜத்தைக்கொண்டு ராமானுஜர், கோவிந்தபட்டர் முதலியோரையும் கூட அழைத்துக்கொண்டு புறப்பட்டார். கொஞ்சதூரம் போவதற்குள் தம்மைக் கொல்ல செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகள் ராமானுஜருக்குத் தமது தம்பி மூலமாக வெளிவர நடு இரவில் ராமானுஜர் தப்பித்துக்கொண்டு விடியும் முன் காஞ்சிபுரம் வந்து சேர்ந்தார்.

இங்கு வந்ததும் தாயாரின் வேண்டுகோளின்படி கிரஹஸ்தாசிரமத்தில் அமர்ந்து கஞ்சி வரதப்பருக்குத் தொண்டுகள் செய்து காலங்கழிக்கத் தொடங்கினர். இங்கு இப்படியிருக்க ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ ஆளவந்தார் தமது காலம் சீக்கிரம் முடிந்துவிடும் என்று மதித்து தமது சிஷ்யர்களுள் பெரியவரான பெரிய நம்பி என்றவரைக் காஞ்சிபுரம் அனுப்பி எப்படியாவது ராமானுஜரை அழைத்துவரும்படி சொன்னார். இவர் திரும்பி வருவதற்குள் ஸ்ரீ ஆளவந்தார் பகவான் பாதாரவிந்தங்களில் சேர்ந்துவிட அவரது தேகத்துக்குச் செய்யவேண்டிய கடன்களை மற்றைய சிஷ்யர்கள் செய்யத் தொடங்கினர்.

இச்சமயத்தில் ராமானுஜர் வந்துசேர ஸ்ரீ ஆளவந்தாரிடம் இருந்த அன்பின் மிகுதியால் இவருக்கு மிகுந்த துக்கம் வர அவர் தேகம் முழுவதையும் மிகுந்த ஆவலுடன் உற்றுப்பார்த்தார். வலது கையில் மூன்று விரல்கள் மடிக்கப்பட்டிருந்ததைக் கண்டார். அதன் காரணத்தை விசாரித்தகாலத்தில் ஆளவந்தாருக்கு மூன்று குறைகள் இருந்தனதென்றும் அவை (1)பிரஹ்மஸூத்ரத்திற்கு எளிய நடையில் ஓர் வியாக்யானம் செய்யவேண்டும். (2) பராசரர் என்ற பெயரைத் தகுந்தவருக்கு வைக்கவேண்டும். (3) திருவாய்மொழிக்கு எளிய நடையில் வியாக்யானம் செய்யவேண்டும் என்ற இவைகளே என்றும் தெரியவந்தது. இவைகளை நடத்திவிடுவதாக ராமானுஜர் வாக்களித்ததும், மடங்கிய விரல்கள் நிமிர்ந்தன. ஆளவந்தாரது ஈமக்கடன்கள் முடியும்வரை அங்கிருந்தும் மறுபடியும் அவர்காஞ்சிபுரம் திரும்பினர்.

இவ்வாறு தமது எண்ணம் முடிவு பெறாததால் இராமானுஜருக்கு இன்னது செய்வதென்று தோற்றாது அவர் மிகவும் குழப்பத்தையடைந்தார். அப்பொழுது அவருக்குப் பகவத் அனுக்ரஹத்தால் "பரம் பொருளே சிறந்தது. முடிவான நிலையில் பேதமற்றுப் போகாது,பக்தியே மோக்ஷஸாதனம், மோக்ஷம் பகவத் கிருபையால் வரு

வது, பெரிய நம்பியே சிறந்த ஆசார்யன்" என்ற விஷயங்கள் தெரியவந்தன. இவ்வாறானதும் இராமானுஜருக்கு ஸ்ரீரங்கம் சென்று எப்படியாவது பெரிய நம்பியிடம் உபதேசம் பெறவேண்டும் எனத் தோன்றிவிட்டது. உடனே இவர் ஸ்ரீரங்கம் நோக்கிப் புறப்பட்டார். இப்படியிருக்க ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீஆளவந்தார் ஸ்தானத்தில் ஒருவரும் இல்லாமல் போக அவருடைய பிரதம சிஷ்யர்களெல்லாம் சேர்ந்து பெரிய நம்பியை அழைத்து "எப்படியாவது காஞ்சிபுரம் சென்று, ராமானுஜரை அழைத்து வரவேண்டும்" என்று சொல்லி யனுப்பிவித்தார்கள். பெரிய நம்பி காஞ்சிபுரம் நோக்கி வந்து கொண்டிருந்தார். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது என்பது போல ஒருவரை யொருவர் மதுராந்தகம் ஏரிக்கரையில் உள்ள ஸ்ரீராமர் கோயிலில் சந்தித்தார்கள். ஒருவரை யொருவர் விசாரித்ததின் பேரில் ஒருவரை யொருவர் தேடிப்புறப்பட்டு வந்ததாகத் தெரியவந்தது. ராமானுஜரது வேண்டுகோளின்பேரில் பெரிய நம்பி அவருக்கு அங்கு ஓர்மரத்தடியில் உபதேசம் செய்து இருவரும் காஞ்சிபுரம் வந்து இருந்து தமது குடும்ப ஸகிதமாகக்கொஞ்ச நாள் சேர்ந்து வஸித்தார்கள்.



ராமானுஜரது பெண்ஜாதி ஒருசிறந்த குணவதியாயில்லாததினால் அவருக்குச் சிற்சில சமயங்களில் மனஸ்தாபம் வரும்படி நடந்துகொண்டாள். இரண்டுமுறை அவர் மன்னித்தார். மூன்றும் முறை அவள் பெரியநம்பியின் பெண்சாதியுடன் சண்டையிட்டுக் குடும்பத்தோடுகூட அவரை சொல்லிக்கொள்ளாது ஸ்ரீரங்கம் போகும்படி செய்துவிட்டாள். இதைக்கேட்டதும் ராமானுஜர் மனம் மிகவருந்தியது. அந்தசமயத்தில் அவர் மாமனார் பெண்சாதியை ஊருக்கு அனுப்ப வேண்டும் என்று வேண்டிக்கொள்ளத் தாமதியாது அவளை அனுப்பிவிட்டு உடனே ஸந்யாஸம் கொண்டனர்.

இந்த ஸங்கதி வெளியானதும் இவரிடம் அநேகம் சிஷ்யர்கள் வந்து கூடினர். ஆளவந்தார் சிஷ்யரும் அவர் பிள்ளையுமான ஆரியரை மற்றைய சிஷ்யர்கள் அனுப்புவித்து எப்படியாவது ராமானுஜரை ஸ்ரீரங்கம் அழைத்துவரும்படி ஏற்பாடு செய்தனர். இராமானுஜர் ஸ்ரீரங்கம் வந்ததும் தமக்கு ஏற்பட்ட ஸ்தானத்துக்கு ஏற்ப அதிகாரங்களை ஸம்பாதித்துக் கொள்ளவேண்டும் என்று தோற்றியது. பெரிய நம்பியிடம் இவர் உபதேசம் பெற்றிருந்தும் இவர் வேறு குருக்களை நாடி மற்றைய சாஸ்திரவிஷயங்கள் அறிந்து கொள்ளும்படி நேரிட்டது. மந்திரார்த்தங்களைத் தெரிந்துகொள்ள இவர் வெகுநாள் திருக்கோட்டியூர் நம்பியிடம் நடந்து பார்த்தார். அவருக்குக் கருணை வாராததுகண்டு இனி போகவேண்டுவதில்லை என்று தீர்மானிக்குந் தருணத்தில் ஆளவந்தார் சிஷ்யர்களால் தூண்டப்பட்டு முடிவாகஒரு முறை போவதாகத் தீர்மானித்தார். இம்முறை குரு கருணை கூர்ந்து பகவத்கீதை சாரசுலோகத்தை எடுத்துரைத்து வெகுவிஸ்தாரமாக உபதேசித்து அதை அதிகாரிகளல்லாதவர்களிடம் சொல்லிவிடக் கூடாதென்று நிபந்தனை செய்தார். மந்திரார்த்தத்தையும் அதன் மூலமாக மனிதன் எளிதில் சீர்திருந்தி மோக்ஷம் அடையும்வழியையும் உணர்ந்ததும், உலகில் வீணே வழிதப்பி மதிமயங்கும் ஜனங்களுக்கு இதை வெளியிட்டு அவர்களைச் சிறப்படையும்படி செய்யவேண்டும் என்ற அடங்கா ஆவல் ராமானுஜ

ருக்கு உண்டாகிவிட்டது. குருவாஞ்ஞை அந்த ஸமயத்தில் முற்றும் மறந்துபோய்விட கருணை மிகுதியால் ராமானுஜர் அருகேயிருந்த கோபுரத்தின் மீதேறிக்கொண்டு உச்சஸ்வரத்தில் ஜனங்களுக்குக் கிதார்த்தரஹஸ்யத்தை எடுத்துவெளியிட்டார். இதை அறிந்தகுரு இவரைஅழைத்து விசாரிக்க "நான் செய்தது அபவாதம்தான். தகுந்ததண்டனையைப் பெறத் தயாராய் இருக்கிறேன்" என, குரு "உனக்கு மீளா நரகம் இனி மேல்வரும், இங்கு ஒரு தண்டனையும் இல்லை" என ராமானுஜர் "ஜனங்கள் துக்கம் நீங்கி மோக்ஷம்பெறுவது நிச்சயமானால் அவ்வாறு செய்த எனக்கு நரகம் வந்தாலும் வரட்டும்" என்று மிகுந்த ஆறுமையுடன் சொன்னார். குரு சிஷ்யனது பெரிய கருணையைக் கண்டு மகிழ்ந்து அதையே ஓர் மதமாகக்கொண்டு ஸ்தாபிக்கலாமென்று அனுமதி கொடுத்தார்.

இந்த ஸமயத்தில் தமது ஸகோதர முறையிலிருந்த கோவிந்தபட்டர் யாதவப்ரகாசரோடு காசிக்குச் சென்று கங்கையில் ஸ்நானம் செய்யுங்கால் கையில் ஓர் லிங்கம் ஒட்டிக்கொண்ட நிமித்தமாகச் சைவராகி காளஹஸ்திரியில் சிவபக்தராய் இருந்த விஷயம் இவருக்குத் தெரியவந்தது. உடனே இவர் திருப்பதியில் இருந்த தமது மாமன் மூலமாகக் கோவிந்த பட்டரை வைஷ்ணவ மதத்திற்குத் திருப்பி எம்பார் என்ற பேர் கொடுத்துத் தமக்கு ஸஹாயமாக வைத்துக்கொண்டார். இதன் பின்னர் ஆளவந்தார் பிள்ளையிடம் இவர் திருவாய்மொழி கற்றுக்கொண்டார். இந்தக் காலத்தில் இராமானுஜரது நிலையைக்கண்டு சிலர் பொறாமை கொண்டு அவர் பிக்ஷைக்கு வருங்கால் அன்னத்தோடு விஷம் கலந்திட அவர் அதைத் தற்செயலாய் கண்டறிந்து அதனின்றும் தப்பித்துக்கொண்டார். அன்று முதல் இராமானுஜர் பிக்ஷைக்குப் போவது நின்றுவிட்டது. மடத்திலேயே அவர் சாப்பாட்டுக்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் பின்னர் ராமானுஜர் யஜ்ஞமூர்த்தி என்ற ஓர் அத்வைத ஸன்யாஸியை வென்று பின்னர் தமது சிஷ்யனான கூரத்தாழ்வாரது ஸஹாயத்தால் பிரஹ்ம ஸூத்ரபாஷ்யம் செய்து அதைக் காஸ்மீர தேசத்து ஸரஸ்வதி பீடத்தில் அரங்கேற்றினார். அவ்விடத்தில்தான் இவருக்கு ஓர் ஹயக்ரீவ விக்ரஹம் பரிசாக அளிக்கப்பட்டது. இவ்விடத்தில் தான் இவருக்குப் பாஷ்யகாரர் என்ற பெயரும் இவர் வியாக்யானத்துக்கு ஸ்ரீபாஷ்யம் என்ற பெயரும் கிடைத்தது. தெற்கே நோக்கிவருங்கால் திருப்பதிவந்து அங்கிருந்தகோவில், விஷ்ணு கோவில், ஸுப்ரமண்யர் கோவில் அல்ல என்று ஸ்தாபித்தார். ஸ்ரீரங்கம் வந்ததும் இவர் சிஷ்யர் கூரத்தாழ்வாருக்குப் பகவத் அனுக்ரஹத்தால் ஒரு பிள்ளை பிறக்க அதற்கு பராசரபட்டர் என்ற பெயரிட்டு அவர்மூலமாக ஸஹஸ்திரநாமத்துக்கு ஓர் வியாக்கியானம் உண்டாக்கினார். தம் கூடவேயிருந்த பிள்ளன் என்ற ஒருவரிடம் திருவாய்மொழி விஷயமாக விருந்த ஞானத்தின் நுட்பத்தைக்கண்டு அவர் மூலமாகத் திருவாய்மொழிக்கு ஓர் வியாக்கியானம் ஏற்படுத்தினார். இதனால் ஆளவந்தார் குறைகள் மூன்றும் தீர்ந்தன.

இப்படியிருக்கையில் குலோத்துங்க சோழன் என்ற ராஜன் பரமசிவத்திற்குமேல் பரதெய்வமில்லை, என்ற கொள்கையைப் பரவச்செய்து அதற்கு இணங்காதவர்களையெல்லாம் கொடுமையாய்த் தண்டித்துவந்தான். எல்லோரும் இராமானுஜரை யழைத்து இதற்கு இணங்கும்படி செய்யவேண்டும் என்று வேண்ட அவர் சீக்கிரத்தில் வந்து சேரவேண்டும் என்னும் உத்தரவு பிறந்தது. ராமானுஜருக்கு ஏதாவது அபாயம் வருமென்று பயந்து அவர் சிஷ்யனான கூரத்தாழ்வாரும் வேறொருவரும் சோழராஜன் ஸபைக்குப் போக ஒப்புக்கொண்டு ராமானுஜரை கிரஹஸ்த வேஷம் பூண்டு தப்பி ஓடிவிடும்படி வேண்டிக்கொண்டனர். அவ்வாறே அவர் காவேரிக் கரையோரமாக மேற்கே சென்று சாளிக்கிராமம் என்ற ஊரில் தங்கினர். இங்கு இருக்குங்கால் இவர் நாமக்கட்டி ஆய்விட்டது. இன்னவிடத்தில் அது அகப்படும் என்று தெரியவில்லை. மிகுந்த துக்கத்துடன் ராமானுஜர் அங்கு உறங்குகையில் அருகாமையில் ஓர் பெரிய நாமக்கட்டியாலாகிய குன்று இருப்பதாக ஸ்வப்னம் கண்டார். அங்கு சென்று வெட்டிப்பார்க்க நாமக்கட்டி அகப்பட்டதோடுங்கூட உள்ளிருந்து ஓர் கோயிலும் வெளியாயது. அதற்குத் திருநாராயணபுரம் என்று பெயர் கொடுத்தார். அங்கு வஸிக்குங் காலத்தில் டெல்லிபாக்ஷாவின் அரண்மனையில் ராமப்ரியர் விக்ரஹம் இருப்பதாக ஸ்வப்னம் காண மிகுந்த கஷ்டத்தின் பேரில் வடக்கேசென்று அந்த விக்ரஹத்தைக் கொண்டுவந்து திருநாராயண புரத்தில்

பிரதிஷ்டை செய்தார். இதற்குள் வைஷ்ணவர்களைக் கஷ்டப்படுத்திய சோழ ராஜன் தமது சிஷ்யான கூரத்தாழ்வார் கண்ணை அவர் கூறிய இடான பதிலுக்காகக் குத்தி விட்டதாகக் கேள்வியுற்று ஓர் தூதனை அனுப்பி துக்கம் விசாரிக்கச் செய்தார். அவன் திரும்பி வருகையில் கொடிய சோழன் இறந்துபோன ஸமாசாரத்தையும் கொண்டுவந்தான். உடனே இராமானுஜர் அபாயம் நீங்கிவிட்டதென்று கண்டு ஸ்ரீரங்கம் திரும்பிவந்து அங்கு பன்னிரு ஆழ்வார்களது விக்கிரஹங்களையும் ஸ்தாபனஞ் செய்து அவைகளுக்குத் தகுந்த உத்ஸவங்கள் செய்யவும் ஏற்பாடு செய்தார். இதன் பின்னர் கோயில் தர்மகர்த்தனாயிருந்த ஸ்மார்த்தனாகிய அமுதன் என்பவனை வைஷ்ணவத்திற்குத் திருப்ப அவன் ராமானுஜ ஸ்தோத்ரமாக 108-பாடல்கள் பாடினான். அதையும் நாலாயிர பிரபந்தத்தோடு சேர்க்க அனுமதி பிறந்தது. இதன்பின்னர் ஆழ்வார் திருநகரி முதலிய இடங்களைச் சுற்றிக் கொண்டுவருகையில் சிதம்பரத்திலிருந்த கோவிந்தராஜப்பெருமாள் விக்ரஹத்தைச் சைவர்கள் பெயர்த்துக் கடலில் எறிந்துவிட்டனர் என்று கேள்வியுற்று அவ்விக்ரஹத்தைத்தேடி எடுத்துத் திருப்பதிவந்து அங்கே மலையடிவாரத்தில் அதை ஸ்தாபித்து யாத்திரை செய்துகொண்டு ஸ்ரீரங்கம் வந்துசேர்ந்தார். தமக்கு முடிவுகாலம் வருவதை அறிந்து தமது சிஷ்யர்களுள் நால்வரிடம் தமது பாஷ்யம் முதலியவைகளையெல்லாம் ஒப்புவித்து, பிள்ளானிடம் மாத்திரம் நாலாயிரப் பிரபந்தத்தையும் ஒப்புவித்தார். இப்பிள்ளானே இவருக்குப்பின் இவர் ஸ்தானத்துக்கு வந்தான். இவர் பகவான் பாதாரவிந்தங்கள் சேருவதற்குமுன் இவரது விக்ரஹங்கள் மூன்று செய்யப்பட்டு இங்கும் ஸ்ரீபெரம்பூதூர், திருநாராயணபுரம் ஆகிய 3 இடங்களிலும் இவர் அனுமதியின் பேரில் ஸ்தாபிக்கப் பட்டன. இவ்வாறானதும் இவர் 120-ம் வயதில் ஸித்தி யடைந்தார்.



# ஆத்திசூடி விளக்கம்

## MORAL SAYINGS EXPLAINED

### 14. கண்டொன்று சொல்லேல்

இதை இரண்டுவிதமாகப் பொருள்படுத்தலாம். (1) (ஒன்றை) கண்டு (வேறு) ஒன்றைச் சொல்லேல். அதாவது பார்த்தது ஒன்றாக விருக்க, அதை வேறொன்றாக மாற்றி ஸமயத்திற்கேற்றபடி தந்நயம் கருதிக் கூறாதே என்பது இதன் முழுப்பொருளாகும். ஒன்றை வேறொன்றாக கூறுவது பொய் உரைத்தல் என்பதாகும். ஆகவே பொய் சாக்ஷி முதலியன ஒரு நாளும் கூறாதே. என்றாயிற்று.

இதற்கும் எல்லை வாக்கியம் உண்டு. ஒன்றை மாற்றி நியாயஸ்தல விஷயத்தில் கூறக்கூடாதாயினும் நம்மை ஒருவரும் கேட்காதிருக்கும் பொழுதே நாமாகத் தெரிந்ததை வெளியிடவே கூடாது. மேலும் பிறரைக் கஷ்டப்படுத்தி வீண் வம்பு பேசி வீண்காலம் கழிக்கும் துன்மார்க்கர்கள் கேட்கும் காலத்து நமக்குத்தெரிந்த ஒருவன் ரஹஸ்யத்தை வெளியிடவே கூடாது. அவர்கள் நமக்குத் தெரிந்துவிட்டதாக ஒருவாறு ஊஹித்து வந்து நம்மைச் சொல்லிவிடும்படி கட்டாயப் படுத்தியபோதிலும் நமக்கு ஒன்றும் தெரியாதென்று சொல்லியே அவர்களை நம்பும்படி செய்ய வேண்டும் : முடியாவிடில் வேறு ஒன்றாக மாற்றியாவது கூறி அவர்களை ஒருவாறு திருப்தி செய்து விடவேண்டுமே ஒழிய உண்மையை ஒருகாலத்தும் வெளியிடலாகாது. ஆதலால் எந்த ஸமயத்தில் உண்மை கூறினால் ஸம்பந்தப்பட்டவர்களுக்குக் கஷ்டமும் பொது நன்மை இன்மையும், துர்ஜனங்கள் குதூஹலமும் ஏற்பட்டு விடுமோ, எந்த ஸமயத்தில் மறைத்தாவது, மாற்றியாவது கூறினால் நமக்கு ஒருவித லாபமும் இன்றி முற்கூறிய கெடுதிகள் எல்லாம் இல்லாதிருக்குமோ அந்த ஸமயத்தில் 'எனக்கு ஒன்றும் தெரியாது' என்றாவது, அல்லது விஷயத்தை ஒருவாறு மாற்றியாவது ச விடுவதால் இந்நீதி வாக்கியத்திற்கு விரோ ஏற்படாது. இக்கருத்தை உள்ளட வள்ளுவரும் :—

பொய்மையும் வாய்மை இடத்
நன்மை பயக்கு மெனின்

என்று கூறி யிருக்கிறார்.

இக்கருத்தையே ஒளவையாரும் 'நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்' என்று உலகநீதியில் கூறி இருக்கிறாள். அதாவது மனச்சாக்ஷிக்குப் பொய் என்று தெரிந்ததைக் கூறாதே. பொய் என்பதற்கு நடந்ததை மறைத்தல் அல்லது மாற்றுதல் முக்கிய லக்ஷணமாயினும், தந்நயம் கருதல், பிறர்க்குக் கேடுவிளைத்தல், பொது நன்மை ஏற்படாமை, துர்ஜனர் ஸந்தோஷம் ஆகிய இவைகளும் முக்கியமான பாகங்கள். இவைகளை எல்லாவற்றையும் சேர்த்து ஆலோசிக்குங்கால் பொய் என்று தோன்றுவதைக் கூறலாகாது என்று ஒளவை உலகநீதியில் கூறினாள்.

நெஞ்சாரப் பொய் என்று தெரிந்தும் தம் நயம் கருதி கூடியவரையில் உண்மையின் உருவாகப் பொய்கூறிய தர்மபுத்திரர் பட்டபாடும், உண்மையையே உள்ளபடிக் கூறியும், உண்மையின் ஸ்வரூபம் அறியாது அநேகருக்குத் தீங்கு விளைத்ததால் கௌசிக ப்ராஹ்மணன் பட்டபாடும் இந்நீதி வாக்கியத்தின் ஸ்வரூபம், எல்லை முதலியவைகளை நன்கு காட்டும். (இவ்விரு **கதைகளையும் ஆர்யமத உபாக்யானம், முதல்பாகம், 54-ம் கதையிலும் இரண்டாம்பாகம் மெய் அதர்மமானது என்ற கதையிலும் காண்க**)

(2) (காணாது ஒன்று சொல்லி) கண்டு (வேறு) ஒன்றைச்சொல்லேல் என்பது இதன் இரண்டாம் பொருள். ஒருவனுக்கு எதிரில் அவனைப்பற்றி நாம் தைர்யமாகக் கூறக் கூடியவைகளையே அவனைக் காணாதவிடத்தும் கூறவேண்டும். என்பது இதனுள் அடங்கியிருக்கும் பொருள். இவ்வாறு செய்யாவிடில் நாம் கூறிய விஷயம் ஸம்பந்தப்பட்டவனுக்குத்தெரிந்துவிட, அவன் அதைப் பற்றி நம்மைக் கேட்பானாயின் நாம் பொய் சொல்லும்படியான நிலைக்கு வந்து விடுவோம். இம்மாதிரி கெட்ட நிலை வருமாதலின் இந்நீதி வாக்கியப்படியே நடக்க வேண்டும்.

எப்படிப்பட்டவனாயினும் அவன் முன்னிலையில் அவனைத் துதிக்க முடியும். ஆதலால் ஒரு[illegible]னைக் காணாதபொழுது அவனைப்பற்றித் தயங்[illegible] துதிக்கலாம். மேலும் எதிரில் துதித்[illegible]ல் துதியாகி கேட்பவனுக்கு வீண் [illegible] கூறுபவனுக்குக் 'காக்கை பிடிப்[illegible]மப்படும் கெட்ட குணத்தையும் [illegible]வே ஒருவனைத் துதிக்குங்கால் [illegible]தே நலம். தூஷிப்பதைக் கூடியவரையில் எதிரிலேயே செய்து விடுவது உத்தமம். ஒருவன் போனபின்பு தூஷித்தால், இல்லாதவனுக்கு அந்த வாக்யம் பயன்படாமல் போவதோடுங்கூட 'பார் என்னிடம் நேராக ஒரு வார்த்தை கூறித் திருத்தாது, பலர் அறியக் கூறி என்னைத் தூற்றுகிறானே' என்ற மனஸ்தாபமும், கூறுபவனுக்கு ஒருவித திடமின்மையும் பயங்குள்ளித்தனமும் உண்டாகிவிடும். ஆதலால் ஒருவனை எதிரில் குற்றங்கூறி மறைவில் துதிக்கலாம் என்றும், ஆனால் எதிரில் துதித்துவிட்டு மறைவில் குற்றங்கூறலாகாது என்றும் தெரிய வந்தது.

இந்த ஆராய்ச்சியை ஒட்டிக் 'கண்டொன்று சொல்லேல்' என்ற நீதி வாக்கியத்திற்குப் பொருள்கூறப் புகின்; ஒருவனைக் காணுங்கால் இகழ்ந்து கண்டக்கால் புகழாதே என்பதாகிவிடும். மாறுபாடாகச் செய்வதனால் கேடொன்றுமில்லை என்ற பொருள் த்வனித்து நிற்கும். இது பற்றியே ஒளவையார்தாம் எழுதிய உலகநீதியில் 'போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரியவேண்டாம்' என்று புத்திமதி கூறுகிறாள். உலகில் நடக்கும் பொய் புரட்டு சண்டை சச்சரவு எல்லாவற்றிற்கும் காரணம் போகவிட்டுப் புறஞ்சொல்லுதலே.

இந்த விஷயத்தில்.—

கள்ளற் குரைத்தான் கனசத்தியவிரதன்
உள்ளபடி வேதியர் சொல்லோர் வழியைத்—தெள்
[ளிமையோ
மாதனதா புன்னை வனவள்ளலே மேலெண்ணு
தேனிலும் கண்டனசொல்லேல்.

என்பது ஆத்திசூடி வெண்பா. இந்தப் பாட்டில் இந்நீதி வாக்கியம் கண்ட ஒன்றை சொல்லேல் என்றுபொருள்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்குக் கௌசிக ப்ராஹ்மணன் கதை குறிக்கப்பட்டிருக்கிறது. இதன் விஸ்தாரத்தை மஹாபாரதம் கர்ணபர்வத்தில் காண்க.

15. **நப்போல்விளை**

**ந**வைப்போல வணங்கி நில் என்பதுபொருள். இந்த எழுத்தே மிகவளைந்தும் உள்ளது. மெதுவான ஒலியையும் உடையது. இதுபோல வணக்கத்துடன் அதிர்ந்தசொல் இல்லாது ஸாவதானமாக நடக்கவேண்டும் என்பதாயிற்று. நகரத்திற்கு இதுவுமன்றி வேறு ஒரு விசேஷமும் உண்டு. சொல் உண்டாவதற்கு நகரம் உபயோக

ஆனல் இது மொழிக்கு முதலிலிருந்து இம்மாதிரி உபயோகப்படுவதில்லை. மேலும் தன் இனமாகிய ஙா, ஙி,......ஙௌ முதலிய எழுத்துக்கள் ஒரு சொல்லுக்கும் காரணமாவதில்லை. ஆயினும் ஙகரத்தோடு ஸம்பந்தப்பட்டிருப்பதால்தான் இவைகளைத் தமிழ் நெடுங்கணக்கில் சேர்த்து உயிர்மெய் எழுத்து 216 என்று கூறப்படுகிறது. இதுபோல எந்த விஷயத்திலும் முன்னின்று கீர்த்தி விரும்பல் முதலியவைகளுக்கு ஆளாகி கார்யத்தைச் செய்யாது ஒதுங்கி வணங்கி நின்று கார்யத்தை முடித்து அதனல் தன் உறவினர்களுக்கு ஒரு மேன்மைக்குக்காரணமாகி இருக்கவேண்டும். இதுவே ஒருவனுக்கு முக்யமாக இருக்கவேண்டிய குணம்.

இம்மாதிரிவிவரித்ததில் இதற்கும் அக்கம்சுருக்கேல் என்பதற்கும் ஸம்பந்தம் ஏற்படுகிறது.ஙகரம்போல ஒவ்வொரு சிறந்தவனும் உறவினரைத் தழுவி நிற்றல் வேண்டும். இந்த விஷயத்தில்:—

நீதில் அரிஷ்டங்கள் செய்ய உணவைக்கொள்ள
மேதினியிற் றம்இனத்தை மேவுதலால்—நீதிநெறி
போற்றுபுகழ் புன்னைவன பூபாலா உற்றுரை
மாற்றிருமெய் ஙப்போல் வளை.

என்பது ஆத்திச்சூடி வெண்பா. இந்த விஷயத்தை தாயுமானவர் 'காகம் உறவு கலந்து உண்ணக் கண்டீர்' என்று ஒரு விஷயத்தில் உபமானம் கொடுக்கிறுர். ஒரு வீட்டில் காக்கைக்குப் பிடிசோறிட்டால் காக்கை ஒன்று வரும்போது கா! கா!! கா!!! என்று கத்திக்கொண்டே வர இதைக்கேட்டு மற்றைய காக்கைகளும் கத்திக் கொண்டு இன்னும் மற்றைக்காகங்களுக்குத் தெரிவித்துக்கொண்டே வருகின்றன. இதனல் காகங்கள் உறவுகலந்து உண்ணுகின்றன. இதுபோல உறவினர்களை நாமும் தழுவி நிற்றல் வேண்டும் என்பதாயிற்று. இம்மாதிரி இனத்தோரைத் தழுவி சிறப்படைவதற்கு உதாரணம், அக்ஷயபாத்ர மூலமாகத் தர்மபுத்ரர் ப்ராஹ்மணர்களை வனவாஸ காலத்தில் போஷித்த வைபவமே.

இனி ஙப்போர்வளை என்ற பாடபேதம் உண்டு. இதற்குச் சண்டையிடுவதில் ஙகரம் போல் நட என்று பொருள். இது முதலிலிருந்து மொழிக்குக் காரணமாகாமல் இடையிலிருந்தே அவ்வாறுதல் போல ஸேனுதிபதியாகி இருப்பவன் எப்பொழுதும் படைகளுக்கு இடையில் நின்று போர்புரிய வேண்டுமே ஒழிய யுத்த முனையில் நின்று சண்டையிடவே கூடாது என விரியும்.

இந்நீதி வாக்கியப்படி நடவாமல் எத்தனையோ பெரிய ஸேனுதிபதிகள் அபாயத்திற்கு ஆளாகி இறந்திருக்கின்றனர். உதாரணமாக ஹோரேஷியோ நெல்ஸன், ஜான் நிகேல்ஸன் என்பவர்களே. நெல்ஸன் அனேக விடங்களில் ஜெயம் பெற்று ப்ரஞ்சு ஜாதியாருக்கு விரோதமாக ட்ரபால்கர் விரிகுடாவில் நடந்த கப்பல் யுத்தத்தில் தனது உடைகள் பிருதுகளான ஆபரணங்கள் ஆகிய இவைகளைப் போட்டுக்கொண்டு முதலில் தன் கப்பலில் தம்மினத்தோர் எல்லோரும் பார்த்து தைர்யமடைய வந்து நின்றுன். அவன் தோழர்கள் அவ்வாறு செய்தால் அபாயம் ஏற்படும் என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தனர். ஏதோ ஒருவித யுத்த ஆவேசம் கீர்த்தி விரும்பல் முதலிய வீண் குணத்திற்கு ஆளாகி நெல்ஸன் ஒதுங்காமல் பலர் காண நின்று விட்டான். சண்டை நடந்து வந்த முன்காலத்தில் எதிரி ஸேனையில் சிலர் நெல்ஸனை உடை முதலியவற்றால் உணர்ந்து குறி வைத்து சுட்டு அவனைத் தள்ளிவிட்டனர். ஸேனுதிபதி இறந்தால் யுத்தம் நின்றுவிடும் என்பது அவர்கள் கருத்து. நெல்ஸனுக்கு மாணக்காயம்படவே அவன் தோழர்கள் உள்ளே அவனைத் தூக்கிச் சென்றனர். அவன் இறக்கும்முன் தன் இனத்தோர் சண்டையில் ஓங்கி வெற்றி பெற்றனர் என்று கேள்விப்பட்டு திருப்தி அடைந்தபோதிலும், தன் வீண் கர்வத்திற்காக உயிரை இழக்க வேண்டி வந்தது. இம்மாதிரிபேதான் ஜான்நிக்கொல்ஸன் கதியும். 1857-ம் வருஷம் இந்தியாவில்

நடந்த ஸிபாய் கலகத்தில் டில்லி முற்றுகையைத் தீர்க்கப்போன ஸேனைக்கு அதிபதி ஜான் நிகோல்ஸன். உள்ளே புகுந்து கலக்கவேண்டிய ஸேனைகளுக்குத் தானே நடத்துவோனாகி எதிரி ஸேனையில் புகுந்தடித்து டில்லியுள் புகுந்தான். இதோடு விட்டு விட்டுப் பின்னடைந்து ஸேனைக்குப் பொதுத் தலைமைபூண்டு எல்லோரையும் நடத்துவன் என்று பலர் மதித்தனர். யுத்த ஆவேசத்தால் நிகோல்ஸன் மேன்மேலும் உள்ளே போய் விட முயன்றான். அப்பொழுது ஒரு சிபாய் இவனை நன்றாக நிதானித்துக் குறிபார்த்து சுட்டுத் தள்ளிவிட்டான். பின் நெல்ஸனைப்போல இவனும் தன் இனத்தார் ஜயத்தை கேட்டுத் தான் மாண்டான். நப்போர்வினை என்ற வாக்ய உண்மையைக் கருதாது ஒருவித ஆவேசத்திற்கு ஆளாகி அநியாயமாய் நல்ல ஸமயத்தில் பலர் வருந்தத் தமது உயிரை இழந்துவிடுவர் சிலர்.

### உடுப்பு

ஜனங்களுடைய மனதைச் சந்தோஷிப்பிக்க உடுப்பும் ஒரு முக்கியமான சாதனமாகையால், எப்பொழுதும் நாம் நமது உடுப்பு விஷயத்தில் வெகு ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். சிலர் ஒரு மனிதனுடை உடுப்பைக்கொண்டே அவன் இப்பேர்ப்பட்டவனென்று நிதானித்து விடுவார்கள். ஒருமனிதன் வெளியில் உடுப்புவிஷயங்களில் எவ்வளவுக்கெவ்வளவு டாம்பிகனாய் இருக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அறிவின்மை அவனிடம் விளங்கும். ஆகையால், புத்திமான்கள் எல்லாரையும்விடப் புதியமாதிரியாய் ஒருநாளும் வேஷ்டி முதலானவைகளைக் கட்டிக்கொள்ளவே மாட்டார்கள். எப்பொழுதும் தங்கள் தேக சௌக்கியத்தின் பொருட்டே பரிசுத்தமுள்ளவர்களாயிருப்பார்கள். ஒருமனிதன் தானிருக்குமிடத்தில் நல்ல ஸ்திதியிலுள்ள புத்திமான்கள் எந்தமாதிரி உடுப்புகள் தரித்துக்கொள்வார்களோ அந்தமாதிரி தரித்துக்கொள்ளவேண்டும். அதிகமாய்ப் போட்டுக்கொண்டால் டம்பாசாரியாம்! அற்பமாய்ப் போட்டுக்கொண்டால் மரியாதை யற்றவனாகும்; அற்பமாய்ப் போட்டுக் கொள்வதைவிடச் சிறிது அழகான உடைகளைத் தரிப்பதே எப்பொழுதும் நலம்.

## பெற்றோர்களும் பிள்ளைகளும்

## PARENTS & THEIR CHILDREN

“பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற”—திருக்குறள்.

நம் பழந்தமிழ்நாட்டில் குழவிகளின் அருமை பெருமைகளை முற்ற வுணர்ந்தார் மிகச் சிலரே யாவர். அவைகளைக் காணவும் களிக்கவும் தாம் பெற்ற விளையாட்டுக் கருவிகளாகக் கொள்வதன்றி, அவை யாவை, அவை யினி ஆகுமாறென்னை, அதற்கேற்ப அவைகளைப் பழக்குமாறென்னை யென ஊகித்தறிவாரல்லர். இன்று பெரியராயுள்ளார் நாளை இறந்தொழிய அன்று பெரியாராய் நின்று நிலவுவார் இற்றைச் சிறியரேயன்றோ? அவர் நல்லாராக உலகு நன்மையும், தீயராக உலகு தீமையும் உறுதல் ஒரு தலையாம். ஆகவே, உலகில் தீமை கெடவும் நன்மை உயர்ந்தோங்கவும் விரும்புவார் தம்மில் தம் மக்கள் அறிவு முதிர்ந்து செவ்வழி நடப்பான் ஏற்ற நெறி கண்டொழுக வேண்டும்.

கிருஷிகனொருவன் தான் பண்ணும் பயிரில் பலன் பெரிதும் பெறவேண்டில், காலமறிந்து எருவிட்டு, நீர்பாய்ச்சி, களைகட்டு, மெய் வருத்தம் பாராது உழைத்து வருந்திப் பாடுபட வேண்டும். இவ்வாறே மக்கட் பயிரிடும் அன்னையுந் தந்தையும் தங்குழந்தைகளுக்கு ஏற்றன நாடியுதவியும், ஏலாதன விலக்கியும் பரிந்து போற்றுதல் கடனாகும். ‘முற்பகல் செய்யில் பிற்பகல் விளையும்’ இன்னும், பயிர் செய்யுங்கால் சிற்சில பலன்களுக்கு மழை யதிகம் வேண்டப்படும்; சிற்சில வெயிலும், சிற்சில பனியும் வேண்டி நிற்கும். இப்பேத வியல்புகளைச்செவ்விதின் நாடி அறிந்தோனே சிறந்த கிருஷிகனாவான். குழந்தைகளை வளர்ப்பாரும் தம்பாலுள்ள மக்களின் குணவியல்புகளை நன்கறிந்துணர்ந்து அதற்கேற்றபடி அவர்களோடு நடந்து கொள்ளவேண்டும். சில சிறுவர் இன்சொல்லால் ஆளப்படுவர்; சிலர் கடுஞ் சொல்லுக்கே அடங்குவார்; ஒரு சிலர் நயத்தாலும் பின்னுஞ் சிலர் பயத்தாலுமே யாளப்படுவார். எவரெவர் எவ்வெப் பண்பினர் என்பதறிந்து அதற்கேற்ப நடந்து அவரை நல்

வழி யுறுத்தல் வேண்டும். சில சிறுவரைப் பெற்றோர்கள், துட்டரென்றும், தூர்த்தரென்றும், சொற்கேளாரென்றும்,கொண்டு அவரை நல்வழிப் படுத்தும் கருத்து முற்றும் ஒழித்து விடுகின்றனர்கள். அந்தோ ! இப்பெற்றோர்களின் மதிபோன வழிதானென்னே! விலங்குகளுள் மிகக்கொடிய வாகிய சிங்கமும், புலியும், நில்லென நிற்கவும் உட்காரென உட்காரவும், சொன்ன ஆணையின்படி நடக்குமாறு அடக்கியாளப் படுகின்றன ; மலைகளையும் புரட்டி அப்பாலெறிய வல்ல காட்டாறுகளும் தாம் நினைத்தபடி ஓடி கடலில் தம் அரிய நீரை வீணுக்காதபடி தடுக்கப்பட்டு மனித சமுகத்திற்கு உதவுமாறு ஆளப்படுகின்றன. இவைகளிவ்வாறாக, ஒன்றுமறியாக் குழந்தைகள் எவ்வளவு மாத்திரம் ! எத்துணை துட்டராயினுமென்! அன்பென்னும் மருந்தைத் தக்கவாறு பிரயோகிப்பில் அத்துடுக்குத்தனம் யாவும் இருந்தவிடமும் தெரியாது ஓடி யொளியாவோ? "அன்பின் வழியது உயிர் நிலை." அன்பிற்கு வயப்படாதது உலகில் யாவுமில்லையாம். அறிவற்ற கொடிய விலங்கினமும் அன்பிற்கு முற்றும் அடங்குவனவேயாம். அடிக்கடி தான் சொல்வழி மீறி நடப்பது கண்ட அன்னை " அடே ! மூடா ! நான் பன்முறையும் படித்துப் படித்துக் கூறுவது கவனியாது நீ போனதே போக்கென்று நடக்கின்றாய்! என் கொடுந்தண்டனைக்கு ஆளாக்கிக் கொள்ளுவது அறிகிலைபோலும் ! " எனக் கடிந்து கூறுவதாலும்,"என தருமைக் கண்ணே! குழந்தாய் ! நீ அவ்வாறு நடத்தல் நின் குணத்திற்குப் பொருந்தாதே. நீ சொல்வது கேளாயாக நின் அருமைத் தாய்க்கு மனம் எவ்வளவு நொந்தது ! கண்ணே! வேண்டாம் அவ்வழி விலக்கியொழி !" என அன்பு பெருக்கி அருமை மொழிகளால் கூறுவதற்கும் எத்துணை பேதம் பாருங்கள். இது குறித்தன்றோ "அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாள்" என்றார் பெரியாரும்.

பின்னும், தட்டானொருவன் தன் எதிரி இள்ள உலை முற்றும் குளிர்ந்து ஆறிப்போயிருப்பினும் அதிலுள்ள ஓர் சிறிய நெருப்புத் துணுக்கைக் கண்டு, அதன் சுற்றிலும் உமியுங் கரியும் மெல்லென அணைத்து ஊதி யூதி பொன்னும் வெள்ளியையும் உருக்கவல்லபெரு நெருப்பு உண்டாக்குகின்றான். இதுபோலவே பிள்ளைகளை வளர்க்கும் அருங்கடப்பாடு பூண்டார், அவர் எவ்வளவு துட்டராயினும் அவர்பால் சிறிதளவேனும் உள்ள நற்குணமொன்று நாடி யறிந்து அது உறனும் வலியும் கொண்டு வளரும் வண்ணம் ஏற்ற முறைகளை நாடி அவர் தீக்குணம் ஒழித்து அவரை நல்வழியில் கடை தேற்றுவார். ஆனால் நம்மிருவருட்சிலர்: 'போதனை முறைகள் குழந்தைப்பருவத்திற் கேற்றதன்று. அது அவர் குழறிப் பேசும் குதலைச் சொல்லும், கிண்கிணி யொலிக்கும் ஒண்தளர் நடையும் கண்டு மகிழ் சிறக்குங் காலமாகும். தந்தைக்குப் பயமும், தாய்க்கடக்கமும், பொய் போக்கலும், மெய்நாடுதலும், தெய்வம் பழிச்சலும், தீமை விலக்கலுமாய் அரும் பெரும் விதிகள் பிற்காலத்து தம் வயது வந்துழி கற்றறிவர்' என வாதாடுவர். இது எவ்வளவு பெரிய தப்பபிப்பிராயமென்பது அறிவாளிகள் பலர்க்கும் பிரசித்தம். குழந்தைகளின் மனதை(Photograph)புகைப்படம் எடுக்குங்கருவிக்கு ஒருவாறு ஒப்பிடலாம். அக்கருவி தனக்கு முன்பாக பொருள்கள் எங்தெந்த நிலையில் தோன்றுகின்றனவோ அவ்வன் நிலையிலேயே அது படம் பிடித்து விடுகிறது. படம் எடுத்துக் கொள்ள வேண்டி தனக்கு எதிரே உள்ளவர் சரியானபடி இருக்கிறாரா, இல்லையா என்பதுபற்றி அதற்கு யாதும் அவசியமில்லை. ஆனால் அக்கருவியைக் கையாடுகிற சித்திரக்காரனே, முன்பு சென்று படம் எடுத்துக்கொள்ள வேண்டுபவரைத்தக்க ஆசனத்தின்மீது அவரைச் சிறக்க வமர்த்திப் பின் அக்கருவியைத் திறந்து முன்வைக்கவேண்டும். குழந்தைகளும் எதை எவ்வாறு கண்டு கேட்கின்றனவோ அதை அவ்வாறே தம்மிள மனத்தே சிலையிலெழுத்தென அமைத்துக் கொள்கின்றன. நன்மை இன்னதென்றும், தீமை யின்னதென்றும் அறியும் சக்தி அவர்களுக்கில்லையாம். இது குறித்தே கற்றோர்கள் தம் குழந்தைகள் முன்னிலையில், மனோ வாக்கு காயமாதிய திரிகாண சுத்தராய் ஒழுகவேண்டுமென்பது. அவர்கள் முன்னிலையில் பொய் பேசுதலாவது, கடுஞ்சொற் கூறலாவது, இடக்கற் சொற்கள் மலிய வாதாடுவதாவது அறிவீனமாம். இவ்வாறு கெட்ட விஷயங்களை எப்படி விலக்குகிறார்களோ அவ்வாறே நற்பழக்கங்களை அவர்களுக்கு இளமையிலேயே கற்பிக்க வேண்டும்.

பெற்ளுேர் போற்றலும், பெரியோர் பழிச்ச லும், தெய்வந் தொழலும், தீவினை யகற்றலும், மற்றும் இன்னோன்ன அரிய பழக்கங்கள் சிறு வயதிலேயே உண்டாக்கப்பட வேண்டும். "தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டில்" நிற்கு மாதலின் நற்பழக்கங்களை இளமையிலேயே கற்கவேண்டுவ தவசியமாயிற்று. குழந்தைகள் இவ்வாறு சிறந்த நெறிகளில் பழக்கப்படில் அவர்கள் அறிவு முதிர்ந்து ஒழுக்கமும் நடையுக் தழீஇ "இவன் தந்தை என்னோற்ருன்கொல்" என உலகு வியந்து கொண்டாட பெருமைப் பாடுற்று உயர்தரப் பதவி யடைவாரென்பதில் எட்டுணையும் ஐயமுண்டோ ?

வே. இராதா கிருஷ்ணன்

சரியாய் உச்சரித்தல்.—அழகாய்ப் பேசுவதற்கு நாம் பாலியம்முதல் உரக்கப் படித்திருக்கவேண்டும். அன்றியும் நாள்தோறும் யாராவது ஒரு சிநேகிதரிடம் நாம் உரைக்கப்படித்து உச்சரிப்புப் பிழைகளைச் சீர்திருத்திக்கொண்டிருக்கவேண்டும். இப்படிச்செய்திராத பக்ஷத்தில் நாம் நல்லவிதமான உச்சரிப்பை அடைவது துர்லபம். நன்ருய் உச்சரிப்பறிந்த சிநேகிதம் கிடைக்காத பக்ஷத்தில் நமக்கே நாம் உரக்கப் படித்துக்கொள்ளலாம். வாய்க்குள்ளேயே முணுமுணுத்தல் ஒருநாளும் கூடாது. அன்றியும் சமயத்திற்குத் தகுந்தபடி நமது உச்சரிப்பு மாறுபட வேண்டும். ஒரு சந்தோஷமான பட்டாபிஷேகம் முதலான இடங்களை வாசிக்கும் பொழுது அழுகிறதுபோலப் படிப்போமேயானல் நம்மை ஜனங்கள் மிகவும் அவமதிப்பார்கள். பேசும் மாதிரியிலும் உச்சரிப்பிலும் வெகு ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். சிலர் வாய்க்குள் முணுமுணுப்பார்கள்; சிலர் குதிரையோட்டமாய்ப் படிப்பார்கள்; சிலர் படிப்பது கேட்கவே கேட்காது ; சிலர் பாடிப்பாடிப் படிப்பார்கள்; இவைகளெல்லாம் மிகவும் அவலக்ஷணமான குணங்கள். ஆகையால் வெகு ஜாக்கிரதையாயிருந்து இவைகளொன்றும் நமக்குப் படியாதபடி பார்க்கவேண்டும். இவைகளிலெல்லாம் என்ன இருக்கிறதென்று சிலர் எண்ணுவார்கள். மகா வித்வான்களிடங்களிலும் ஒவ்வொரு சமயங்களில் இந்தத்துர்குணங்களிருக்கலாம் ; அவர்களுடன் அந்தத் துர்குணங்களில்லாத வித்தவான்களைச் சேர்த்தால் பின் சொல்லியவர்களே பெரியோர்களாவார்கள்.

# நியாயமாலை

## POPULAR MAXIMS EXPLAINED

### 36. काकदध्युपघातक न्यायः

### ಕಾಕದಧ್ಯುಪಘಾತಕ ನ್ಯಾಯಃ

### காகதத்புபகாதக ந்யாயம்

'காக்கை தயிரைக் குடித்து விடும்;குடிக்காமல் பார்த்துக்கொள்' என்று ஒருவன் கூறினல் இதில் தயிர் குடிபடாமலிருக்க வேண்டும் என்பது முக்யம் என்று தெளிவாகிறது. காக்கை என்பது அவ்வளவு முக்கியம் அல்ல. காக்கை என்ற பதத்திற்குக் காக்கையைப் போன்ற தயிர் குடிக்கக்கூடிய பூனை முதலிய ஜந்துக்கள் என்பது பொருளாகும். ஆகவே தயிர் குடிக்கக் கூடிய ஜந்துகளால் தயிர் நஷ்டமாகாது பார்த்துக்கொள் என்பது இதன் பொருள். ஒன்றைக் கூறி அதுபோன்ற மற்றவைகளையும் உபலக்ஷணமாகக் கிரஹிக்கும்படி குறிக்குமிடத்தில் இந்யாயம் உபயோகப்படும். திருடினவன் தண்டிக்கப்படுவான் என்ருல் புருஷன் மாத்திரம் தண்டிக்கப்படுவான் என்பதாகாது. ஆணுகிலும் பெண்ணுகிலும் திருடிவிட்டால் தண்டிக்கப்படுவார்கள் என்பது தோன்ற இந்த வாக்யம் நிற்பதால் இது இந்யாயத்திற்கு உதாரணம். நன்னூல் பொதுவியலில் 358-ம் ஸூத்திரம் இந்யாயத்தின் உதாரணங்களை அடக்கியுள்ளது. 'ஒருமொழி தன் இனங்கொளற்கு உரித்தே' என்பது இந்த ஸூத்ரம்.ஒரு சொல் மற்றைய தனது இனத்தைச்சேர்த்துப் பொருள்படத்தகுதியாகச் சிற்சிலவிடங்களில் அமைந்து கிடக்கலாம் என்பது இதன் பொருள்.

தாயுமானவர் 'எல்லாம் யோசிக்கும் வேளையில் பசித்திர உண்பதும் உறங்குவதுமாக முடியும்' என்று நமது வாழ்க்கைத் தொழில்களை சுருக்கிக் கூறியிருக்கிருர். சாப்பிடுவதும் தூங்குவதும் தானு நமது வாழ்க்கைத்தொழில்? இவை தவிர வேறென்றும் இல்லையா? இவை ஒவ்வொரு நாளிலும் சிற்சில பாகங்களில் நடந்தேறிவிட மற்றைய பாகங்களில் என்ன நடக்கின்றன. மேலும் இவை இரண்டே நமது வாழ்க்கைத் தொழிலாக விருப்பின் உலகில் எல்லோரும் கஷ்டமே இன்றி ஸுகமாய் வாழலாமே! இப்பொழுதிருப்பதைவிட அநேக மடங்கு உண்பதும் உறங்

குவதுமான ஜனங்களை ஸுகமாக வைத்துப் போஷிக்கத் தகுந்த ஆற்றலுடையது இவ்வுலகு. அப்படி இருக்க இங்கு அநேகர் வருந்துவானேன்? மேலும் மூன்றுவித விசாரம் உறங்காக்கால் மனிதர்க்கு உள என்று பட்டினத்துப் பிள்ளை கூறுகிறார். பர்த்ருஹரி ஆயுர் வருஷ சதம் என்னும் ச்லோகத்தில் இவைகளை நன்றாக விஸ்தரித்துக் கூறுகிறார். ஆகவே உண்ணுவது உறங்குவது என்பவைகளை உள்ளபடிப் பொருள் கொள்ளாது உபலக்ஷண விஷயங்களைச் சேர்த்தே பொருள்படுத்தவேண்டும். உண்பது என்பது வாயால் ஏற்படும் அநுபவம். இது மற்றைய இந்திரிய அநுபவங்களைக் குறிப்பதாகக் கொள்ளவேண்டும். உறங்குவது என்பது தூங்குவதுபோல இந்திரிய வ்யாபாரம் ஓய்ந்திருப்பதான களைப்பு, உதாஸீனம் முதலிய நிலைகளை உணர்த்தும். ஆகவே தாயுமானவர் வாக்கியத்திற்கு இந்திரியங்கள் மூலமாக திருப்தி வரும்வரை வெளிச்சென்று விஷயங்களை அநுபவிப்பதும், திருப்தி வந்துவிட்டால் விஷயங்களில் வெறுப்புற்று இவை நீங்கி ஓய்ந்திருப்பதும் பின் மாறி மாறி இவ்வாறே செய்துகொண்டிருப்பதுமே இவ்வாழ்க்கைத் தொழிலென்று இந்த வாக்கியத்தை பொருள் படுத்தவேண்டும். யோசிக்காமலே விளங்கும் வெளிப்படைப் பொருளை ஒட்டி யோசிக்கும் வேளையில் என்ற பதத்தின் கௌரவம் தோன்ற இம்மாதிரி உபலக்ஷண விஷயமாகவே யோசிக்கையில் வெளியாகும் முற்கூறிய பொருள், இந்த வாக்கியம் இந்யாயத்திற்கு நல்ல திருஷ்டாந்தம் என்பதைக் காட்டும்.

### 37. काकदन्तगवेषण न्यायः

కాకదన్తగవేషణ న్యాయః

### காகதந்தக வேஷண ந்யாயம்

காகத்திற்குப் பல்லில்லை. அப்படி இருக்க ஒருவன் எத்தனை பல் அதற்கு என்று விசாரிக்கப் புகுந்தால் என்ன பயன்? இல்லாத வஸ்துவை உள்ளது போல எண்ணி விசாரிப்பது பயனற்றதாகவே முடியும். இந்த விஷயமாக ஒரு சுலோகமும் உண்டு. காக்கைக்கு எத்தனை பல், ஆட்டின் விரை எத்தனை பலம், கம்பளத்தில் எத்தனை மயிர் என்று இவைபோன்றவைகளை ஆழ்ந்துவிசாரிப்பதால் என்ன பயன்? என்பது அதன் பொருள். இதனால் இல்லாததை விசாரிப்பதும் உள்ளனவாயினும் நிஸ்ஸாரமாக உள்ளவைகளை விசாரிப்பதும் பயன்தாரா என்பது இதன் கருத்து. இந்த நியாயத்திற்கு லௌகிகப் பொருத்தம் ஒன்று உண்டு. ஒரு தொழில் அல்லது நிலையிலிருப்பவனுக்கு மற்ற விஷயங்களைப்பற்றி விசாரிப்பது அவசியமில்லை. இப்படி இருந்தும் தனக்கு ஸம்மந்தப்படாத விஷயங்களைப் பற்றிப் பேசி குற்றங் கூறுவது மிகக்கெட்டபழக்கம். இது காக்கைக்குப் பல் எத்தனை என்ற விசாரத்தையும் விடக் கேடு கெட்டது. இம்மாதிரி வரம்புகடந்து விசாரிப்பதால் தன்தொழில் ஊக்கம் கெட்டு அவன் தத்தளிக்க வேண்டிவரும்.

இதன் மதவிஷயப்பொருத்தமே மிக முக்கியமானது. பரம்பொருளிலிருந்து உலகம் எவ்வாறு உண்டாயிற்று என்ற விசாரம் இந்யாயத்திற்குத் தகுந்த உதாரணம். இது விஷயமாக மனதிற்கு ஒருவித சஞ்சலம் ஏற்பட்டு மேல் அபிவிருத்தியைத் தடுக்காமலிருக்க வேண்டுமே என்று நமது பெரியோர்கள் நமது தூக்கம் மரணம் முதலியவைகளைப் பின்பற்றி ஒருவாறு யுக்திக்குப் பொருந்தும்படியாகப் ப்ரபஞ்ச ஸ்ருஷ்டி சொல்லி அதனால் பரம்பொருளில் ஒடுங்கி சாந்திபெறுவதே முக்யம் என்று வற்புறுத்துகின்றனர். இதுபற்றியே **கைவல்ய** நூலாசிரியரும்

கற்பனை வந்த வாறு காட்டினோம் காண்பவெல்லாம்
சொற்பனம் போல எண்ணித் துணிந்தவன் ஞானி
[யாவான்.

என்று கூறியிருக்கிறார். இப்படி இருக்க ஸ்ருஷ்டி விஷயத்தை ப்ரதானமாகக்கொண்டு 'அகண்ட பரி பூர்ணமான நிர்மலப்ருஹ்மத்திலிருந்து இந்த ஜகத் எப்படி வந்தது?' என்று சங்கித்துத் தட்டழிவதே அநேக அத்வைதிகள் நிலையாகிவிட்டது. ஸமாதானம் வாராமல்போனால் ப்ரஹ்மத்தில் வேறாக அடங்கியுள்ள ப்ரபஞ்ச ஜீவகாரணங்கள் இருத்தல்வேண்டும். ஆதலால் முக்தியில் பேதம் உண்டு' என்று கூறும் விசிஷ்டாத்வைத த்வைத நிலைக்குவரும்படி நேரிடும். அத்வைதவாஸனை உடையோர் இம்மாதிரி சங்கித்து விசாரணை செய்வது காக்கைக்குப் பல்எத்தனை என்று சங்கிப்பதுபோலப் பயனற்றதே, என்றறிந்து ஸ்ருஷ்டி விஷயத்தை விட்டு லயவிஷயத்தைப்பற்றவேண்டும். இதுபற்றியே கைவல்ய நூலாசிரியரும்

ஞானங்காரணம் அறிபொருள் காரியம்
நாமரூபப் பேய்கள்
ஆனதெப்படி அழிந்ததெப்படி என
ஆய்குதல் பயனன்றே
மானமைந்தனே தீர்க்கஸ்வப்ன
ஜகம் வந்ததும் பாராமல்
போனதும் நினையாமல் உன்போதமாய்ப்
பூரணமா யிருப்பாயே.
அசத்தில் எம்மட்டுண் டம்மட்டும்
பாராமுகமாகினும் அம்மட்டும்
நிசத்தில் உள்விழிப்பார்வையா மிப்படி
நிரந்தரப் பழக்கத்தால்
வசத்தில் உன்மனம் நின்று சின்மாத்திர
வடிவாயிடில் மைந்தா
கசத்த தேஹத்திலிருக்கினும் ஆனந்தக்
கடல் வடிவாவாயே!

என்று எச்சரித்திருக்கிறார். இதை நம்பாதமற்றைய கொள்கைகளுடையவர்களுக்கும் பரம்பொருள் நிலையை நோக்கி ஜீவனும் ஜகத்தும் எம்மாத்திரம். பரம்பொருளைத் தியானித்து 'நீயலாற் பிரிதுமற் றின்மை'யை உணர்ந்து 'நான் தோன்றாது' நிற்பதே முடிவான நிலையாகில் ஜகத் ஸருஷ்டியைப்பற்றி ஏன் கவனித்து அவைகள் மூலமாக ப்ரஹ்மத்தில் ஏகதேசத்தில் ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியாதி காரணத்தவமாகிய மதம்இருத்தல் வேண்டும் என்று ஸ்தாபிக்க முயலவேண்டும். இவர்கள் மதப்படி காக்கைக்குப் பல் எத்தனை என்பது போல இவ்விசாரம் பயனற்றது என்று கூற முடியாதாயினும், கம்பளத்திற்கு எத்தனை மயிர் (விசிஷ்டாத்வைதி) ஆட்டின் விரை எத்தனைபலம் (த்வைதி) என்பவைகள் போலப் பயனற்றதே. இம்மாதிரி திரிமதவாதிகளுக்கும் ப்ரபஞ்சஸ்ருஷ்டி விஷய விசாரம் பயனற்றது; இதனால் பேதம் கற்பித்து வாதாடுவது மோக்ஷ ஸாதனமாகாது என்பதை நன்கு உணர்ந்து பரம்பொருளில் மனம் செலவிட்டுப் பழகுவார்களாகில்வேதாந்த சித்தாந்தஸமரஸம்விளங்கிமனக் கனிவு உண்டாக மதத்வேஷம் இருந்தவிடம்தெரியாமல் பறந்தோடிப் போகும். ஆகவே வேதாந்த விசாரத்தில் ஸ்ருஷ்டியை பேதம்தர்க்காதிகள் தவிடுபட விசாரிப்பதே இந்யாயத்திற்கு மிகப் பொருத்தமான உதாரணம்.

### 38. काकमांस न्यायः

కాకమాంస న్యాయః

### காகமாமம்ஸ ந்யாயம்

காக்கையின் மாம்ஸமும் நாயின் எச்சிலும் மிக அற்பமானவைகளாயினும், இவைகள் அகப்படுவது அரிது. இவைபோல மிக அல்பமானவையாயினும் கிடைப்பதரிதாயிருக்கும் வஸ்துக்கள் விஷயத்தில் இந்யாயம் உபயோகப்படும். ஒருவன் 10 ரூபாய் காகிதத்தை எடுத்துக் கொண்டு டிராம் வண்டியில் வந்துள்ளுகிறான் என்றும் அவனுக்கு அரையணாச்சீட்டுவாங்கி அருகாமையில் போகவேண்டியது என்றும் வைத்துக் கொள்ளுவோம். சீட்டுக் கொடுப்பவன் வந்ததும், 10 ரூபா காகிதத்தை நீட்ட சில்லரை இல்லை கீழே இறங்கு என்று அவன் கூறினால் இவன் கதி என்ன, பத்து ரூபாயிருந்தும் அல்பமாகிய அரை அணா இல்லாத ஏழைபோல் நடக்க வேண்டி வருகிறது. இந்நிலையில் அரையணா இவனுக்குக் காக்கை மாம்ஸம்போலாய் விட்டபடியால் பத்து ரூபாயை வைத்துக்கொண்டு அரையணாவுக்குத் திண்டாடும் இவன் கதி இந்யாயத்திற்கு உதாரணமாகும். ஆனைக்கும் அடி சறுக்கும் என்றபடி பெரியோர்களும் கல்வியிற் சிறந்தவர்களும் சிற்சில ஸமயங்களில் ஸாதாரணமான ஸமயோசித புத்தியின்றித் தத்தளிக்கும்படியாகிவிடும். பீஷ்மர் மஹா தர்மாத்மாவாயினும் த்ரௌபதீ மான ஸம்ரக்ஷண அவசரத்தில் திரௌபதீ கேட்ட கேள்விக்குத் தகுந்தபடி பதில் கூறி துரியோதனுடைய அநீதியைத் தடுக்காது கிடந்து குழம்பினர். பதினைந்தாம் நாள் யுத்தத்தில் துரோணர் விஷயமாகத் தருமபுத்ரர் மதிமயங்கிப் பொய் உரைக்க வில்லையா ? இவர்களுக்கும் இதுபோல் மற்றைய பெரியோர்களுக்கும் சிற்சில அவஸரங்களில் ஸாதாரண தர்ம ஞானம் கூட தோன்றாமல் போக அவர்கள் காக மாம்ஸ ந்யாயத்திற்கு உதாரணமாய் விடுகின்றனர்.

# உல்லாஸன் சரித்திரம்

## ADVENTURES OF ULYSSES

(தொடர்ச்சி)

### நான்காமத்யாயம்.

*துன்பங் கெடுத்துச் சுகங்கொடுத்தா ளென்றனக்கே*
*அன்பகத்தே வாழுஞ் சிற்றிடையா—ளின்புருவந்*
*தாங்கினேன் சாகாத் தனிவடிவம் பெற்றொளியா*
*ளேங்கினே னுண்மை யுரை.*

ஜன்ம பூமியாகிய இதாகாவைச் சேர இச்சித்து இரவு பகல் விடாமுயற்சி செய்த உல்லாஸன் தோழர்கள் இரக்கமற்ற கடலினலைகளுக் கிரையானபின் அவன் ஒருவனே மிஞ்சினான். அவனுக்கிருந்த ஒரு கப்பலும் கடலிலமிழ்ந்து போயிற்று. ஆடையாபரணங்களை யிழந்து பிறந்த நிலைமையில் ஒஜிஜீயாஎன்ற மனோரஞ்சனத் தீவிற்கு உல்லாஸன்வந்து சேர்ந்தான். அத்தீவு கலிப்ஸோ என்னும் அப்ஸரஸி னுடையது. உல்லாஸனுக்கு நல்ல தசை வந்த தென்னலாம். அப்ஸரஸிகளால் அத்தீவில் அவன் ஆதரிக்கப்பட்டான். கலிப்ஸோ அப்ஸரஸிகளுக்கு அரசி. உல்லாஸனைக்கண்ணுற் பார்த்த தக்ஷணமே அவனிடத்தில் அவளுக்குக் காதல் பிறந்தது. அவள் வஸித்த ஸ்தானத்தின் அழகை என்னென்று சொல்வோம்?

*மாமடங்கலுங் கற்பக மனையெலாங் கனகம்*
*அரமடந்தையர் சிலதிய ரநக்கியர்க் கமரர்*
*உரமடங் வந்துழைய ராயுழல் பவரொருவர்*
*தாமடங்கு வதன்றிது தவஞ்செய்த தவமால்.*

*பொன்னகர் மடந்தையர் விஞ்சையர்ப் பூவையர்*
*பன்னக வனிதைய ரியக்கர் பாவையர்*
*முன்னின பணிமுறை மாற முந்துவார்*
*மின்னின மிடைந்தென விசும்பின்மீச் செல்வார்.*

*நீல மேமுத னன்மணி நித்திலம்*
*மேல கீழபல் வேறொளி வீசலால்*
*பாலின் வேலை முதற்பல வேலையும்*
*கால்க லந்தன வோவெனக் காட்டுமோ.*

சிற்றின்ப நுகர்ச்சியைக் கைக்கொண்டு காமுகனாய்த் திரிபவன் இல்வாழ்க்கைத்துணை நலத்தை யறியான். புலன்கள் விரும்புமின்பம் பலவற்றையும் நினைத்தவுடன் செய்துவந்த கலிப்ஸோவினிடத்தில் உல்லாஸனுக்குப் பற்றுண்டாக வில்லை. ஸாவித்ரிபோலவே கலிப்ஸோவும் உல்லாஸனை மணந்து தன்னிடத்தே இருத்தி வைக்க விரும்பினவள்.

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்*
*தெய்வத்துள் வைக்கப் படும்—*

என்று நாயனார் கூறினதற்குச் சான்று உல்லாஸனே. தேவலோக ரம்பைகள் மத்தியி லிருக்கையிலும் உல்லாஸன் மனம் அருந்ததிபோன்ற தன் மனைக்கிழத்தி பனிலோபி யிடத்திலேயே சென்றது. கலிப்ஸோ உல்லாஸனுக்கு அமரத்வமும் தருவதற்கிருந்தனள். அவன் அதையும் பொருள் பண்ணவில்லை. சுத்தவீரர் சித்தம் உயிர்போமளவும் புகழை நாடி நிற்குமே யன்றிச் சிற்றின்பத்தில் பற்றாது. "வசையொழிய வாழ்வாரே வாழ்வர் இசையொழிய வாழ்வாரே வாழாதவர்" என்று பெரியோர் வாக்கு மிருப்பதால் உல்லாஸன் தான் அக்னிஸாக்ஷியாய் மணம்புரிந்த மனைவியாளை மறவாமல் ஸதா காலமும் நினைந்து துக்காக்கிராந்தனா யிருந்தான்.

இத்தருணத்தில் உல்லாஸன் குலதெய்வமாகிய மினெர்வா, வழிபடுவோ னிடத்தில் தயைகூர்ந்து தேவாதி தேவனிடத்தில் முறை கூற, அத்தேவனும் தூதனொருவனைக் கலிப்ஸோவினிடத்திலனுப்பி உல்லாஸனுக்கு யாத்திரைக்கு வேண்டிய கருவிகளை யமைத்து விடைதரல் வேண்டும் என்று ஆஞ்ஞாபித்தான். கடவுளின் கருத்தை யறிந்த கலிப்ஸோ தேவதூதனிடத்தில் "உங்களுலகத்துள்ள தேவரை யானறிவேன்: அவராசைக் களவில்லை: தேவகன்னிகையான யான் ஒரு நரனிடத்திற் காதல் கொண்டது தேவருக்குப் பொறாமை யுண்டாக்கினது போலும். தேவர் நரப்பெண்களை மணம் புரிந்தின் புற்றிருக்க வில்லையா? என் காதலைக் கண்டு பொறாமைப்படும் நீவிர் எப்பாடுபடுவீரோ?" என்று வெறுத்துச் சொன்னாள்.

தூதன் தேவலோகம் போனபின் கலிப்ஸோ உல்லாஸனிடஞ்சென்று, "அதிர்ஷ்டஹீனா, ஸர்வவல்லமையுள்ள நமது கடவுள் உன்னை இதாகாவுக்குப் பிரயாணப்படுத்தி யனுப்பக்கட்டளையனுப்பினார். அவர் ஸர்வஞ்ஞர். அவர் வாக்கின்படி நடக்கக் கடமைப்பட்டவளா யிருக்கின்றேன். உன்னிடத்தில் அளவிலாத அன்பை வைத்தே னென்பது உன் மனத்திற்கே நன்றாய்த்தெரியும். நீ இன்னும் அனுபவிக்க வேண்டியதா யிருக்கிற கஷ்டங்களின் ஸங்கியை அறியாய். அறிந்தால் நசிக்கும் பிராணியான பனிலோபியிடத்தி லளவிலாக் காதல்கொண்டு அமரத்வத்தையும்

வேண்டா மென்றிருக்க மாட்டாய். இது புல்லறிவாள ரியற்கையாம்” என்றாள்.

உல்லாசன் “தேவமணியே, என்னொரு விண்ணப்பத்திற்குச் செவி கொடுத்தல் வேண்டும். நான் மரிக்கு மியல்புடைய நரன்: என்னைப் போன்ற அநத்தியத் தன்மை யேற்ற பெண்ணிடத்தில் பற்று வைத்தேன். வனப்பிலும்,வன்மையிலும், அறிவிலும் அவள் உனக்கீடல்ல. கார்ப்பிலா மூர்க்கர் மூர்க்கரை முகப்பரன்றே? என்னூர்க்குப் போதலைத் தடுக்கக்கடவுள் உளமகிழ்வராயின், அவர் செய்யுமிடையூற்றினுக்கு மஞ்சேன். துன்ப மனுபவித்து மனத்திட்பம் எனக்குண்டா யிருக்கின்றது. போர்க்களத்திலும் அலைகல்லிலும் நான் பட்டபாடுகள் அளவிறந்தன,” என்றான்.

கலிப்ஸோவும் மனமுவந்து விடை கொடுக்க, அவள் ஊழியக்காரிகள் மரங்களை வெட்டிச் சேர்த்தார்கள். உல்லாசன் தன் கையினாலேயே மரக்கலமொன்று அமைத்தான். அதற்குப் பாய்களும் உணவுப்பொருள்களும் நிரம்பச் சேகரித்துப் பிரயாணத்துக்கு உல்லாஸன் ஆயத்தமானான். கலிப்ஸோவும் அவள் சேடிமார்களும் கடற்கரையில் வந்து உல்லாஸனுக்குப் பலவகை உபசாரங்கள் சொல்லி ஊர்க்கனுப்பினார்கள்.

## ஐந்தாமத்யாயம்

ஆழித் துரும்பெனவே யங்குமிங்கு முன்னடிமை
பாழிற் றிரிவதென்ன பாவம் பராபரமே.

கலிப்ஸோவின் உதவியாலும் தன் கைத்திறத்தாலும் செய்யப்பட்ட கப்பலில் உல்லாஸனேறிக்கொண்டு தனியே யாத்திரை செய்யத் தொடங்கினான். நகமுஞ் சதையும் போன்ற தோழர்களெல்லாரும் கடலுக் கிரையாகித் தானொருவனே மாலுமியாகவும் யாத்திரை செய்பவனாகவும் ஊழ்வினை செய்ததை நினைத்து உல்லாஸன் மிகுந்த விசனமடைந்தான். “உலையா முயற்சி களைகணாவூழின் வலிசிந்தும் வன்மையும்” ஒருவற் குண்டாகுமன்றே? உல்லாஸன் அச்சத்தை மறந்து கலிப்ஸோ அளித்த பரிசுகளைக் கப்பலிலேற்றிக் கடலில் செல்லுங்கால் வருண பகவானும் ஸமயம் பார்த்திருந்தான். தன் குமாரன் பலபீமன் கண்ணைப் பிடுங்கிக் கபடத்தால் வென்ற உல்லாஸனைக் கடலிலமிழ்த்திக் கொலை செய்ய உத்தேசித்துப் பிரமாதமான சண்டமாருதம் ஒன்றைக் கிளப்பினான். உல்லாஸனும் அவன் கப்பலும் பட்ட பாட்டை எழுத முடியாது. சூறைக்காற்று வீசிக் கப்பலைக் கவிழ்க்க, உல்லாஸன் அலைவாயிலகப்பட்டு அலைக்கப்பட்டான். வருணன் திரவமற்ற இருதயமுடையவனாயினும் லக்ஷதி என்று ஒரு தேவதை உல்லாஸன் படும்பாட்டைக் கண்டு மனமுருகி அவனிடஞ் சென்று “வீரனே வருணன் படுத்துகின்ற பாட்டினால் நீ மனஞ்சோர்ந்திலை. உன்னைப் போன்றவருக்கே உதவிபுரிதல் தர்மமாகும். நீ உன்னுடைகளை யுரிந்து நான் கொடுக்கும் அரைஞாணைப் பூண்டுகொள். அது உன்னை நீரிலமிழாமற் காக்கும். நீந்திக் கரை சேர்ந்தவுடன் கடலி லெறிந்துவிடு” என்று சொல்லி அரைஞாண் ஒன்றைக் கொடுத்தாள். அந்த அரைஞாணைப் பூண்டதுமுதல் உல்லாஸன் கடலில்அமிழாமல் தூரத்திற்றோன்றிய கரையை நோக்கி நீந்திச்சென்றான். இரண்டு பாறையின் நடுவேபோய் ஒன்றினுச்சியைக் கையாற் பிடித்து மேலே ஏற யத்தனிக்கும்போது ஒரு பெரிய அலை அவனைத் தாக்கி நடுக்கடலி லிழுத்துக் கொண்டு போயிற்று. உள்ளங்கையும் விரல்களும் காயப்பட்டு இரத்தம் வெள்ளமாய் ஓடிவந்தது. லக்ஷதிகொடுத்த அரைஞாணின் பலத்தினால் பின்னு மொருமுறை நீந்திக் கரைசேரப் பார்க்கையில் அங்கு ஒரு நதி ஸங்கமமாகும் இடம் உல்லாஸன் கண்ணிற்பட்டது. நதிகள் இயற்கையாகவே லோகோபகாரிகள். வருணன் கொடுமைதாளாமல் நதியைத் தஞ்சமாயடையக் கருதி உல்லாஸன் ஸங்கமஸ்தலத்திற்குப் போனவுடன், அந்த நதி மனமிரங்கித் தன்வேகத்தைத் தணித்து அவன் எதிர்த்து நீந்திக் கரைசேரும்படி உதவி செய்தது. கரை சேர்ந்தவுடன் லக்ஷதி என்னுந் தேவதை சொன்ன வார்த்தைகளை நினைந்து அரைஞாணை அவிழ்த்துக் கடலி லெறிந்து தேவதைக்கும் நதிக்கும் நமஸ்கரித்துத் தியானஞ் செய்துகொண்டு கொஞ்ச நேரம் உல்லாஸன் நின்றான். உடையிழந்து, உயிர் வெறுத்து, உடல் நொந்து தான் பிறந்த பிறவியையும், அடைந்த நிலைமையையும் உல்லாஸன் நினைத்து மிகுந்த துயரமுற்றான். நதி சங்கமத்தை நாடிச் செல்லும்படி புத்தி கொடுத்தது மினெர்வா என்னும் உல்லாஸன் குல தெய்வம். அந்தத் தெய்வபலத்தாலேதான் பற்பல இடையூறுகளினின்றுந் தப்பலானான்.

திகம்பானுப் நதிக்கரையில் நிற்கையில் அங்கேயே படுத்துறங்கவா, அருகிலுள்ள காட்டிற்குள் சென்று அங்கு களைப்பாறவா, என்று இரண்டுயோசனைகள் தோன்றிச் சற்றுமதிமயங்கி நின்றான். நீரிற் கிடந்து குளிரால் விரைத்த உடம்பை நீர்க்கரையிலேயே படுக்கவிட்டால் விரைப்பு அதிகரிக்கும். காட்டிற்குட் சென்று படுக்கலா மென்றாலோ மிருகங்களால் உயிர்ச்சேதம் வரலாம். உல்லாஸன் மனம் இவ்வாறு சற்று ஊசலாடிக் கொண்டிருந்தது. நிர்வாணமாய்க் கடற்கரையிற் படுத்துறங்குவதினும் ஒருவர் கண்ணிலும் படாது காட்டிற்குட் செல்லுதல் நலமெனத் தோன்றிற்று. அக்காடு மரம்அடர்ந்ததாயிருந்தமையால் பகலவன் கிரணமும் மழையின் துளியும் சரீரத்திற்படமாட்டா. உல்லாஸன் காட்டில் நுழைந்து சருகுகளைப் பரத்திக்கொண்டும் சருகுகளையே மேல் போட்டுக்கொண்டும் நித்திரைபோனான். விலையிலா மாணிக்கம் குப்பையிற் கிடந்தது.

## ஆறுமத்தியாயம்

குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினு நண்ணுவர்.

உல்லாஸனுக்கு மினெர்வா குலதெய்வமென்று முன்னரே சொன்னோம். அந்தத் தேவி தன் சரணமடைந்தவரைக் காத்தலில் தலைமை பெற்றவள். பெருந்துயரங்களிலும் அடியானாகிய உல்லாஸனுக்கு ஊக்கங் குறையாது உதவி புரிந்தவள். அவளிறங்கிய நாட்டிற்கு பேஷியா என்று பெயர். அதையாண்ட அரசனுக்கு அலஸீனனென்று நாமம். அவனுக்கு அனேக ஆண்மக்களும் நளிகா என்னும் அருமைப் பெண்ணொருத்தியும் உண்டு. நளிகாவினால் உல்லாஸனுடைய அருமை பெருமைகள் அரசனுக்கு வெளியாக இச்சித்து மினெர்வா செய்த அற்புதங்களை இங்கெடுத் துரைப்பாம். பக்தர்களுக்கு வழிபடுந் தெய்வஞ் செய்ய இயலாததது முண்டோ?

ஹம்ஸதூளியாலமைத்த படுக்கையிலுறங்கிச் சுகமனுபவித்த உல்லாஸன் காட்டிலுள்ள சருகுகளாலான படுக்கை யொன்றை யமைத்து அச்சருகுகளாலேயே போர்க்கப்பட்டிருந்தான். நளிகாவும் உல்லாஸனும் ஒருவரை யொருவர் பார்த்து நேரிற் பேசும்படி செய்யக் கருதின மினெர்வா இரவில் நளிகாவின் சொற்பனத்தில் அவள் தோழியின் உருவமெடுத்துக்கொண்டு "நளிகா, என்ன தூக்கந் தூங்குகின்றாய். உன் கலியாணம் இன்னுங் கொஞ்ச நாள்தானே இருக்கிறது. உன் ஆடை ஆபரணங்களை யெல்லாம் ஒழுங்குபண்ண வேண்டாமோ? அவை கண்ணுக்கினியனவா யிருந்தாலல்லவோ மணமகனுக்குஉன்னிடத்தில் காதல் மிகும். உன்னுடைய தோழிகளுக்கும் நல்ல ஆபரணங்களை அளித்தல் வேண்டும். படுக்கையை விட்டெழு. உன் ஆடைகளைத் தோய்த்துச் சுத்தஞ் செய்து உலர்த்திக் கொணர வேண்டிய இடம் பட்டினத்திற்கு வெளிப்புறத்தில் வெகு தூரத்திலிருக்கின்றது. ராஜ குமாரியான நீ அவ்வளவு தூரம் நடந்து வருவது யோக்கியமன்று. உன் பிதாவைக் குதிரை வண்டி ஒன்று ஏற்படுத்திக் கொடுக்கச் சொல். உன்ஆடைகளின் மூட்டை பெரிதாயிருக்கின்றமையால் தலையில் தூக்கிப்போவது முடியாது" என்றனள்.

மங்கலமான கனவு கண்ட நளிகா படுக்கையை விட்டெழுந்து மனக்களிப்புடன் தன் மாதாவைக் கண்டு தரிசித்துப் பிதாவைப் பார்க்கப் போனாள். அதிகாலையில் அவள் பிதா ராஜ காரியமாய் ஆலோசனை சபைக்குப் போக விருந்தவரை நளிகா வணங்கி,

"பிதாவே, பட்டினத்துக்கு வெளிப்புறத்திலுள்ள துறைகளில் ஆடைகளைச் சுத்தஞ்செய்துவர எண்ணி யிருக்கின்றேன். மனமுவந்து எனக்கு ஒரு குதிரைவண்டி தரல் வேண்டும்" என்று பிரார்த்தித்தாள்.

"குழந்தாய்,எந்தஆடைகளைப்பற்றிச்சொல்லுகின்றாய் ?" என்று அரசன் வினவ, நளிகா,

"என்னுடையவும் என் சகோதரருடையவுமான ஆடைகளைத்தான்சொல்லுகின்றேன்.அவை பெட்டியில்வெகு காலமாக வைக்கப்பட்டு அழுக்கடைந்திருக்கின்றன. என் சகோதரர் ஐவரில் இருவருக்கு விவாகமாய்விட்டது; மற்றை மூவரும்இனி மணம்புரியவேண்டியவராயிருத்தலால், அவர்களாடை சுத்தமாயிருத்த லவசியமன்றோ? ஆடை ஒருவனை அழகு படுத்துவது. உடன் பிறந்தாளாகிய என்னிலும் வேறு யார் ஸகோதரர் காரியங்களில் கவலை வைக்கலாகும்? தாங்கள் ஆலோசனை ஸபைக்குப் போகுங்கால் அழுக்காடை தரிக்கலாகுமோ?" என்று பதில் சொன்னாள்.

அலஸீனன் தன் மகளுடைய உட்கருத்தை யறியாதவனன்று. மடந்தைப் பருவமடைந்திருந்த தன் மகள் மணத்தை நினைந்து சொன்னாளென்றுணர்ந்து அவளிடத்திலுள்ள அச்சம் நாணம் முதலிய நற்குணங்களைக் கண்டு மகிழ்ந்து குதிரைவண்டி ஒன்று கொணரும்படி கட்டளை யிட்டான். அவள் மாதாவும் சந்தனாதி முதலான உயர்ந்த தைல வகைகளை மகளிடத்திற் கொடுத்து அவளும் அவள் தோழிமாரும் நீராடி வருவதற்கு உடன்பட்டாள். நஸீகாவும் அவள் சேடிமாரும் ஆடைகளை எடுத்து வண்டியிலேறிக்கொண்டு ஊருக்கு வெளிப்புறத்திலுள்ள துறையில் ஜலக்ரீடை செய்யப் போனார்கள்.

சிறுமியர் கூட்டம் குறித்த இடத்திற் சென்று ஆடைகளைப் பல நீர்களில் தோய்த்து உலர வைத்துப் பந்தாடினபோது ராஜகுமாரி வீசின பந்து மற்றவரினும் தூரப் பிரதேசத்தில் விழுந்ததைக் கண்டு தோழி மாரெல்லாரும் உரத்த சத்தஞ் செய்தார். இவரிறங்கி யிருந்த துறைக்கருகாமையி லிருந்த காட்டிற்றான் உல்லாசன் படுத்துறங்கினான். பெண்களின் கூக்குரலைக் கேட்டுத் திடீரென்று அவன் துயில் நீங்கி மரங்களிலுள்ள இலைகளை ஆடையாகப் போர்த்துக் கொண்டு மறைவிடம் விட்டு வெளியில் வந்தான்.

பனியால் நனைந்து வெயிலாலுலர்ந்து இலையாலுடுத்து மலைபோல நிற்கும் புருஷனைக் கண்டவுடன் தோழிகளனைவரும் வெருண்டோட, மினெர்வா தேவியினுடைய பிரஸாதத்தால் நஸீகா ஒருத்தி மாத்திரம் தனித்து நின்று உல்லாஸனுடன் பேசும்படியான மனத்திட்ட முடையவளானாள்.

உல்லாஸன் 'கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க்கேளாரும் வேட்ப' மொழியுஞ் சொல்லன். ஸ்திரீயின் முன்பாக வஸ்திரமின்றிப் போதல் பிழையானதால் தூர நின்றபடியே உல்லாஸன் நஸீகாவை நோக்கி, "எதிரில் நிற்கிறது மானுடப்பெண்ணோ, தேவகன்னிகையோ அறிகிலேன். தேவப்பெண்ணாயின் பிருஹஸ்பதிபுத்திரியாகிய டயானாவாய்த் தானிருத்தல்வேண்டும். வேறு எவர்க்கும் இந்த வனப்பும், உயரமும், முகமும், சாயலுங் கிடையாது" என்று புகழ்ந்து பேசினான்.

நஸீகா தான் மானுடப் பெண்ணென்றும் தேவகன்னிகை யன்றென்றும் மறுமொழி பகர, உல்லாஸன் கொஞ்சந் தைரியங்கொண்டு, "மானுடப் பெண்ணாயின் உன்னைப் பெற்றவரும் உடன் பிறந்தாரும் என்ன தவஞ் செய்தவர்களோ. தவத்தினாலல்லாமல் உன்னைப்போன்ற உத்தம லக்ஷணங்கள் பொருந்திய பெண் உண்டாதலில்லை. உன்னை மணக்க விரும்பவன் எல்லாரினும் பாக்கியசாலியா யிருத்தல் வேண்டும். நான் சுற்றிப்பார்த்த அனேக தேசங்களில் உன் ரூப லாவண்யங்களை யொத்த புருஷனைக் கண்டிலேன். உன்னைப் பார்த்தவுடன் என்மனத்தில் ஒரு அச்சம் பிறந்து உன் பாதத்தில் விழுந்து நமஸ்கரிப்பதைத் தடைசெய்கின்றது. ஜிதேந்திரியர்களுடைய மனமும் உன்னாற் கவரப்படும். ஜன்மப் பிரகிருதியாய்க் கஷ்டத்தையே அனுபவித்து என் மனம் ஒருவாறு கட்டப்பட்டிருக்கின்றது. இருபது நாள் கடலிலலைக்கப்பட்டு உங்கள் துறையில் நேற்று மாலையில் இறங்கினேன். இந்தவிடம் நிர்மானுஷமென்றிருந்தேன். வஸ்திரமொன்றளித்து ஊருக்குப் போகும் வழியையுங் காட்டுவாயாயின் கடவுள் அரும் பேறுகளை யுனக்களிப்பார்," என்று கூறினான்.

வெளிப்பார்வைக்குக் காட்டு மிருகாண்டி போலத் தோற்றின உல்லாஸனுடைய மதுர வாக்கைச் செவிகொடுத்துக் கேட்டானந்தித்த நஸீகா, "அய்யா, உம்மைச் சோம்பேறி யென்று எவருஞ் சொல்லத் துணியார். விவேகமும் விடாமுயற்சியு மொருவனுக்குப் பாக்கியத்தைத் தாலென்பதில்லை. தேவாதிதேவன் கருணைபெற்றவர் மட்டில் ஸுகானுபவிகளாகின்றார்கள். நீர் அனுபவிக்குங் கஷ்டமும் அவரால் வந்ததே. எங்கள் நாட்டில் வந்தமையால் ஆடை முதலானவை எவை வேண்டினும் உமக்குக் கொடுத்தல் எங்கள் கடமை. இந்த நாட்டிற்குப் பேஷியா என்று பெயர். என் பிதா அலஸீனன் இந்நாட்டிற் கதிபதி," என்றாள்.

ஓடிப்போ யொளித்திருந்த சேடிமாரை அருகிலழைத்து நஸீகா, "என் முன்னிருப்பவர் பேயுமல்ல, பிசாசுமல்ல; அவர் புருஷ சிரேஷ்டர்.

அவர் பொறுமையும் பெருமையும் வியக்கத்தக்கனவாம். அவர் ஸ்நானஞ் செய்வற்குத் தீர்த்தத்தையும் உடுக்க ஆடையையும் தயார் செய்யக்கடவீர்" என்று சொல்லத் தோழிமாரும் அவ்வாறே செய்தனர்.

மாசுபடிந்த உடலைக் கழுவித் தேசளிக்கும் ஆடையணிந்து உல்லாஸன் நிற்கும்போது, மன்மதன் தானுருமாறி வந்தானோ என்று அங்கிருந்தவர் எண்ணலானார். நஸிகாவும் உல்லாஸனைப் போலழகமைந்த புருஷன் தன்னை மணம் புரிதல் வேண்டுமென்று எண்ணங் கொண்டனள்.

நஸீகாவின் தோழிமார் உலர்த்தியிருந்த வஸ்திரங்களையெல்லாம் சேர்த்து மூட்டையாகக் கட்டி வண்டியிலேற்ற, நஸிகாவும் அவர்களும் அதன்மேலேறிச் சவாரி போனார்கள். புறப்படுமுன் நஸிகா உல்லாஸனுக்கு வண்டியின் பின்னரே கால் நடையாய் வரலாமென்று சொல்லியிருந்தனள். வண்டியில்தன் பக்கத்திலேயே உல்லாஸனை வைத்தழைத்துப் போதலில் விருப்பமுடையவளாயினும் உலகம் வித்தியாசமாய் நினைக்குமென்றஞ்சி வண்டியின் பின் வரும்படி அவனுக்குச் சொன்னாள். சிறு பெண்ணாயினும் யுக்தாயுக்தந் தெரிந்து நஸீகா நடப்பவள்.

உல்லாஸன் பட்டினத்திற்குட் போய், அங்குள்ள மாடமாளிகைகளையும், கூடகோபுரங்களையும், வியாபாரச் சாலைகளையும் மற்றுமுள்ள துறைகளையும் பார்த்தான்.*

வாப்பறு மணியும் பொன்னு
மாரமுங் கவரி வாலும்
சாத்திடை யகிலு மஞ்ஞைத்
தோகையுந் தம்பீக் கொம்பும்
குரப்பணை நிரப்பு மள்ளர்
குவிப்புறக் கரைக டோறும்
பரப்பிய பொன்னி யன்ன
வாவணம் பலவுங் கண்டான்.

நஸீகா முன்னதாகவே அரண்மனைக்குட் சென்று உல்லாஸன் வரவைத் தெரிவித்திருந்தமையால் அவன் ராஜஸந்நிதானத்திற் சென்று "மஹாராஜனே, கடலில் என் மரக்கலமுடைந்து போனமையால் நீந்தி உமது துறையில் நேற்று மாலை வந்தேன். இன்று காலையில் தமது புத்திரியாகிய தேவியின் தரிசனத்தாலும் தயையாலும் துன்பத்தினின்று விடுபட்டவனாயுமது ஸந்நிதானத்திற்கு வரலானேன். எனக்கு ஒரு கப்பலும் அதற்கு வேண்டிய ஆட்களுந் தந்து என்னூர்க்கனுப்பப் பிரார்த்திக்கின்றேன்" என்றான்.

அரசன் சபையிலுள்ளாரை நோக்கி, "நம்முன் வந்திருப்பவன் யாரென்று அறிகிலோமாயினும், "தேஹி" என்று கேட்டவனுக்கு "நாஸ்தி" என்று சொல்லுதலாகாது. நமது நாட்டில் இவன் உள்ள வரையில் தக்கபடி ஆதித்தியஞ் செய்து ஊர்க்குப் போகுங்கால் கப்பல் ஏற்பாடு செய்தனுப்புதல் தகுதி. உங்களபிப்பிராயமென்ன?" என்று வினவ, அமைச்சரும் அவ்வாறே செய்தலாகுமென்றார்.

அலஸீனன் ஆக்ஞையால் உல்லாஸனுக்குத் தக்க ஆஸனம், அன்னபானாதிகள் அளிக்கப்பட, உல்லாஸன் திருப்தியாய் உண்டு மனங்களித்திருந்தான். தன் உண்மையான நிலைமையை உல்லாஸன் பேஷியா நாட்டாருக்குச் சொல்லவில்லை. அலஸீனன் உல்லாஸனுக்குத் தக்க படுக்கை அமைக்கவென்று கட்டளையிட, உல்லாஸனும் அன்று பஞ்சணைமீது படுத்து உறங்கப் பார்த்தான். முன்னாள் சரகுபடுக்கையில் எப்படி சுகமான நித்திரை வந்ததோ அவ்வாறு பஞ்சணையில் இல்லை. இதுவும் ஒரு புதுமை. இராப்பொழு திவ்வாறு செல்ல,

ததையுமலர்த் தாரண்ண லிவ்வண்ண
மயலுழந்து தளரு மெல்லை
சிதையுமனத் திடருடைய செங்கமல
முகமலரச் செய்ய வெய்யோன்
புதையிருளி னெழுகின்ற புகர்முகயா
னையினுரிவைப் போர்வை போர்த்த
உதையகிரி யெனுங்கடவு ளுதல்கிழித்த
விழியேபோ லுதயஞ் செய்தான்.

# கடற்கரை ஓர் கனா

## ON THE BEACH : A REVERIE.

இவ்வாறு துக்கமோர் பக்கந்துளைத்திட, சுகமோர்பக்கம் சுரந்திட நீலக்கடலை நோக்கிக்கொண்டே சென்றேன். யமுனா நதிக்கரையில் கண்ணன் செய்த திருவிளையாடல்கள் என் கண்முன்னே நின்றன. திடீரென்று அடிவானத்திலிருந்து ஓர் பெருஞ் ஜோதி கிளம்பியது. அதன் நடுவில் உருக்கிய தங்கம் போலும் மேனியுடன் பகவான் என் கண்ணன் காளிங்கன் மீதேறி ஆனந்த நர்த்தனஞ் செய்வதைக் கண்டேன். கண்டவுடன் என் துக்கமெலாம் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கியது. என் கண்ணே கண்மணியே மணியினொளியே கற்கண்டே கனிரசமே ஆராவமுதே ஆருயிரே என்கண்ணாவென்று மெய்மறந்தது. ஆனந்தபரவச மானேன்.

“ஊரிலேன் காணி யில்லை உறவுமற் றொருவ ரில்லை
பாரில்நின் பாத மூலம் பற்றிலேன் பரம மூர்த்தி
காரொளி வண்ணனே கண்ணனே கதறு கின்றேன்
ஆருளர் களைக ணம்மா வரங்கமா நகருளானே.
பத்திமுத லாய வற்றில் பதியெனக்குக் கூடாமல்
எத்திசையு முழன்றோடி யிளைத்துவிழுங் காகம்போல்
முத்திதரு நகரேழின் முக்கியமாய் கச்சிதனில்
அத்திகிரி யருளாளர்க் கடைக்கலநான் புகுந்தேனே

என்று பெரியோர் உடலுருகி உள்ளங்கரைந்து சொல்லாய்ப் பெருகி உரைத்ததுபோல் யானும் நின்னையே சரணம் புகுந்தேன். ஆநிரை மேய்த்து ஆயரை மயக்கி வேய்ங் குழல்கொண்டு சராசரத்தை உருக்கிடச் செய்யும் மதன மோஹன சுந்தர மாமாயா கள்வ, ஜார சோர சிகாமணி, வேதத்துக்கு மறிய பரம்பொருளே நீ ஆயர்க் கெளியனான செளலப்யம் எவ்வகையோ என்று அழுதேன். தொழுதேன். பாடியாடினேன். உடலுருகி உளமுருகி நைந்து வாடி அழுதேன். தொழுதேன் என்ற பெரியோர் பேச்சை நான் பேசுவது கள்ளப்பேச்சு என்று நீ அறிந்ததுதானே. உலகத்தவரைப்போல் விஷயாதிகளை அனுபவித்துத் திருப்தி அடைந்து சுகித்திருக்கவெண்ணிய என்னை நண்பனாகவும் குருவாகவும் வந்து தடுத்து நானெவ்வளவு சொல்லியுங் கேளாமல் என் மனதைக் கொள்ளைகொண்டு நின் வசமாக்கிட அதனால் உன்னைக் கண்டு களித்திட அவா மேலிட்டு உன்னை நாட நீ என்னைக் காலாலுதைத்துத் துவைத்துமிதித்து கனமத்தில் போட்டுவாட்டுகிறாய். சுகமாயிருந்த என் மனதைக் கலக்கிட அதனால் நான் வெந்து பரிதவிப்பதைப் பார்த்துப் புன்சிரிப்புகொண்டு கூத்தாடுங் கள்வ, மையல் செய்து மனங்கவரும் மாமாயா நினது திவ்ய தேஜோமயானந்த வுருவங்கண்டதுபோல வென் மனம் நின்னையே நாடுகிறது. என்னை வாவா வென்று கூவி யழைத்து ஆசைகாட்டி மோசஞ் செய்யுங் கள்வ, நீதானோ கருணையங்கடல்? உலகைப்படைத் துயிரை வதைப்பதும் ஓர் விளையாட்டோ? நினைவிட்டு எந்த நாள் பிரிந்தனோ ஐயோ அதுமுதல் மாறிமாறிப் பிறந்து சன்மத்தால் மொத்துண்டு ஐவர் வலையில் சிக்கி மயங்கி அலைந்து தடுமாறி அழுதழுது என் மனமும் புண்ணாயிற்று. நீயும் பிறந்து பிறந்து அவஸ்தைப்பட்டது போதும். என் ஆருயிரே, ஆராவமுதே, இனியான் உன் பிரிவை யாற்றேன். நின்னருளாலன்றி என்மருள் ஒருநாளும் தீராது. மண்ணுண்ட மாமாயா என்னையுமுண்டு நீ பூர்ணமாவாய்!” என்று இவ்வாறு நான் கற்றதையெல்லாம் கிளிப்பிள்ளைபோலக் கூறினேன்.

மாயன் மறைந்திடுவனே யென்று அலைகளுக்கப்பால் கடலில் விளையாடும் அந்தத் தேஜோமயானந்த ரூபத்தையே கண்கொட்டாது பார்த்தேன். அவன் செய்யும் ஆனந்த நர்த்தனத்தைக் கண்டு நானும் காளிங்கன்பேரில் நர்த்தனம் செய்தேன். விஷங் கக்கும் ஐந்துதலை நாகத்தின் மீதேறி அவன் குதித்தாட விஷயங்களின் சென்னிமிசை காலை வைத்து நானுங்குதித்தாடினேன். பார்க்குமிட மெங்குங் காளிங்கன் மீதேறி நர்த்தனஞ் செய்யுங் கண்ணனாகவேயிருந்தது. அடிக்கும் அலையிலும், வீசுங்காற்றிலும், அலையும் இலையிலும், ஜ்வலிக்கும் சூரியனிலும், ஓடும் மேகத்திலும், பிள்ளைகள் விளையாட்டிலும், எங்கும் கண்ணன் ஆனந்தக் கூத்தாடினான். அவனன்றி ஓர்அணுவு மசையவில்லை! தில்லையிலானந்தத் தாண்டவமாடுகிறா யென்றும், பிருந்தாவனத்தில் ஓர் காலத்தில் மோகன வடிவங்கொண்டு யாவர் மனதையும் கொள்ளைகொண்டு கூத்தாடினாய் என்பதும் பொய். இப்போதும் எப்போதும் எல்லாவிடத்தும், பிரமா முதல் பிபீலிகா பர்யந்தம் யாவர் மனதிலும் நின்று நடனஞ்செய்யும் என் கண்ணா ஒன்றும் நீயல்லை, உன்னையன்றி வேறொன்றுமில்லை என்று

கொண்டாடி உள்ளம் பூரித்தேன். முன்னிருந்த விசனமெல்லாம் மாயமாய் மறைந்தது. உலகம் துக்கமென்று நினைப்பதுவுந் துக்கமாயிருந்தது. 'நான் கொடியன், வல்வினையேன்' என்று அலற்றிட நாவெழவில்லை. புகழ்ந்து போற்றிடவும் மனமெழவில்லை. காணுமிடமெங்கும் கண்ணன் கூத்தாடி ஆனந்தமாரி சொரிய எனக்கெங்குமிடமில்லாமல் அச்சுகவாரியில் மூழ்கிக்கிடந்தேன். உலகைமறந்து என்னையுமறந்து பேச்சற்று செயலற்று அவன் மோகத்திலும் ஆனந்தத்திலும் ஈடுபட்டேன்.

கொஞ்ச தூரத்தில் கடற்கரை யருகாமையில் ஓர் மலை தோன்றியது. அப்போது சூரியன் அஸ்தமனமாகிற சமயம். குதூகலத்துடன் விரைவாய் அம்மலையை நோக்கிச் சென்றேன். மலையடிவாரத்தில் சென்று பாறைகளின் மீதேறி கன்றுபோல் குதித்தோடி அப்புறஞ்சென்றேன். அச்சமயத்தில் நான் கண்ட காக்ஷியை என்னென்று சொல்வேன்! பால்போலும் நிறமுடைய நதியொன்று அகன்று ஆழ்ந்து பரந்து, பாலாறு பாற்கடலில் கலப்பதுபோல் கடலில் கலந்து ஐக்யமாயிற்று. இப்படி ஒரே பால் வெள்ளமாய்ப் பிரகாசமாய் அகன்று அன்பாறாய் கடலில் பிறந்து கடலில் கலக்கும் நதியானது அனாதியாய்ப்பிறந்து பிறந்து மேன்மேலும் கர்ம வெள்ளம் பெருக நிலைதடுமாறி குதித்தோடி வீழ்ந்து புரண்டு இளைத்து நைந்து உருகி அகண்ட பரிபூரண சச்சிதானந்தமான சுகவாரிதியை அருட்கடலைக் கண்டுக் குதூகலித்து உள்ளம்பூரித்து அன்பாய்ப் பெருகி ஓடி கலந்து ஐக்யமாம் முக்தர் மனம்போல விளங்கியது. சூர்யபகவான் ராஜ்யபாரந் தீர்ந்ததனால் வெப்பமெலாந் தணிந்து இளவரசாம் சந்திரனுக்கு முடிசூட்டி விரைவாகக் காடுசென்று காடாயந்தரித்து செவ்வானமெனுங் கொடிநாட்டி முகத்தில் தேஜஸ் பளபளவென மின்ன, மேற்குத்திக்கில் ஆற்றுக் கருகாமையில் ஓர் மலையின் அப்புறத்தில் யோகஞ் செய்யச் சென்றார். கீழ்த்திசையை நோக்கினேன். ஆ ஆ என்ன ஆனந்தம்! அகண்டமாய் வெறுவெளியாய்ப் பேரொளியாய் நின்மலமாய் நிராமயமாய் நிஷ்களங்கமாய் சின்மயமாய் சிதாகாசமாய் ஏகமாய் பூரணமாய் மோனமாய் ஆனந்தப் பெருக்காய்க் கிடக்கும் பாற்கடலைக் கண்டேன். அதில் கலந்து ஐக்யமாம் ஆனந்தப் பேருரைக் கண்டேன். கண்டு களித்தேன், ஆனந்தாகார மடைந்தேன்.

இப்படிப் பாவசமாயிருக்குமளவில் பாற்கடலினின்றும், அமிருத கலசம்போல் சந்திரனுதயமானான். அகண்ட சிதாகாசத்தில் ஞானோதயமாவது போல் பூரணசந்த்ரனுதயமாய் உலகெங்கும் ஒளிமாரி பெய்து அமுதஸ்நானஞ் செய்வித்தான். அப்பிரபையின் மத்தியில் மதனமோஹன கிருஷ்ணன் ஆனந்த நடனமாடினான். உருக்கிய தங்கம் போலும் மேனியுடைய கடல் தன் நாதனைக் கண்டு உடல் பூரித்து உள்ளம் பொங்கி புளகாங்கித மடைந்தது. அலைகள் ஓமோம் எனும் பிரம கீதையைப் பாடின. விண்ணவர், காணுதற்கரிய இத்திருவிழாவைக் கண்டு ஆகாயமெங்கும் முத்துப் பந்தலிட்டு மோனக் களிப்படைந்தனர். மண்ணவரும் இவ்வானந்தாமிருதத்தை யுண்டு ஆடிப்பாடி உள்ளங் குளிர்ந்தனர். விண்ணவர் நடத்தும் இத்திவ்ய சந்திரபிரபை உத்ஸவத்தை நான் கண்குளிரக் கண்டேன். உடல் பூரித்தேன். அள்ளிப் புசித்தேன். துள்ளிப்பாடினேன். வாரி அணைத்தேன். சொல்லற்று நினைப்பற்றுச் சும்மாவிருந்தேன்.

இவ்வண்ணம் புலன் வழியாயோடி உள்ளத்தில் சுகவெள்ளம் பாய்ந்து நிறைந்தும் என் அவா அடங்கவேயில்லை. உள்ளத்தில் சுரந்து பெருகி தேகேந்திரியாதிகளால் வழிந்தோடும் ஆனந்தப் பேருரைப் பெருங்கடலை ஆராவமுதை, வெளியே நாடி வீண்காலங் கழித்தேனே யென்று வருந்தி பெருமூச்செறிந்தேன். கற்கண்டே கனியே கனிரஸமே தேனே அமுதமே என்றும் ஒளியே வெளியே ஜோதியே கடலே மதியே என்றும் வாக்கு மனதுக் கெட்டாத அதீதப்பொருளை எளிய யெவையென்றுக் கடலையிரைத்திடப் புகுந்தது போல, வாயால் புகழ்ந்து இந்திரியங்களால் அனுபவித்து அகந்தை யடைந்தேனே. புறச்சுகத்தை நாடி அகச்சுகமென மனமகிழ்ந்தேன். செயற்கையால் வரும் ஆனந்தத்தை இயற்கையென்று மோசம்போனேன். விஷயச்சங்கத்தால் பிறக்கும் இன்பங்கள் அவ்விஷயம் நீங்கியவுடன் தாமும் நீங்காவோ. உண்மையாய் பரம்பொருளைத் தரிசித்தவன் போல மோனக்கடலில் மூழ்கினேன். ஆனந்த பரவசமடைந்தேன் என்று அகந்தைகொண்டு ஐயோ என்ன பெரிய பேச்சு பேசினேன் என என்னை இகழ்ந்துக் கொண்டே நிச்சலமாய் நிச்

சப்தமாய் அங்கு கிடந்த விசாலமான பாறையின் மீதேறி யோக ஆஸனமிட்டு உட்கார்ந்தேன். கண்மூடி கண் வழிநாடி புருவ மத்தியுள் நின்று அப்பாலுஞ் சென்று நெற்றிக்கண்ணைத் திறந்து பிரமாந்தாதந்த்தில் வீற்றிருக்கும் பாஞ்சோதியைத் தட்டி எழுப்பித் தரிசிக்க முயன்றேன். பாற்கடலில் பள்ளிக்கொண்டத் திருவரங்கனை என் மனக்கடலில் காண நான் அவா கொண்டேன். மதி மண்டலத்தி னிடையே காளிங்கன் மீதேறிக் கூத்தாடுங் கண்ணா என்சிதாகாசத்தில் கூத்தாடி என்னைக்,களிக்கச் செய்திடாயோ. நினைப்பு மறப்பெனு மலைபடிக்க, காமாதிகளாம் சுராமீன்களோடி இரைதேடியலைய, எல்லையற்றக் கன்மவாஸனைகள் நிறைந்து ஆழ்ந்து அகன்ற என் மனக்கடலில், ஐந்து தலை நாகமெனும் ஐம்புலன்கள் விஷயமாக விஷத்தைக்கக்க அதனால் மயக்கமடைந்து என்மனம் சருத்துவாட என்னனம்பே நின்கருணையாம் பாதத்தை என் சென்னிமிசை வைத்து புலகாகத்தைப் பிடித்து மிதித்துத் துவைத்து கோடிசூரியப்பிரகாசமாய் காளிங்கன் மீது ஆநந்தக் கூத்தாடும் மோகன மாயா, கள்வ மனதைக் கலக்கிக் கலக்க முண்டாகச் செய்வதே உன் வேலையோ மண்ணை விழுங்கின பெருவாயா என்னையும் விழுங்கி நிறைந்திடாயோவென்றுப் பெருமூச்சுவிட்டுப் பரிதவித்தேன். அவன் உருவை நாடினேன். குணங்களை நினைத்தேன். சச்சிதானந்த ஸ்வரூபத்தைத் தியானித்தேன். உலகை மறந்து என்னையுமறந்துஎன் னுருயிரின்குணத்திலும் ஸ்வரூபத்திலும் அருளிலும் ஈடுபட்டேன்.

இருள் மூடி மருள்மயமா யிருந்தவென் மனதிலப்போது திடீரென்று மதியொளிபோலும் ஓர் பேரொளி பிறந்து எங்கும் நிறைந்து வியாபித்தது. அவ்வொளி மாரியில் ஸ்நானஞ்செய்து உள்ளங் குளிர்ந்தேன். இது கண்ணொளியோ சித்தொளியோ வென்று வியப்படைந்து சந்தேகமுற்று இருள் நிறைந்த வோர் குகையில்சென்று உட்கார்ந்து கண்மூடி மறுபடியும் அருளொளிவரவை அவாவுடன் எதிர் பார்த்திருந்தேன். முன் கண்ட மதியினொளிமீளவுந்தோன்றி எங்கும் பரந்தது. புறவெளி கண்ணொளியாய், கண்ணொளி மனவொளியாய், மனவொளி சிதாகாசமாய்ச் சூழ்ந்து அகன்று எங்கும் பிரகாசமாய் அகண்டமாய் ஏகமாய் சிதாதித்தனாய் சுயஞ்சோதியாய் துரிய வெளியாய் அமுதவெள்ளமாய் ஆனந்தப் பெருக்காய் ஞாலமெலாமுண்டு எங்குந்தானாய்

சூழ்ந்தகன் றாழ்ந்துயர்ந்து முடிவில்பெரும் பாழே
சூழ்ந்ததனிற் பெரியபர நன்மலர்ச்சோ தீயோயோ
சூழ்ந்ததனிற் பெரியசுடர் ஞானவின்பமேயோ
சூழ்ந்ததனிற் பெரிய வென்னவாவறச்சூழ்ந்தாயே

என்றபடி அகண்ட சச்சிதானந்தத்தில், லிங்கத்திலிருந்து வெளித்தோன்றிய அகண்ட ஜோதியைப்போல், அனலுண்ட இருப்புண்டைபோலும் என் மனமொளிக்கடலாய் விளங்கியது. சூரியனைக்கண்ட பனிமலைகள் உருகிக் கரைந்து கடலில் கலந்து கடலாவதுபோல் தேகேந்திரியங்கள் வாக்கு மனமெல்லாம் நாமரூபமிழந்து தாமும் பாழான பெருவெளியில் சிதாகாசத்தில் கரைந்து மறந்தன. இது கனவோ நனவோ வென்று அதிசயமடைய, இப்பெருவெளியினின்றும் அப்பிராகிருத தேஜோமயானந்த திவ்ய மங்கள மோஹன விக்ரகமாய் வேய்ங்குழல் கொண்ட வேணுகோபாலன் தோன்றி புன்னகையாம் ஜீவாமிருதம் பொழிந்து களித்து ஆடினான். மண்ணீரனல் நிலம் அண்டபகிரண்டம் பிரம்மாதி தேவர் அசுரர் முனிவர் ரிஷிகள் முதலிய சராசரம்யாவும் அவ்வேணுகானத்தைக் கேட்டு உடலுருகி உயிர் கரைந்து அருள்பாதத்தைநாடி தம்மை மறந்து, மனமோஹனானந்த வடிவில், தேனுண்ட வண்டுபோல் ஈடுபட்டு லயித்துப் பரவசமாய்க் கிடந்தன. ஏராமாவென ராமனாய் சிவமே என சிவமாய் நடராஜனாய் தக்ஷிணாமூர்த்தியாய் நினைத்த வடிவமெலாந் தானாய் ஒரே ஜோதியாய்ப் பிரகாசிக்கும் ஆருயிரைக்கண்டு,என் மனதில் எல்லையிலின்பம் சுரந்து ஆறாய் பெருகி ஓடிற்று இப்படி உருவமாயும் ஒளிவாயும் மாறி மாறி காக்ஷிகொடுத்து என்னை ஆட்கொண்ட போருள்ளனை நினைந்து நினைந்துப் புகழ்ந்து போற்றினேன். சாந்தானந்தத்தில் மூழ்கினேன். நினைத்தலுந் துக்கமென்று நினைப்பற்று மோனமாய் நின்றேன். கருவிகரணங்களோய்ந்து மனஞ்செயலற்று மோன வெளியானேன்.

இப்படி வெகு நேரம் கண்மூடி உலகமற்று நானிறந்து யாவுந்தானாய் நின்ற பாஞ்சோதியை நிர்வாஸனா மௌன வானந்தத்தை அனுபவித்து வெய்யலிலிட்ட விளக்குபோல் அதில் ஐக்யமானேன். எவ்வளவு நேரமிம்மாதிரி யிருந்தேனோ எனக்குத் தெரியாது. கடைசியில் கண்விழித்துப் பார்க்கும்போது எங்கும் முன்போல ஒரே வெளியாய்ப் பரவெளியா யிருந்தது. ஆனலிப்

போது அது ஜடவொளியாய் மழுங்கி யிருந்தது. கண்ணுக்குப் பார்ப்பதே துக்கமாய் உள் நோக்கி செயலற்று நின்றது. சிதாகாசத்தில் சென்றிருந்த என் உயிர் இப்போது தேஹத்தில் இறங்கி நிறைவதாய் நான் நினைத்தேன்.

புறவொளிபோல இம்மன வொளியும் ஜடமோ அல்லது சாஸ்திர வாஸனைகொண்டு மனங்கற்பித்த கனவோவென்று அதிருப்தி அடைந்து மீளவும் அப்பிரகாச வெள்ளத்தில் மூழ்கிப் பார்த்தேன். ஒரு வேளை இது, திரிபுரந்தானடி ஜோசத் திரையை நீக்கிட அங்கே ஒரேபிரகாசமாய் விளங்கும் ஆன்ம ஜோதியோ அல்லது ஆன்மாவையும் ஜடமாக்கி அதை விளக்கும் ஸ்வப்பிரகாசமான பாற்கடல் பரஞ்சோதியோ வென்று ஐயமுற்று மனங்கலங்கினேன். ஜீவவொளி இவ்வளவு அகண்டமாய் காணுமோ; பரவொளியாயின் அதிருப்தியும் சங்கையு முண்டாமோ வென்று என்மனம் சலித்து அலைந்தது. ஆத்மா நிலையற்று பாதவித்தது. விவகார துக்கம் மனோதுக்கமாய், மனோதுக்கம் இப்போது ஆன்மதுக்கமாய் வாவா துக்கம் மேலிட்டுப் பெருகுகிறதே யொழிய கொஞ்சமேனும் தாபந் தணியவில்லையே. தாகம் நீங்கவில்லையே என்ன செய்வேன்! குருவாக வந்து என்னை இப்போது கைகொடுத்துக் காப்பாற்றினாலல்லது என் சஞ்சல மொருநாளுந் தீராதென்று மறுபடியும் பெருமூச்சு விட்டுத் துயரமடைந்தேன்.

அச்சமயத்தில் உயிரைக் கரைக்கும் வேதகானம் எங்கிருந்தோ என் காதில் விழ்ந்தது. அமுதினுமினிய குரலுடன் என்னை யாரோ அழைத்ததாக எனக்குத் தோன்றியது. மனந்திடுக்கிட்டது. தேகம் மயிர்கூச்செறிந்தது. என்னை யாள வந்த என்நாதனோ வென்று அக்குரல் வந்த திக்கை உற்று நோக்கினேன். அப்போது சுமார் 9 மணி இருக்கலாம். நிலாவெளிச்சத்தில் கல் முள் செடி ஒன்றுங் கவனியாமல் அம்மலையில் ஏறிக் குதித்துத்தாவி ஓடி அச்சப்தம் வரும் வழியே சென்றேன். தூரத்தில் திவ்ய காந்தி வீசும் மகா புருஷர் ஒருவர் என் கண்முன்னே என்னை அழைப்பதாகத் தோன்றியது. அதனால் மனங்களித்து மனோ வேகமாய் அவரிட மோடினேன். அவருமோடினார். கிட்ட வரவா மறைந்து தூரத்தில் தோன்றி, இம்மாதிரி நானோட அவரோட வெகுநேரம் அம்மலைக்காட்டில் ஓடி அலைந்து சோர்ந்து அயர்ந்திட்டேன்.



# நாகாநந்தம்

## NAGANANDA : A CLASSICAL DRAMA

அங்கம்—3. களம்—2.

அதே இடம்—ஓர் தாமல மரசாலை

(நாயகன் தனது நேசனுடனும், நாயகி தனது தோழியுடனும் வரல்)

**விதூஷகன்.**—இங்கு இதோ! இதுதான் தாமலமரசாலை. அம்மணீ! இந்தச் சரத்கால ஸூரியனது தாபத்தால் தங்கள் முகம் வாட்டமடைந்திருக்கிறது. இந்தப் பளிங்கு மேடைமேல் சற்று உட்காரும்.

**நாயகன்.**—அன்பா! நீ சொல்லியது வாஸ்தவமே!

மன்னுங் காமர் விளங்குறூஉ மாமுகம்,
கன்ன சோபை கலக்கிவெண் மதிவெள்க
தன்னும் பகற்கண் தொடர்தரூஉ மரைவென்று,
பொன்னும் வெள்கப்புகழ்ச்செறீஇக் காண்கலான்

(மலையவதியின் கையைப் பிடித்துக்கொண்டு) ப்ரியே! நாமிங்கு உட்காரலாம்.

(யாவரும் உட்காருதல்)

**நாயகன்.**—(நாயகியின் முகத்தை நிமிர்த்திப் பார்த்துக்கொண்டு)

உய்யா வெம்வர மனமுற்ற வெம்மால்,
மெய்துயர் வாட மெல்லியல் நின்றனை
வாவென் றழைத்து வீணை வருத்தினம்!—
புரூர மென்னு புரையின் வல்லியும்
பொருமிதழ்ப் பவழப் பொன்னார் தளிர்களு, மதான்று
விரிவரி செங்கண் மலர்கள் பூத்தும்
வாயெனு மோடைவாய் வளர்கட் சுரந்தும்
ஓயா முத்தம் உணர்ச்சியி னெரித்துங்
கருங்கொண் டலெனும் கவர்மயிர்த் தவழ்ந்தும்
இளம்பிறை நெற்றியி னினிமைநிலா வீச
விளங்குறூஉ நின்முகம் விழைவுறூஉம் விஞ்சையர்
தவழ்குறூஉந் தண்ணிய தருவின மன்றே!

**தோழி.**—(புன்சிரிப்புடன், விதூஷகனை நோக்கி) நாயகி எவ்வாறு வர்ணிக்கப்பட்டாள் கேட்டியோ?

**விதூஷகன்.**—சாதுரிகே! இப்போது கர்வம் வேண்டாம்! நம்ம நடுவில்கூட ஒருவன் வர்ணிக்கப்படக்கூடியவன் ஒருவனிருக்கிறான். ஆனால் ஒருவரும் அவனை, பொறாமையினால், வர்ணிக்கிறதில்லை.

**தோழி.**—(சிரித்துக்கொண்டு) நான் உன்னை வர்ணிக்கிறேன்.

**விதூஷகன்.**— (குதூஹலத்துடன்) ஹா! அர்யே! எனக்கு இப்பொழுதுதான் உயிர்வந்தது! ஸரி, பெருமாட்டி நீங்கள் அப்படியே செய்யுங்கள். இந்த மனுஷன் இனிமேல் 'நீ இந்த மாதிரி இருக்காய், அந்தமாதிரி இருக்காய், நீ கருகுரங்கு போலிருக்கிறாய்' இந்தமாதிரி சொல்லாமலிருக்கும்படியாக செய்யுங்கோள்.

**தோழி.**—நீங்கோ கலியாணத்லே கண்விழிச்சிக்கிட்டு இருந்து அப்பொறம் கண்ணை மூடிக்கிட்டு தூங்கிட்டீரே, அப்போதிக்கி நன்னா இருந்தீங்கோ. அதே மாதிரிக்கி நீங்கோ இப்பொதிக்கிருங்கோ. நான் ஒங்களே வர்ணிக்கிறேன்.

**விதூஷகன்.**—(அவ்வாறே செய்கிறான்)

**தோழி.**—(தனக்குள்) அவன் கண்ணைமூடிக்கிட்டிருக்கச்சே இந்த தாமல எலையைப் பிளிஞ்சு அவன் மொகத்தெ கருக்கச் செய்ரேன். (எழுந்து தாமல இலையைப் பிழிகிறாள்)

(நாயகனும் நாயகியும் விதூஷகனைப் பார்க்கிறார்கள்)

**நாயகன்.**—நேசா! நீ அதிருஷ்டசாலி! நாங்கள் இங்கு வீணே இருக்க நீவர்ணிக்கப்படுகிறாய்.

**தோழி.**—(விதூஷகன் முகத்தைத் தாமலச் சாற்றால் கறுக்கச் செய்கிறாள்).

**நாயகி.**—(நாயகனைப் பார்த்து சிரிக்கிறாள்)

**நாயகன்.**—(நாயகி முகத்தை நோக்கி)

கண்ணி னினிமைகொள் காதலி நின்முக
நண்ணும் பவளத்தை நாண்படுத் தாரிதழ்
வண்ண தளிர்க்கிடை மலர்தரூஉ மார்நகை
எண்ணக் காய்ப்பல னென்கண்ண தென்னே!

**விதூஷகன்.**—அடி தாசி! என்னடீ செய்தாய்?

**தோழி.**—இப்போத்தான் நீங்கோ வர்ணிக்கப்பட்டீர்.

**விதூஷகன்.**—(முகத்தைத் துடைத்து, கையைப்பார்த்து, கோபத்துடன் தடியை யோங்கி) அடிக்கீழ்க்குலப் பட்டிமுண்டை! ஆனால் இது ராஜக்குஹம்! உன்னை யான் என்ன செய்யலாமடீ! (திரும்பிப் பார்த்து) இங்குப் பார்!

உங்களிருவர் முன்பும் இந்த வெட்கங்கெட்ட நாரி என்னை இப்படி உருவு கெடுத்தாள்! நான் ஏன் இங்கு இருக்கவேண்டும்? நான் வேறு எங்காவது போகிறேன். (போகிறான்)

**தோழி.**—நிஸ்சயமா நல்ல அத்ரேயன் என்னால் கோபமடைந் திருக்கான். நான் போய் அவனை ஸமாதான படுத்தரேன் (போக விரும்புகிறாள்.)

**நாயகி.**—அடீ சாதுரிகே! என்னடீ அது? என்னைத் தனியாகவிட்டு நீ போக விரும்புகிறாய்?

**தோழி.**—(நாயகனை நோக்கி, சிரிப்புடன்) நீங்களிப்படிக்கே நெடுநேரம் இருக்க! (போகிறாள்).

**நாயகன்.**—(நாயகி முகத்தைப் பார்த்து)

எயிற்றுக் கேசர வின்னிதழ்ப் பவளத்தின்
பயிற்றும் வெய்யலின் பங்கயங் காட்டிடு
மயிற்று ணைப்படு சாயனின் வண்டினன்
குயிற்றுந் தேன்கொளக் கண்டிலேக் கொம்பனாய்!

**நாயகி.**—(சிரித்து முகத்தைத் திருப்பிக் கொள்கிறாள்)

**நாயகன்.**—(மறுபடியும் அவ்வாறே கூறுகிறான்)

(நேபத்தியத்திலிருந்து தாதி ஓடிவரல்)

**தோழி.**—(பரபரப்புடன் வந்து) ராஜ குமாரனைப் பார்க்க வேலையுடன் தலைவன் மித்ராவஸு வருகிறார்.

**நாயகன்.**—ப்ரியே! நீ விடுபோ. நான் மித்ராவஸுவைக் கண்டுவிட்டு சீக்கிரம் வருகிறேன்.

(நாயகி தோழியுடன் போதல்)

(மித்ராவஸு வரல்)

**மித்ராவஸு.**—(தனக்குள்)

பகைவனைக் கொல்லாது பாவியேன் நாணிலாது
வகையிலா வுரையால் ஜீமூத வாஹன!
உனது நாடு ஒன்னலார்
தனதெனக் கொண்டனரென் றுரைத்தலுந் தகுமே!

**நாயகன்.**—(மித்ராவஸுவை நோக்கி) மித்ராவஸு இங்கு உட்காரும்.

**மித்ராவஸு.**—(உட்காருகிறான்)

**நாயகன்.**—(ஆலோசித்து) மித்ராவஸு! உன்னைப் பார்த்தால் அலண்டிருப்பதாகப் படுகிறதே.

**மித்ராவஸு.**—அந்தப் பாவி மாதங்கன் விஷயமாய் என்ன குழப்பமிருக்கு மென்று?

**நாயகன்.**—மாதங்கன் என்ன செய்தான்?

**மித்ராவஸு.**— தன்னழிவை முன்னிட்டு உனது நாட்டைக் கைப்பற்றியிருக்கிறான்.

**நாயகன்.**—(கிளர்ச்சியுடன்—தனக்குள்) இது வாஸ்தவமாக இருக்குமோ?

மித்ராவஸு.—அரசு அவனுடைய அழி விற்கு உத்தர வளிக்கக் காத்திருக்கிறேன்.

ஆணையைத் தருமின் ஆலஸ்ய மின்றி
வீணிற் காலம் போக்காது மிகைப்படூஉம்
படர்களைக் கூஉய் பாரியச் சிலீமுகப்
படைகளை நாணிற் படுத்தித் தொனித்து
வகைவகை வளரூஉம் வருதினி யதனை
கூழை தூசி கோழையில் மனத்தரால்
மாரதர் பட்ட மாறு விஞ்சையர்
மாரதக் கூட்டம் மண்ணைக் கிளப்பித்
தூசியில் ஸூர்யன் கிரணந் தொலைத்து
காற்பட நடக்கும் மாற்பெரு மலையெரித்து
குரகதப் படையின் குரத்தா னிடித்து
மரகத மலையும் பதுமரா கம்பட
விரகிற் சென்று விரிகண் நீக்கொட்டி
வாய்ப்பற் கடித்து மயிர்க்கூச் சிட்டு
இதழ்த்துடிப் பெய்த இதயங் கிளர்ச்சித்து
மதம்பொழி யானையின் எதிர்த்தரை மோதி
வேரறச் செய்து வீறியங் காட்டி
ஸாமந் தருங்கண் டடங்கி தமநிலைப்
பட்ட வாகி பார்த்திவ! நின்பால்
இட்டங் கொண்டிட இயற்றுது—மதான்றி
படைப்பெருஞ் சேனை வேண்டுமென்? பண்பினேன்
ஒருவனே னென்கைத் தருவாள் வீசி
கையொடு கைவாங்கி கவர்த்திடுந் திரமையின்
கோபந்திட்டுவேகங் குடைந்து, மலைபடூஉம்
தறுகண் சியம் புழைக்கைத் தந்தியை
மருப்பு முருப்பு மயங்க புடைத்தாங்கு
மாதங் கன்றனை மாய்ப்பதும் காண்குவை
பாவி யவன்றலை பற்பொடிப் படவே!

நாயகன்.—(செவியை மூடிக்கொண்டு தனக்குள் அந்தோ! என்ன கொடூரமாகக் கூறுகிறான்! இப்படித்தானிருக்கட்டுமே!

(வெளிப்படையாக) மித்ராவஸு! இது என்ன உனக்கு வரவா செலவா? உன்னைப்போன்ற வீரனுக்கு இதைக் காட்டிலும் செய்யமுடியும்.

கேளா வொருவர்க்கு மெய்யுங் கிளரன்பின்
மீளா வளிக்குமார் மொம்ப்பனேன்—வாளா
புனற்சிந்து பாய்நாட்டிற் காகப் பொரும்புன்
புனற்சிந்து பாய்ப்படைப் போழ்ந்து?

மேலும் தரும மற்றதைத் தவிர்த்து வேறெதையும் எனக்குப் பகையென எண்ணுவதில்லை. உன்னால் எனக்கேதேனும் செய்ய முடியுமானால், அந்தப் பேராசைப்பேயா லாடுமவனிடம் அநுதாபங்கொள்வீராக!

மித்ராவஸு.—(வெறுப்புடன் சிரித்து) இவ்வளவு தயாள மூர்த்தியான எங்களுடைய கருணாநிதியிடம் அநுதாபங் கொள்ளாதெப்படி இருக்க முடியும்!

நாயகன்.—(தனக்குள்) இப்பொழுது கிளம்பிய கோபத்தால் அவன் மனம் மூடப்பட்டிருக்கிறது. அதை வேறு வழியில் பாயச் செய்வது கஷ்டம். ஆனாலும் இப்படிச்செய்வோம். (வெளிப்படையாக) மித்ராவஸு! எழுந்திரு; நாம் உள்ளே போகலாம். அங்கு போய் எல்லாம் தெரிவிக்கிறேன். இப்பொழுது அந்திவேளையாயிற்று. அதோ பார்!

காமர் வண்டர்தாம் மயங்கி கங்குல்வாய்
தாமரையிற் பட்ட பந்தந் தவிர்க்கவும்
மாந்தர் விருப்பின் வகைபட வென்றே
ஞால முழுதும் சாலொளி வீசியும்
வித்தர் யாவரும் பத்தியின் தழீஇ
வாய்த்தரூஉ மிசையின் வாழ்த்த
மலைபால் வீழ்தரூஉம்
கலையோன் றன்னைக் காணுதி யைய!
அலைந்தலைந் தென்றும் அன்பே யுருவாய்
பிறர்நல மதற்கே ஆறுது சுழன்று
உழைத்திடு ஞானப் பழிச்சுதி
அவனே புகழ்க்குறூஉஞ் சிவத்தின னன்றே!

மூன்றம் அங்கம் முற்றிற்று.

களம்—4. அங்கம்—க

மலையமலைச்சாரல்—கௌரியாலயம்

(ஒரு ஜதை சிகப்பு வஸ்திரத்துடன் பராபத்யன் ஒரு பிரதிஹாரனோடு வரல்.)

பராபத்யன்.—

அந்தப்புரத்து நடப்ப தனைத்தும்
சிந்தையிற் றெளிந்து, முந்திய வயதால்
இடற வளைந்த இவ்வுடற் றன்னை
தடங்கழி தன்னால் தமொற்றந் தாக்கி
ஊரிடை நடக்கும் உருதொழி லறிந்துப்
பாரிடை ஞாயம் பயக்க
கோல்கொடு கீழ்மைக் கொன்று தூய்மை
ஞாலமடைதர நலந்தனை வழிவழி
மதநெறி செய்பு மன்னவ னென்னை
யானு மீண்டும் அமைந்தன னன்றே!

பிரதிஹாரன்.—ஐயா! வஸுபத்ரரே! நீர் எங்கு போகிறீர்?

பராபத்யன்.—அரசிளங்குமாரன் மித்ராவஸுவின் தாயாகிய மஹாகனம் பொருந்திய மஹாராணி அவர்களால் "பராபத்யா! நீ பத்துதினம் சிகப்பு வஸ்திரம் மலையவதிக்கும் என் மருமகனுக்கும் எடுத்துப் போகவேண்டும்" என்று

ஆணை இடப்பட்டிருக்கிறேன். அரசி மலையவதி இப்பொழுது அவரது மாமனர் வீட்டிலிருக்கின்றனள். ஆனல் இளவரசுவுடன் ஜீமூதவாஹனர் கடற்கரை காண இன்று போனதாகக் கேள்விப்பட்டேன். ஆகையால் நான் அரசியிடம் செல்வதா, அரசகுமாரனிடம் செல்வதா என்று மயங்குகிறேன்.

சேவகன்.—ஐயா! தாங்கள் அரசியிடம் போவதே தகும். இதற்குள் இராஜகுமாரன் வீடுவந்தும் இருக்கவும் கூடும்.

பராபத்யன்.—நீ சொல்லியது ஸரிதான். ஸுநந்தா நீ எங்கு போகிறுய்?

சேவகன்.—'வரும் தீபாவளியில் நமது மலையவதிக்கும் மருமகனுக்கும் ஸமயத்திற்குகந்த வரிசை செய்யவேண்டியதைக் குறித்து செய்ய வேண்டியதைப் பார்த்துக்கொள்ள வா மித்ராவஸுவிடம் சொல், என்று மஹா கனம் பொருந்திய அரசன் விச்வாவஸுவால் ஏவப்பட்டிருக்கிறேன். ஆகையால் நீ அரசியிடம்போ. நான் இளவரசு மித்ராவஸுவிடம் போவேன் (இருவரும் போதல்)

களம்—2. மலயமலைச் சாரல்—கடற்கரையோரம் ஓர் வனம்.

(ஜீமூதவாஹனன், மித்ராவஸுவுடன் வரல்)

நாயகன்.—புல்வளர் இடமது படுக்கை யாகும்வெண்
கல்க ளிவையெலாம் களங்கமில் தவிசாம்
கொடிபடர் மாமீது குடியிருப் பாகுமால்,
கடிதவீ ழருவி குடிக்குநீர் தரும்வேர்
படுங்கிழங் கிவைதாம் பகருண வாகுமென்
னடையில் பிணையதே நண்பனுரு மதான்றி
விரும்பிய பொருளை விரும்புமுன் னளிக்கும்
அருநிலை வாய்ந்த அடவியீ தெனினு
குறையு முண்டு குறிப்பல்
அறைந்திடி லொன்றே.—
வேண்டா தளிக்கும் மேன்மையி னீண்டு
சாயா நன்மை தண்மையி னியற்ற
வாயாக் காலத்த வாளா
காலங் கழிப்பது கடனு மாமே!

மித்ராவஸு.—(மேல்நோக்கி) அரசே! சீக்ரம்! சீக்ரம்! அலை உள்பாயும் ஸமயங் கிட்டிவிட்டது!

நாயகன்.—(கேட்டு) நீ கூறியது நன்று!
காதை யொடுக்கிடுங் காரிடி யென்ன
ஓதை செய்தலைத் துறுகண நடுங்க
ஒன்றின்மே லொன்றாய் உராய்திடித் தெதிர்த்து
தன்றிடு நீரானை கலக்கிடு மார்பின்
தன்றிபடர்ந் தலற்றும் தொடரலை இறைப்ப
மலைபடலேம் முழையெலாம் மயங்கி நடுங்கி
எதிரொலி எழீஇ ஈரொலி குலாஅய
மலைதரும் பொன்னை மாட்சியி னடைதரச்
சங்கொடு சிப்பியும் தண்கடல் பொருளையும்
எங்கு மிரைத்து எழீஇ
நங்கெதிர்க் கொள்ள நாடிய தென்னே?

மித்ராவஸு.—அது இங்கும் வந்துவிட்டது! அதோ பார்!
மதநல் யானை மிதமிலா துண்ட
இலவங்கங் கக்கி கலங்கிக் கெழுமணஞ்
சுருமி னுண்டுரு வாய்மணங் கொழித்
தருஅமி தலைத்தாழ்ந்திடைப் படுத்த
கடல்படு மணியின் படரொளி வீசி
காற்படு சிலம்பின் கலீரென வார்த்தவ்
அலையின் தவழ்ந்து நடையுறாஉக்
காட்சியைக் காணிய காவலர் ஏறே!

வா! நாம் போவோம். சிறு குன்றின் வழியாய்ச் சென்று கடல் அலைபடரும் இடம் விட்டகல்வோம். (யாவரும் போதல்)

அங்கம்—4 களம்—2.

மலையின் உச்சியிடம்

(ஜீமூதவாஹனனும் மித்ராவஸுவும் வரல்)

நாயகன்.—(அரங்கை நோக்கி) மித்ராவஸு! இதோ பார்!
காண்டியிம் மலையக் கார்வரைத் தானும்
மூண்ட வெண்கனங் கவிந்து மூடிய
பனிக்குவ டனைய தனிமை கொண்டதே!

மித்ராவஸு.—அரசிளங்குமர! இவை இந்த மலையமலையின் கற்பாறைகளன்று; ஸர்ப்பக்கூட்டங்களின் எலும்பின் குவையல்களே இவை.

நாயகன்.—(வ்யஸனத்தும்) ஹா! கஷ்டம்! இந்த நாகங்கள் எவ்வாறு இப்படி ஒரே ஸமயத்தில் நாசமடைந்தன?

மித்ராவஸு.—ராஜகுமார! இவை ஒரே ஸமயத்தில் சாவடையவில்லை. இதன் காரணம் இன்னதென்று கேள். தனது சிறகால் சமுத்ர சலத்தையெல்லா மிறைத்து, பாதாளஞ்சென்று கருடன், இதற்குமுன் நாள்தோறும், இந்நாகங்களைக் கொத்தியும் குத்தியும் தன் வயிறார உண்பது வழக்கமா.—

நாயகன்.—(கஷ்டத்துடன்) என்ன அந்தோ! என்ன கொடுமையவன் செய்தான்?—அதன் பின்?

527



**மித்ராவஸு.**—யிருந்தது. நாக வம்சம் நாசமடைந்துவிடும் என்று பயந்து ஸர்ப்பராஜன், வாஸுகி, கருடனை வேண்டிக்கொண்டான்.

**நாயகன்.**—(ஆத்திரத்துடன்) "என்னை முன் உண்டுவிடும்" என்று அவனை வேண்டினன்?

**மித்ராவஸு.**—இல்லை; இல்லை.

**நாயகன்.**—பின் என்ன?

**மித்ராவஸு.**—இதுவே அவன் வேண்டுகோள்.—

பறவை மன்ன! பண்பார் கருட!
உறமுன்னு விடுக்கனல் கருவழிந் தனராம்
கருவிழி மகளார் கணக்கிலை; உன்னை
திருத்திக் கழிக்கா வரியினங் காண்டிடில்
உயிர்த்துறந் திடுமால்; பயிலுமெம் ஸந்ததி
யின்றிமாய்ந் திடுங்காண். நன்றிலை யுனக்கும்.
உன்னெண முற்று முலைந்திடு மதனாலிவ்
வலைவழி வழியே அன்றன் றுனக்கு
தலைமணிக் கொண்ட சர்ப்பத் தொன்றை
உறுபலி யாக்குவேம் உகந்திடும்
உன்மன வழியின் தன்மையின் முறையே!

**நாயகன்.**—அந்தோ! ஸர்ப்பராஜன் இப்படியா காப்பாற்றுகிறான்? என்ன? பாபம்.

இருபது நூற்று நாக்களி னிடையே
ஒருநா விலையா லுரகப் பகையோன்
உறும்பகை தன்னை யறச்செயக் 'கொள்ளுதி
யிவ்வுடற் கொழுத்தனை கவ்வியங் நாகர்தம்
பகையை யகற்றுதி பண்பினேன் தனையுண்'டென்
றுரைபகர்ந் தினிய கருணைப் பொழிந்த
இன்ப நிலைஇய அன்பின் திறத்தே.

அதன்பின் என்ன?

**மித்ராவஸு.**—பக்ஷி ராஜனால் அவ்வாறு ஒப்புக்கொள்ளப்பட்டது.

நாளிற் கொன்றென் றிணங்கி யவ்வாறென
கான சர்ப்பங்கள் கருடன் கையிற்பட்டு
வாளொ ளிக்குமிவ் வென்பின்வெண் மாக்குவை
மீளில் வெண்குவட் டிற்கின மீன்றதே!

**நாயகன்.**—(ப்ரமையுடன்)

மடமை யீதந்தோ! தெளியா மனத்தோடு
படுமுட லிதற்காய் பாழுமிவ் வுடற்காய்
கொடுமை வாழுமிவ் குடிவீ டிதற்காய்
அநீதி செய்வது மாந்தர்க் கமைந்ததே!
அந்தோ என்கதி நாகர் அடைந்ததே?

(தனக்குள்)

என்னுயிர் அளித்தோர் பன்னகந் தனையேனும்
காத்தலாகுமென்? காத்தலு மாமே!

(ஓர் ஊழியன் வரல்)

**ஊழியன்.**—மலையின் உச்சியை அடைந்தேன்; மித்ராவஸுவைக் காணவேண்டும். (முன்வந்து) மருமகன் அருகு நிற்கின்றனர்—(அருகுவந்து, வணங்கி) அரசிளங்குமாரகாள்! உமக்கென்றும் ஜெயமுண்டாகுக!

**மித்ராவஸு.**—ஸுநந்தா! எதன் பொருட்டிங்கு வந்தாய்?

**ஊழியன்.**—(காதில் என்னமோ மெதுவாய்க் கூறுகிறான்)

**மித்ராவஸு.**—ராஜகுமார! தந்தை என்னைக் கூப்பிடுகிறார்.

**நாயகன்.**—போம்.

**மித்ராவஸு.**— தாங்களுமிங்கு, ஆபத்திற்கே இடமான இந்த இடத்தில், நெடுநேர மிருக்கலாகாது. (ஊழியனுடன் போதல்)

**நாயகன்.**—நான் இந்த உச்சி தலத்தை விட்டிறங்கி கடற்கரை செல்வேன்—(போதல்)

## அங்கம்—3

மலையமலைச் சாரல்—கடற்கரை

(ஜீமுதவாஹனன் வியசனத்துடன் வரல்)

**நேபத்தியல்.**—அந்தோ! என் அருமைக் குழந்தாய்! சங்கசூடா! இன்றைக்கு, நீ கொல்லப்படு நேரத்தில் நான் எப்படியடா உன்னைப் பார்ப்பேன்?

**நாயகன்.**—என்ன? ஓர் ஸ்திரீயின் அழுகைக் குரல் போலிருக்கிறது! நான் சென்று அவள் யாரென்றும் என்ன துன்பமடைந்தா ளென்றும் அறிவேன். (முன்வரல்)

(சங்கசூடன், தனது வயது முதிர்ந்த தாயுடனும், ஒரு வேலைக்காரன் ஒரு சதை துணியுடனும் வரல்)

**கிழவி.**—அய்யோ! என் அருமைக் குழந்தாய்! நீ கொலை யுண்ணுங்காலத்து நான் எவ்வாறடா பார்க்க முடியும்? (அவன் முகத்தைத் தடவி) எனது ஹிருதயமும், இப்பாதாளலோகமும் இம்முகச்சந்திரன் ஒழிந்ததும் இருண்டுவிடுமேடா!

**சங்கசூடன்.**—அம்மா! தாங்கள் இவ்வாறு துன்பமிகுதியால் என்னை ஏன்தொந்தரை செய்கிறீர்கள்?

**கிழவி.**—(நெடுகப்பார்த்து, தன் மகனது உடம்பைத் தடவி கொடுத்து) அடே என் செல்லமே!

ஸூர்யனுடைய கிரணத்தைக் காணாத இந்த மெல்லிய சரீரத்தை அந்தக் கருணையற்றகருடன் எவ்வாறடா உண்ணும்? (அவனைக் கட்டிக்கொண் டழுகிறாள்)

**சங்கசூடன்.**—அம்மா! தாங்கள் அதிகமாகத் துக்கப்படாதியும். யமன் அன்று பிறந்த குழந்தையையும் கொள்கிறான்.......................... ஆகையால் துக்கத்திற்கென்ன காரணமிருக்கின்றன. (விடுவித்துக் கொண்டுபோக முயல்கிறான்)

**கிழவி.**—உன் முகத்தைச் சற்று பார்க்கும் வரை இங்கு நிற்பாய்.

**வேலைக்காரன்.**— (வெறுப்பொடு) அரச! சங்கசூட! வாரும். உளறுமிந்த தாயுடன் உமக்கென்ன வேலை? அவளுடைய மகன்மேலாசை அரச ஆணையை அறிய முடியவில்லை.

**சங்கசூடன்.**—இதோ வந்து கொண்டிருக்கிறேன்.

**வேலைக்காரன்.**—(தனக்குள்) கொலைப்பாறை வரை இவனை அழைத்து வந்து விட்டேன். பலிக்குறி யாகிய இவ்விரண்டு சிகப்பு வஸ்திரங்களையுமிவனிடங் கொடுப்பேன். அவனுக்கப்பாறையுங் காட்டுவேன்.

**நாயகன்.**—(நோக்கி) இவள்தான் அவள்! இவளுடைய அழுகைதான் அது. (சங்கசூடனைப் பார்த்து) இவன் அவள் மகன்; அவனுக்காகத் தான் அழுகிறாள். (சுற்றுமுற்றும் பார்த்து) அவளுடைய கஷ்டத்தின் மூலமென்னவென்று விளங்கவில்லை; என்னவாய் இருக்கலாம்? நான் கிட்டப் போய் கேட்கலாமா? அல்லது—ஏன்? அவர் கூறுவது வெளிப்படையாகத்தான் இருக்கிறது. அவர் பேசுவதிலிருந்தே நான் அறியலாம். இந்த மரத்தின் மறைவிலிருந்து கேட்பேன். (அவ்வாறே செய்கிறான்.)

**வேலைக்காரன்.**—(கண்ணீர்விட்டு கைக்கட்டிக் கொண்டு) அரச சங்கசூட! இதை, இந்தக் கொடுநெஞ்சன், அரசன் ஆணையினால் கூறுகிறான்.

**ஸங்கசூடன்.**—நண்ப! கூறுவாய்.

**வேலைக்காரன்.**—மஹிமை தங்கிய வாஸுகி மஹாராஜன், ஸர்ப்பலோகத்தரசன், உனக்கிவ்வாறு ஆணையிடுகிறார்:—

**சங்கசூடன்.**—(பக்தியுடன் தலைமேல் கை குவித்து) ராஜாதி ராஜன் எனக்கென்ன ஆணையிட்டனர்?

**வேலைக்காரன்.**—இந்தச் சிவப்பு வஸ்திரங்களின் சதையை அணிந்துகொண்டிந்தக் கொலைப் பாறைமீது ஏறு; கருடன் அதனால் உன்னைக் கண்டுணர்ந்து தன் உணவாய்க் கொள்ளும் பொருட்டு.

**நாயகன்.**—அந்தோ! இப்பாழும் மனிதன் வாஸுகியால் கருடனுக்குப் பலியாக இடப்பட்டிருக்கிறான்.

**வேலைக்காரன்.**—சங்கசூட! இதைக் கைக்கொள்ளும் (வஸ்திரங்களை அவனிடம் கொடுக்கிறான்)

**சங்கசூடன்.**—(ஆதரத்துடன்) கொண்டுவா! அரசன் ஆணையைத் தலைமேற் கொண்டுளேன்.

**கிழவி.**—(தன் மகன் கழுத்தில் வஸ்திரமிருப்பதைப் பார்த்து, வயிற்றிலடித்துக்கொண்டு) ஆ! என் குழந்தாய்! ஐயோ இடி வந்துவிழுந்தாற்போலாயிற்றே! நான் என்னடா செய்வேன்? (மூர்ச்சையாய் விழுகிறாள்)

**வேலைக்காரன்.**—கருடன் வரும் சமயமாயிற்று. நான் போகிறேன். (போகிறான்)

**சங்கசூடன்.**—தைரியத்தை விடவேண்டாம். அம்மா! தைரியத்தை விடாதேயும்.

**கிழவி.**—(மூர்ச்சை தெளிந்து கண்ணீர்ப் பெருகவிட்டு)

ஆ என் குழந்தாய்! என் மகனே! என் புண்ணியப்பலனே! என் விருப்பத்தின் மூலமே! குணக்கடலே! குலமென்னுங் கடலில் தோன்றிய அன்பு என்னும் ஒளியே! உவாமதிபோல் கலைநிறைந்த உன்முகத்தை இனி எங்கடா காண்பேன்? (கட்டிக்கொண்டழுகிறாள்)

**நாயகன்.**—அக்கருடனுடைய கொடுமை! என்ன கொடுமை!

“ தாயிடை நிற்குமித் தளிரன குழந்தையை
வாயிடைக் கொண்டு கருணை வாய்க்காது
தின்று மென்றிடு கன்றிய மனத்தப்
பறவைத் தலையின் பருமூக் கன்றி

நிறைபடு மனமும் நெடுங்கல் லன்றே.
மனங்கலேக் தலேந்து நினைவினை யொழித்து
கண்ணீர் பெய்து கண்ணுர நோக்கி
அழுது அழுது அரற்றி ஆவென் றலண்டென்
குழந்தையைக் காக்குமோர் குணக் குன்றுன்
[றிலேயோ"

வென்பது மென்னே யநீதி யீதே.

**சங்கசூடன்.**—(துன்ப மிகுதியான தாயின் இதயம் வெடித்து விடும் என்று பயந்து, அவளே நோக்கி)

ஹா ! அம்மணீ !

கருணைவா ரிதியா யிரக்கங்கொள் காவலின்
கேட்டோர்க் கீயும்கெழுமனங் கொண்டோர்
நாட்டிலிங் கிலேயால் ! நாட்டிலிங் கிலேயால் !
மனமது வாடிய மாந்தர்தம் கவலையை
தனிமையிற் கேட்டு தணிப்பவ ரிலேயால் !
தமதுடற் பாசம் தனைநாச மாக்கி
உறுபிணிப் பட்ட வறியரைக் காண்டதும்
தம்முயிற் கொடுத்தும் காத்திடும்
பிறர்க்குதவி செய்யும் பெற்றியோ ரில்யால் !
உன்முறை கேட்க வுற்றவ ரிலேயால் !

(தாயின் கண்ணீரைத் துடைத்து)

அம்மணீ ! அழுவதில் என்ன பிரயோஜனம் ! பயப்படாதே ! தைரியத்தை விடாதே !

**கிழவி.**—(கண்ணீர் விட்டு) என்னப்பனே ! நான் எப்படியடா தைரியமடைவேன் ? என் ஒரே மகன் என்று ஏன் வாஸுகி இரக்கங்கொள்ளக்கூடாது ? உன்னே யேன் மன்னித்திருக்கக்கூடாது ? ஐயையோ தெய்வமே ! பாழும் காலனே ! உலகமுழுதும் சுகமாயிருக்க உனக்கேன் என் மகன்மேல் மாத்திரம் ஞாபகம் மறக்கவில்லே ! கொடியவனே ! தாத்ரஷ்டையான எனக்கு என்ன செய்து விட்டாயடா ! எனக்குக் கஷ்டம் வந்துவிட்டதடா ?

**நாயகன்.**—(இரக்கத்துடன்)

உற்ருேர் உறவோர் உயர்த்தலே அவனுல்
சற்றுங்கவனியாது தனித்திடப்படுவெயில்
பாவித்தன்னே பார்த்தும் கனிந்தியான்
காத்திடே னுகில் காணுமிவ்வுடலே
கொண்டென் பயனே கண்டதாகுமே!

**சங்கசூடன்.**— அம்மணீ ! தைர்யப்படுத்திக் கொள்!

**கிழவி.**—ஆ! என்மகனே! உன்னே எல்லாரும் கைவிட்டு விட்டார்கள். அரசன் வாஸுகியாலும் கைவிடப்பட்டாய் ! இனி நீ வந்து ஸுகமடையும்படி யார் உன்னேக் காப்பாற்றுவார்கள்?

**நாயகன்.**—(உடனே ஓடிவந்து) இதோ நான் செய்கிறேன்.

**கிழவி.**—(தனது வஸ்திரத்தால் மகனே மூடி, நாயகனிடம் வந்து)

விந்தையின் செல்வமே ! என்னே யுண்பாய்! உனக் குணவாகும்படியாக ஸர்ப்ப ராஜனல் அனுப்பப்பட்டிருக்கிறேன்.

**நாயகன்.**—(கண்ணீர் சிந்த)

மகன்பொருட் டென்னே அகமகிழ் ஆசையே
மகன்பாற் கொண்ட மால்பெரு மாசையின்
தனதுயி ரளிக்கவும் தான்மனங் கொண்டு
வினதை காதலியென்றென விரும்பி யோடிவந்து
நடக்குமிவ் வயோதிக நங்கையின் துயரினே
கண்டக் கொடிய கன்னெஞ் சுரத்தானும்
கொண்டிடு மிரக்கமென் கொளாமையு மாமே?

**சங்கசூடன்.**—அம்மணீ! நீர் போம்! உன்பயத்தை எல்லாம் ஒழி. இவர் ஸர்ப்பர்தம் பகைவரல்ல.

காணுதி யிவற்கும் கருடர்க்கு முள்ள
மாண்பெரும் பேதம் ; நீண்மூக்கு குருதியில்
அளேந்துயர் நாகரின் மூளேயில் அருந்தி
செவ்வரி யடைந்தவ் வெவ்விய வுருவின்
இவ்வுயர் மகானே ஈடிட லாமே !
நன்மைவேர் வீழ்த்து நயத்தின் வழிபடா
கருணே நிறைந்து கருங்கொண் டலென
இரக்கம் பொழியு மின்புவுரு வன்றே?

**கிழவி.**—என் மகனே ! உனது வருங் கேடை நினேந்து நினேந்து எங்கு பார்த்தாலும் கருடமயமாகவே தோன்றுகிறது.

**நாயகன்.**—பயப்பட வேண்டாம் அம்மணீ ! யான் ஓர் வித்யாதரன் ! உன் மகனேக் காக்கும் பொருட்டே வந்திருக்கிறேன். ஆகையால் நீ பயப்படவேண்டாம்.

**கிழவி.**—(ஸந்தோஷத்துடன்) மகனே ! மற்றும் ஒருமுறை அப்படியே அவ்வார்த்தைகளேச் சொல்வாய்.

# மாணவர் பக்கங்கள்
## STUDENTS' PAGES
## வியாஸ விதானம்
## Essay writing
### IV. ஆராய்ச்சி வியாஸங்கள்
### REFLECTIVE ESSAYS
### 6. லௌகீக குணங்கள்—மிதச்செலவு
Worldly qualities—Thrift

குறிப்பு.—ஸ்வரூபம்—காரணம்—எல்லை—கிடைக்கும்விதம்—காரியங்கள்—ஸஹாயங்கள்—உபமானுதிகள்—முடிவு.

மிதச்செலவு என்பது வரவுக்கு அதிகப்படாது பணத்தைச் செலவழிப்பது என்று பொருள்படும். நியாய வழிகளில் முயன்று ஒருவன் அடையும் பணத்தை தகுந்த வழியில் உபயோகப்படுத்தி மனம் தேறி இருப்பதற்கு இந்தக் குணம் அதிக அவசியம். ஒருவனுக்குக் கிடைக்கும் வரும்படியை இவ்வாறு பிரித்து உபயோகப்படுத்தவேண்டும் என்று 'வருவாயுட் கால் வழங்கி' என்று தொடங்கும் பாட்டு நன்கு விளக்கும்.

ஆதலால் ஒருவன் செலவு கூடியவரையில் வரும்படியில் பாதிக்குமேல் போகாமலிருப்பது அவசியம் என்பதாகிறது. பணத்தைச் செலவிடுவதுபோலக் காலத்தையும் உலக விஷயங்களில் மிதமாகச் செலவிடுதலை மிதச்செலவு என்னலாம். பணத்தை மிதமாகச் செலவழித்து மிகுந்ததை ஆபத்துக்காலம் தர்மவிஷயம் ஆகிய இவைகளில் செலவழிக்கவைத்திருப்பதுபோல காலத்தையும் அவசிய உலக விஷயங்களில் சிறுபான்மை செலவிட்டுப் பெரும்பாலும் ஆத்ம விஷயம் மோக்ஷ விஷயத்திலே செலவிடுவதே இம்மிதச் செலவின் ஸ்வரூபம்.

'இந்த மிதச்செலவு ஏன் இருக்கவேண்டும்?' என்ற கேள்விகள் பிறக்கும். உலக விஷயங்களுக்குப் பணம் அவசியம் வேண்டியதாக விருப்பதோடுங்கூட அதுவே ஸகல கலகங்களுக்கும் காரணம். இதன் மூலமாகக் கொலைகள்கூட விழவிடமுண்டு. இதுபற்றியேதான் இதைப் பட்டினத்தடிகள் 'ஆள் கொல்லி' என்ற பெயரிட்டு அழைத்திருக்கிறார். மேலும் பணம் குறைந்து பிழைக்க விதியற்றுப் போகுங்காலத்தில் எல்லாவிதக் கொடிய செயல்களையும், கெட்ட செயல்களையும் செய்யும் குணம் ஒருவனுக்கு வந்துவிடும். ஆதலால் நியாயப்படி ஸம்பாதித்த பணத்தை மிதமாகச் செலவிட்டு முற்கூறிய கொடுங்குணங்கள் வரவொட்டாது தடுப்பதற்குப் பணம் சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும். மிதச்செலவு ஏற்பட்டால் அதற்கு ஏற்றபடி விஷயானுபவ ஆசை முதலியவைகளை ஒடுக்கிப் பழக வேண்டியது அவசியமாகிவிடும். ஆதலால் இந்திரிய நிரோதம் தானே வந்துவிடும். நம்மால் கூடிய வரையில் தர்மம் முதலியவைகளை மனக்குழப்பமின்றிச்செய்யலாம். கூடியவரை பிறர் நற்குணத்தை எதிர்பார்த்து அதற்குப்பந்தப்பட்டு நடக்காமலிருக்கலாம். ஆதலால் மிதச்செலவால் நேர்மை, அடக்க ஒடுக்கம், நிர்பயம், முதலிய நற்குணங்கள் தாமே வந்துசேரும். மனஸ்தாபமில்லாத வாழ்வு ஏற்பட இடமுண்டு. காலத்தை மிதமாகச் செலவிடுவதால் எல்லாவித நற்குணங்களும் வந்து அடையும் என்று கூறவும் வேண்டுமா?

மிதச்செலவுக்கும் ஒருவித எல்லையுண்டு. இந்த எல்லை கடந்துவிட்டால் இது லோபமாகிவிடும். மிதச்செலவு என்பது சிற்சில ஸமயங்களில் வரும்படிக்கு மேற்பட்டுப் போய்விடலாம். இப்படிப் போகுங்கால் முற்கூறிய மிதச்செலவின் ஸ்வரூபப்படி வரும்படியில் பாதி செலவிட்டு விட்டு மேல் செலவழிக்காது விட்டுவிட்டால் மிதச்செலவு செய்ததினால் ஏற்படக்கூடிய ஆத்மகுணங்கள் உண்டாகா, லோபம் பணத்தாசை முதலிய துர்க்குணங்கள் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டேவரும். ஆகவே நியாயமான அதிகச்செலவு வருங்கால் நன்றாகப் பகுத்தறிந்து மிதச்செலவின் ஸ்வரூபப்படியாவது அல்லது அதை மீறியாவது நடக்கவேண்டும். பகுத்தறியும்விதம் யாது என்ற கேள்விபிறக்கும். அதிகச் செலவு செய்யும்படி நேருங்கால் தனக்கு ஸுகம், அதிக கீர்த்தி முதலியவைகள் ஏற்படாததாயும், தன் உறவினர், தனக்கு எட்டும் பொது ஜனங்கள் ஆகிய இவர்கள் ஜீவனம், தர்மம் முதலியவைகளுடன் ஸம்மந்தப்பட்டதாயும், தன் வரும்படிக்குள்பட்டதாயும் உள்ள அதிகச் செலவை தயங்காது ஒவ்வொருவனும் செய்தே தீரவேண்டும். இது அவன் கடமைகளில் ஒன்று. இம்மாதிரி தகுந்த ஸமயங்களில் இவ்வாறு செய்யாது பின்னடைபவன் லோபி. தன்னயம் கருதி அதிகச் செலவு செய்யவேண்டும் என்ற எண்ணம் எல்லோருக்கும் வரும். அவ்வாறே பெரும்பா

531



லாரும் செய்யலாம். ஆனால் இவ்வாறு செய்யாதிருக்க முயலவேண்டும். இவ்வாறு மனம் போனபடி செய்பவனுக்கு டம்பம் என்ற துர்க்குணம் வந்து சேரும். ஆதலால் தகுந்த ஸமயங்களில் சாஸ்திரப்படியுள்ள மிதச்செலவிற்கு மீறியும் வரும்படிக்கு மீறாமலும் அதிகச் செலவு செய்தே தீரவேண்டும். இக்காலத்தவர் போல் 'நம்மைச் சேர்ந்தவர் எப்படிப் போனாலும் போகட்டும், நாம் பணம் சேர்த்து வைத்துக் கொள்ளவேண்டும்' என்று சேர்த்து, முடிவில் 'பொது நன்மைக்கு' என்று விட்டுப்போவது லோபம் டம்பம் முதலிய துர்க்குண மாறுபாடே ஒழிய வேறொன்று மல்ல. காலத்தை மிதமாகச் செலவிடும் விஷயம் நேரிட மனஸம்பந்தமாகி, மோக்ஷம் என்ற புருஷார்த்தத்தை நோக்கமாக உடையதாகையால் இது ஸம்பந்தப்பட்டவரையில் ஒருவித எல்லையும் இல்லை. இந்த விஷயத்தில் எவ்வளவு மிதமாகச் செலவிட்டாலும் அதிகம் என்று வரையறுத்து எல்லை கூற முடியாது. எப்பொழுதும் பரம்பொருளுடன் ஸம்பந்தப்பட்டே இருக்க வேண்டியது இதன் முடிவாதலால், இந்த மிதச்செலவு எல்லையற்றது.

மிதமாகச் செலவிடும் பழக்கம் வருவதெப்படி என்ற விஷயத்தை எடுத்துக் கொள்ளுவோம். இந்தக் குணத்தால் ஏற்படும் நற்குணங்களான நேர்மை, மிதவிஷயானுபவம் முதலியவைகளில் மனப்பூர்வமாகப் பழகி வரவேண்டும். இதனால் மிதச்செலவு செய்யும் குணம் உண்டாகி இது முற்கூறிய நற்குணங்களைத் திடப்படுத்தி அவைகளை ஆத்ம குணங்களாக்கும். ஆதலால் முக்கியமாக ஒருவனுக்குத் தேவையான வஸ்துக்கள் குறைந்துகொண்டே வரவேண்டும். இது குறைந்தால்தான் மிதச்செலவில் பழகமுடியும்.

'உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பதுகோடி நினைந் தெண்ணுவன.'

என்றாள் ஒளவை. எண்பது கோடி நினைந்து எண்ணுவனவற்றைக் குறைத்து, உண்பது நாழி உடுப்பது நான்கு முழம் அளவு வரையில் கொண்டுவந்து விட முயலவேண்டும். இதுபற்றியே தாயுமானவரும்:—

"எல்லாம் யோசிக்கும் வேளையில் பசிதீர
உண்ணுவதும் உறங்குவதுமாக முடியும்
ஆதலால் உள்ளதே போதும்"

என்று கூறியிருக்கிறார். இதன்படி நமக்கு தேவையான வஸ்துக்களைக் குறைத்து, வருவதைக்கொண்டு திருப்தியடையும் மனோ நிலையில் பழகிவர முயன்றால் மிதச்செலவு முதலியன உண்டாகிவிடும். பணவிஷயமிதச்செலவால் உலக விவஹாரங்கள் குறைந்துகொண்டுவர கால மிதச் செலவு தானே உண்டாகிவிடும். மிகுதியாகவிருக்கும் காலத்தை ஒரு விஷயத்திலும் செலவிடாது சும்மாவிருக்க முடியாதாதலால் அதற்குத் தகுந்த ஆத்மவிஷயச் செலவு ஏற்பட்டு நம்மை ஸந்மார்க்கத்தில் நடக்கும்படி செய்யும்.

முற்கூறியபடி மிதச்செலவு செய்து மிகுந்த பணத்தை முற்காலம் போலப் புதைத்து வைக்காமல் சேர்த்துவைக்கத் தகுந்தவிடங்கள் இக்காலத்து நாகரீகத்துக்கு ஏற்ப அநேகம் ஏற்பட்டிருக்கின்றன. தபால்சாலை ஸம்பந்தமாயும், தனியாயும் எத்தனை மிகுந்த பணம் சேர்க்கும் கடைகள் உள! அவைகளில்பணத்தைக்கொடுத்து வைத்தால் தகுந்த வட்டியுடன் சேர்ந்து இது பெருகிக்கொண்டே வரும். அவஸர ஸமயங்களில் மிதச்செலவை மீற வேண்டுங்காலத்தில் இவைகளில் சில பாகங்களை வாங்கிச் செலவிட வேண்டிய ஏற்பாடுசெய்துள்ளது. இதில் அதிகப் பணம் சேர்ந்துவிட்டால் கைத்தொழில் ஸங்கங்கள், பொதுநன்மை ஸங்கங்கள், நிலம் முதலியவைகளில் இவைகளைப்போட்டு விருத்தி செய்யவிடம் இக்காலத்தில் ஏராளமாக உண்டு. சேர்த்து வைத்த பணம் அபாயமின்றி இருந்து பெருக வேண்டியதற்கு அவசியமான பணம் மாற்றச் சீட்டுகளும் இருக்கின்றன. ஆதலால் இக்காலத்தில் மிகுந்த பணத்தைச் சேர்த்து அதிகக் கவலையின்றி ஓய்ந்திருக்க இடமுண்டு.

ஜீவராசிகளில் எல்லாம் இந்த மிதச் செலவு மிகுந்தவற்றைச் சேர்த்துவைத்தல் ஆகிய இவைகளில் இயற்கை யறிவாலேயே முயலுகின்றன. வேனிற்காலத்தில் தான்யங்களை ஏராளமாகச் சேர்த்து மழைகாலத்தில் எறும்புகள் ஸுகமாய் வாழுகின்றன. இதுபோலவே தேனீக்களும் வஸந்த காலத்தில் பூக்களிலிருந்து தேனைக் கூட்டி அடைகளில் சேர்த்து இலை உதிர் காலத்தில் கவலையற்றிருக்கின்றன. எறும்பும் தேனீயும் மனிதர்களுக்கு மிதச்செலவு, மிகுந்ததை சேர்த்துவைத்தல் ஆகிய இக்குணங்களைப் புகட்டியிருக்கின்றன. இதுபோலவே ஜீவராசிகள் எல்லாம் இவ்வாறிருக்கப் பகுத்தறிவுடைய நாம் பண விஷயத்திலும் காலவிஷயத்திலும் இவ்வாறிருந்தால், கொடிதாகிய கிழவயதில் கவலையற்று ஆனந்தமாக விருக்கலாம்.

இம்மாதிரியே விவரிக்கக் கூடிய வியாஸ விஷயங்கள்

1. தேஹசுத்தம். 6. கடன்படல்
2. ஒழுங்கு 7. திருடுதல்
3. வேலைசெய்தல் 8. சோம்பல்
4. தேஹப்பயிற்சி 9. முன்னுக்கு வருதல்
5. கற்பித்தல் 10. பேராசை.

போதக்குறிப்பு

1. ஸ்வரூபம்
2. காரணம்
3. எல்லை
4. கிடைக்கும்விதம், காரியங்கள்
5. ஸஹாயங்கள்
6. உபமானதிகள், கதைகள் முடிவு.

## மொழிபெயர்ப்பு விளக்கம்
## Translation Models

### 20. Knowledge and Feeling.

There are two important faculties in man namely the heart and the intellect. Each of these must be developed, but not the one at the expense of the other. They are placed together that each may help and guide the other, like a pair of horses drawing a carriage. The business of the heart is to feel, and to love; but it often makes mistakes; then reason comes to its help and corrects it. For example the old man in his death bed weeps for the children born and yet unborn he is leaving behind; but reason tells him, that he is trusting to broken reeds, that children, friends relatives wealth, and lands follow him not beyond his grave, that he has to make, his journey all alone. It is the business of reason to discriminate, to argue and to judge; and left to itself it also makes mistakes, which the heart corrects, "Stay, says an alchemist to his weeping wife in a novel, "stay, I have decomposed tears, they contain a little phosphate of time, some chloride of soda, some mucus, and some water." To him weeping meant only that much. Here the heart says, "Learned idiot! look behind, it is the heart that weeps." Thus the heart and the head correct and develop each other and produce a perfect man, who is a beautiful combination of the head and the heart.

அறிவும் உருக்கமும்.

மனிதனிடம் இரண்டு சக்திகள் இருக்கின்றன: அவையாவன மனமும் புத்தியுமே. ஒவ்வொன்றையும் செழிக்கச்செய்ய வேண்டுமேயல்லது, ஒன்றைவிட்டு மற்றொன்றை அதிகமாக விருத்தி செய்யக்கூடாது. ஒரே வண்டியை இழுக்கும் இரட்டைக் குதிரைகளைப்போலஒன்று மற்றொன்றுக்கு உதவிபுரிந்து ஒழுங்குபடுத்த வேண்டும் என்றே, இவை இரண்டையும் ஒன்று சேர்த்து வைத்திருக்கிறது. உருகுவதும், அன்பு பாராட்டுவதுமே மனத்தின் தொழில்கள். ஆனால் இது அடிக்கடித் தவறும். அப்பொழுது புத்தி இதற்கு உதவியாக வந்து இதைத் திருத்தும். உதாரணமாக ஒரு கிழவன் இறக்கும் தருணத்தில் தான் விட்டுப் போகும் சிறு குழந்தைகள், இனிப் பிறக்கும் குழந்தைகள் ஆகிய இவைகளை எண்ணித் துக்கிப்பது வழக்கம். அப்பொழுது அவன் புத்தி 'ஒடிந்த நாணல்களைப்பற்றிக் கரையேற எண்ணுகிறயே! குழந்தைகள், நேசர்கள் உறவினர்கள், பணம், நிலம் ஆகிய இவைகள் எல்லாம் ஸ்மசானம் தாண்டி வருமா? நீ தனித்துத்தான் போக வேண்டும்' என்று கூறும். புத்தியின் தொழில் பகுத்தறிவது, தர்க்கம் செய்வது, தீர்மானிப்பது ஆகிய இவைகளே. இது தனித்து நிற்குங்கால் இதுவும் தவறி விடும். இதை மனம் திருத்தும். ஒரு கற்பனைக் கதையில் ஒரு ரஸவாதி கண்ணுங் கண்ணீருமாக விருந்த தன் மனைவியை நோக்கி, 'இரு! நிறுத்து! நான் கண்ணீரைப் பிரித்தறிந்துவிட்டேன். அதனுள் எலும்புச் சாம்பல், உப்பு, சளி, கொஞ்சம் தண்ணீர் ஆகிய இவைகள்தான் உள்ளன.' என்றான். இவனுக்குஅழுகை என்றால் இம்மாதிரியான ஒரு திரவத்தை உண்டாக்குவது என்றுதான்தோற்றியது.இங்குமனம் புகுந்து, 'கற்றறிமூடா! உற்றுப்பார்! மனமல்லவோ கரைகின்றது' என்றுகூறித் திருத்தும். இவ்வாறு ஒருவனிடமிருக்கும் மனமும் புத்தியும் ஒன்றை ஒன்று திருத்தி விருத்தியாகி இரண்டும் வெகு அழகாகச் சேர்ந்து அமைந்துள்ள வணுகிய தேர்ந்த மனிதனை உண்டாக்கும்.

### 21. What changes the way of the wind?

Like almost every thing else, the air is always moving, more or less, and the changes in the direction of its movements are due to many different things. There is, for instance, the movement of the earth on itself, and also its changing position in regard to the sun, as it goes round the sun. These movements mean that different parts of the earth are exposed to the sun at different times; and that means, of course, that different parts of the air are exposed to the sun at different times. When the sun

shines on the air, it makes it warm, and warm air is lighter than cold air, and will rise while cold air will flow in to take its place. But there is a great deal more in it than this. Besides the fact that the surface of the earth is not smooth, but has mountains and hills that turn the wind as the earth turns and tracts of water which cool the air as it passes over them, there are all sorts of electrical changes always going on in the air, and these possibly affect its weight—perhaps even the proportion of the various gases in it—even as much as the heat of the sun affects it. You can scarcely ask more difficult questions than these about wind, rain and whether.

### காற்றின் போக்கை மாற்றுவது யாது?

மற்றைய வஸ்துக்களைப்போல வாயுவும் ஓயாது சற்றேறக்குறைய அசைந்துகொண்டே இருக்கிறது. இந்த அசைவுகளின் போக்கு மாறுவது பல விஷயங்களைப் பொருத்தது. உதாரணமாக, பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்வது, ஸூர்யனைச் சுற்றிப்போகுங்கால் அது விஷயமாக உண்டாகும் இடம் மாற்றம் ஆகிய இவைகளை எடுத்துக்கொள்ளலாம். இந்த மாற்றங்களால் வெவ்வேறு காலங்களில் பூமியின் வெவ்வேறு பாகங்கள் ஸூர்யனுக்கு எதிரே வருகின்றன; அதாவது ஸூர்யனுக்கு எதிரே ஸாதாரண வாயுவின் வெவ்வேறு பாகங்கள் வெவ்வேறு காலங்களில் வருகின்றன என்பதாகிறது. ஸாதாரண வாயுவில் வெயில் காயும்பொழுது அது சூடாகின்றது, சூடான வாயு குளிர்ந்த வாயுவைவிட இலேசாதலால் மேலே கிளம்ப, குளிர்ந்த வாயு அது இருந்த இடத்தை நிரப்ப ஓடிவரும். இந்தக் கேள்வியின் விடையில் இதைவிட ஏராளமான விஷயங்கள் அடங்கியுள்ளன. மட்டமாக இல்லாது மலைகளையும் குன்றுகளையும் உடைய பூமியின் மேற்பரப்பு அது சுற்றுங்கால், வாயுவின் போக்கை மாற்றுகின்றது; இங்குள்ள நீர்நிலைகள் மேலே ஓடும் காற்றைக் குளிரவைத்து அவைகளின் போக்கை மாற்றுகின்றன; இவைகளோடும்கூட வாயுவில் பலவிதமான மின்சார மாறுபாடுகள் ஓயாது நடைபெறுகின்றன. ஆதலால் இவைகளும், ஸூர்ய உஷ்ணத்தைப்போல ஸாதாரண வாயுவின் நிறையையாவது, அதனுள் அடங்கியிருக்கும் வாயுக்களின் அளவையாவது பாதிக்கலாம். காற்று மழை வாயுவின் நிலை இவைகளைப்பற்றி இதைவிடக் கடினமான கேள்விகள் கேட்கவே முடியாது.

## சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி

### TRUE GREATNESS OR VASUDEVA SASTRI

### அத்யாயம் 1.

### சாஸ்திரியும் அவர் பெண்ணும்

பாரார் பொதுநரர் தம்மினும் ஆயிரம் பங்கதிகம்
கூரார் மதிமுனி; அன்னனின் ஆயிரம்கூறு, தன்கோன்
பேரார் புவியி லுறத்தொண்டு செய்பவள்; பேசவளின்
ஓரா யிரமடங் காம்கோற்குப் பின்னும்செய் உத்தமியே

மதுரையில் இவ்வாறு அத்புத விஷயங்கள் நடந்தேறி வருகையில் திண்டுக்கல்லில் முற்றிலும் மாறுபாடான வேறு விஷயம் நடைபெற்றது. வாஸுதேவ சாஸ்திரி தம்மாலியன்றமட்டும் லக்ஷ்மியைத் தேற்றி வந்தார். ஒரு நாள் லக்ஷ்மி தகப்பனாரை நோக்கி, ‘ஏன் என்னைத் தற்கொலை செய்துகொள்ளலாகாது’ என்று தடுக்கிறாய்? இந்த அலங்கோல வாழ்வை என்னால் பொறுக்க முடியவில்லையே! சிறு வயது முதல் நீர் கற்பித்த ஞானமெல்லாம் எனக்கு இப்பொழுது பயன்படாமலிருக்கிறதே! என்ன எண்ணியும் என் மனம் அமைதி அடையவில்லையே! நீங்கள் தேற்றும்பொழுது தேறி இருக்கிறேன்; உடனே கரையை உடைத்துக்கொண்டு புரண்டு வெள்ளம்போலத் துக்கம் முன்னிலும் அதிகம் வந்து விடுகிறதே!” என்று பரிதவித்தாள்.

சாஸ்திரி.—(அன்புடன் அவளை நோக்கி) குழந்தாய்! தேறி இரு; அவஸரப்பட்டு படபடப்புடன் துக்கத்தில் மூழ்கிவிடாதே!

லக்ஷ்மி.—கணவனிறந்த பின் உயிர் வாழ மனமில்லாது அவர் தேஹம் எரிந்து சாம்பலான சிதையில் விழுந்தோ வேறு எவ்வழியிலோ உயிர்விட்ட உத்தமிகள் எல்லாம், அப்பா! தீரர்களல்லவா! ‘குலமகட்குத் தெய்வம் கொழுநனே’ என்று நீரே எனக்குப் படித்துக்கூறியிருக்கிறீர் அல்லவா? நானும் அவ்வாறே மதிக்கவில்லையா. என் அருமையான நடுநாயகம் போன்ற தவித்துக் கொண்டிருந்தஎன் ......... ’ என்று கூறி முடிக்கும் முன் கண்ணீர் ஆறாகப் பெருகிவிட்டது. தேஹம் முழுவதும் ஆழ்ந்த துக்கத்தால் துடித்தது. கண்ணீர் அருவியாகப் பாய்ந்தோடியது. அவள் தகப்பனார் அவளைக் குனிந்திருந்த அன்புடன் நோக்கித் தம் அங்கவஸ்திரத்தால் அவள் கண்ணீரைத் துடைத்து கனிந்த மொழிகளால் அவளைத் தேற்றினார்.

லக்ஷ்மி.— அப்பா! நான் மஹாபாபி! மஹாபாபி !! என் சிறுபிராயம் முதல் எனக்கு எடுத்துக்காட்டிய ஸாவித்திரி, ஸீதை முதலிய உத்தமிகளைப்போல நானும் நடந்து கொள்ளவில்லை. அவ்வாறு செய்திருந்தால் எனக்கு இக்கதி வருமா? யமன் கையில் அகப்பட்ட பிராணன் தப்பாது என்றாலும், அவன் கையிலிருந்து கூடத் தன் கணவனை மீட்கவில்லை ஸாவித்ரி! நான் பாபி என்பதற்கு என்ன தடை?'

சாஸ்திரி.—என் கண்மணீ! நீ வாழ்க்கைப்பட்டு ஸுகித்த காலத்தில் உன் நடத்தையை நான் ஆய்ந்து ஓய்ந்து பார்த்துவிட்டேன். உன் குணதிசயத்தை வெளியிட புராணம் ஒன்று ஏற்படாவிடினும், கணவனைப் பேணுவதில் நீ ஸாவித்ரியைக்கூட மிஞ்சிவிட்டாய். உன்னிடமிருந்து அநேக அரிய விஷயங்களை நன்கு உணர்ந்ததாக அவனே என்னிடம் கூறி, உன் வழிபாடு இவ்வாறு உங்களிருவரையும் மேன்மைப்படுத்தியது என்று எடுத்து விஸ்தரித்திருக்கிறான். குழந்தாய்! நீ அஞ்சாதே! இது வரையில் ஒப்புயர்வற்ற யக்ஞம் ஒன்று செய்து முடித்துவிட்டாய்; இப்பொழுது நீ தொடங்கியிருக்கும் யக்ஞமோ மிகக் கடினமும் ஆதலால் மிகச் சிறந்ததுமாயுள்ளது. உன் மனம் தர்மத்தையே பற்றி நிற்கிறது. எல்லா விஷயங்களையும் தர்மப்படி நடத்துவதென்றால் உனக்கு ஒருவித உத்ஸாகம் கிளம்பும். நீ குழந்தையாகவிருக்கும்பொழுதே நான் இதைக் கண்டுவிட்டேன். உன் பெருமை வெளிவாராவிடினும் நீ ஒரு உத்தமியாவாய்.

லக்ஷ்மி.—அப்பா! அப்பா!! என்ன கூறிவிட்டாய்! மஹா பாபியான என்னை இவ்வளவு சிறப்பித்துக் கூறிவிட்டாயே! தர்மாத்மாவா நான்? அப்படியாயின் பரமாத்மா என்னை இவ்வாறு வருத்துவாரா?

சாஸ்திரி.—துக்கத்தில் அழுந்தாதே! என் கண்ணே! துக்கித்துப் பயன் என்ன? முன்செய்த பாபத்திற்கு இப்பொழுது வருந்துகிறோம் என்பது உண்மையே. ஆயினும் கர்மத்திற்குத் தகுந்தபலன் கொடுத்து நம்மை கஷ்டப்படுத்தும்பொழுதும் நம்மிடம் அவருக்குக் கருணையில்லாமல் போகவில்லை. நமது தண்டனைகள் எல்லாம் உற்று நோக்கில் அநுக்ரஹங்களாகவே முடியும். இந்தத் துக்கத்தை ஈசுவரன் மேல் பாரத்தைப் போட்டுச் சாந்தமாக ஸஹிப்பாயாகில் உன் நடத்தைக்கு நிகர் திரிலோகங்களிலும் இல்லை என்றே கூறலாம்.

லக்ஷ்மி.—கஷ்டம்! அப்பா! மிகக்கஷ்டம். நான் எவ்வாறு இத் துக்கத்தைத் தாங்குவது? ஒரு க்ஷணம்கூடப் பொறுக்க முடியவில்லையே!

சாஸ்திரி.—உனக்குப்பொறுக்கும்சக்திஉண்டு! நீ என்ன ஸாமான்யப் பெண்ணா? உனக்கு சக்தி இருக்கிறது!! குழந்தை முதல் பெருமையே. நீ விரும்பிப் பயின்றது. கண்ணே! எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறதே, நீ ஐந்து வயதில் செய்து வந்தது. உன் தோழிகளை அழைத்து உன்னை கோபம் மூட்டச் சொல்லிவிட்டு என்ன செய்தும் கோபம் கொள்வதில்லை என்று விரதம் பூண்டு நீ அநேகம் தரம் ஸாதித்திருக்கிறாயே. அவர்கள் உன்னை எவ்வளவோ வருத்துவார்கள், தொந்திரவு செய்வார்கள், நீ சாந்தமாக இருப்பாயே. சாந்தமாக ஸஹிப்பதே உனது முக்கிய ஸத்குணம். அதனால்தான் உன்னிடம் எனக்கு அதிக ப்ரீதி. கொஞ்ச நாழிகையில் நான் ஊருக்குப் போய்விடுவேன். ஆயினும் சீக்கிரம் திரும்பி வருகிறேன்.

லக்ஷ்மி.—நாலைந்துநாளைக்குமேல்அங்கேதங்கிவிடாதே, அப்பா! அதிகமாய்ப் போனால் ஒரு வாரத்திற்கு மேல் போகவேண்டாம். உன் ஸந்நிதான விசேஷம் இப்பொழுது பூர்ணமாக எனக்கு விளங்கிவிட்டது. உன்னையன்றி எனக்குத் துணை வேறார். சீக்கிரம் காரியத்தை முடித்துக்கொண்டு திரும்பிவிடு.

சாஸ்திரி.—என் அருமைப்பெண்ணே! ஒன்றுக்கும் நீ அஞ்சாதே. சீக்கிரம் வந்து விடுகிறேன். பரம்பொருள் எங்கு இருக்கிறது, உன்னை அவர் ஓயாது கவனித்துக் கொண்டிருக்கிறார். இது தான் என் புத்திமதி, மறவாதே. உன்னாலானவரையில் பொறுத்துப்பார். முடியாவிடில் இந்த உண்மையை யாவது மறவாதே. மானிடர்களைவிட ஆயிர மடங்கு அதிகம் ஒரு ருஷி, ருஷியைவிட ஆயிரமடங்கு அதிகம் கணவனுடன் வாழுங்கால் அவனையே கடவுளாகக் கருதி யிருப்பவள், இத்தகைய பெண்மணியைவிட ஆயிரமடங்கு அதிகம் கணவனிறந்த பின்னும் அவனையே கடவுளாகக் கருதி வழிபடுபவள். இதை உன் மனத்தில் நன்றாகப் பதித்துக்கொள்.

சாஸ்திரி இவ்வாறு கூறி வாய் மூடும் முன் உள்ளே புகுந்து விட்டாள் அன்னம்மாள். கருடன் பாம்பின்மேல் பாய்ந்து பிடிப்பதுபோ

லத்தன் பெண்மேல் பாய்ந்து கையில் தூக்கி, மார்போடு அணைத்துக்கொண்டு பெருங் கூச்சலிட்டு பிலாக்கணம் பாடி அழத் தொடங்கி விட்டாள். இவ்வாறு கொஞ்ச நாழிகை செய்து விட்டு அவளைக் கீழே விட்டு அவள் முன்னரே வயிற்றெரிச்சல் தீரமாரடித்துக்கொண்டு விழுந்தாள்.

**அன்னம்மாள்.**—(எழுந்து) நாங்க ஊருக்குப் போரோம். துக்கம் பொருக்க முடியாட்ட கேணத்திலே போய்விழு." இப்படியென்னை அலங்கோலமா என் வயிறு எறிய பாப்பதைவிட நீ எரிஞ்சு சாம்பலாய் விட்டாலே மேல்.

என்று இவ்வாறு கூறிவிட்டு மூட்டை எடுத்துக்கொண்டு ரயிலுக்குப் புறப்படும்படி கணவனுக்குக் கட்டளையிட்டாள்.

**சாஸ்திரி.**—மூட்டையை எடுத்துக்கொண்டு, லக்ஷ்மியை நோக்கி, 'நான் சொன்னது ஞாபகம் இருக்கட்டும்,' என்று எச்சரிக்கை செய்தார். பின்னர் இருவரும் புறப்பட்டு ஸரியான காலத்தில் ரயலடிக்கு வந்துவிட்டனர்: இரண்டொரு மணி நேரத்திற்குள் மதுரை போய்ச் சேர்ந்தனர்.

### இதோபதேசம்

மறந்தொழி மண்மிசை மன்னுய் பிறவி
இறந்தொழி காலத்து மீசனை யுள்கும்
பறங்கல மந்து படுதுயர் தீர்ப்பான்
சிறந்த சிவநெறி சிந்தைசெய் யீரே.

செல்லு மளவுஞ் செலுத்துமின் சிந்தையை
வல்ல பரிசா லுரைமின்கள் வாய்மையை
இல்லை யெனினும் பெரிதுள னெம்மிறை
நல்ல வரனெறி நாடுமி னீரே.

ஒன்றே குலமு மொருவனே தேவனு
நன்றே நினைமி னமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்வினைந் துய்மினே.

போற்றிசெ யந்தண் கயிலைப் பொருப்பனை
நாற்றிசைக் குந்நடு வாய்நின்ற நம்பனைக்
காற்றிசைக் குங்கும ழாக்கையைக் கைக்கொண்டு
கூற்றுதைத் தான்றன்னைக் கூறிநின் றுய்மினே.

இக்காய நீக்கி யினியொரு காயத்திற்
புக்குப் பிறவாமற் போம்வழி தேடுமின்
எக்காலத் திவ்வுடல் வந்தெமக் கானதென்
றக்கால முன்ன வருள்பெற லாமே.

## ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### ருக்மணி அல்லது பக்தி நிலை

#### பக்தி மலர்ந்த காதை

(தொடர்ச்சி)

வஸந்த காலம். உலகமெங்கும் மலர்மழை பெய்து தேன் பொழிக்கும் காலம். மனதை வைசித்ரிகத்தில் பாய்த்து, தான் ஸுகமடையும் காலம். எங்கும் பல வர்ணங்கள் பொருந்தி, வர்ணத்தில் மயங்கி, செழுமையில் இனிமை விளங்கி, இனிய கொடிகள் தளிர்ந்து, பூக்கள் கொத்து கொத்துகளாகப் படர்ந்து மானுஷ ஹ்ருதயத்தில் தன் சோபையையூட்டி, அவனைத் தன்பால் இழுக்கச் செய்யுங் காலம். தேன்கூட்டங்கள் மலர்களில் உண்டு ஸுகித்து, கள்குடியர் போல நடித்துத் தமது நாதத்தில் குயிலின் பஞ்சம ஸ்வரமயங்கி இளம் பண்ணில் மிக்க இனிமை மயங்கச் செய்யும் காலம். அக்காலமே எவற்றிற்கு மூலாதாரமாகிய ஆனந்தத்திற் கிடந்தந்து மனதினது அகந்தை தன்னைக் கண்டு நாணச் செய்யும் செருக்கு வாய்ந்திருந்தது. அதுவே தன் இனிய தன்மையாலும் இனிய சேர்க்கையாலும், யாவர்க்கும் ஸுகத்தை யுண்டாக்கக்கூடியதாக விளங்கியது. அதுவே சாமிகளுக்குத் தம்கருத்திற்கிசைய சந்திரோபாலம் மனத்திற்பட்டு இனிய சந்திரனையும் வெறுக்கச் செய்யக்கூடியது. அதுவே ஞானத்திலுழைத்தவர்களை மோனத்தில் செய்வதும். அக்காலமே யாவர்க்கும் இன்பத்தை யுண்டாக்கக்கூடியது. எவரும் தமது இதேகருத்தை யெல்லாமடையச் செய்யக்கூடியது. யாவரும் தாமடைய விரும்புவதை விரும்பி அடைய முயற்சியடைவது மப்பொழுதே என்பதை சொல்லவும் வேண்டுமோ ?

எம்பெருமான் ஸ்ரீவாஸுதேவன், ஸ்ரீகோபியர்களிடம் கூடி விளையாடும் கண்ணன், தனது பலதேவியரிடத்தும், தனித்தனி அவர் விருப்பத்திற்கிணங்கி இல்லறஞ் செய்து வந்துக் கொண்டிருந்தனன். வஸந்த காலத்தில் நிழலில் ஓர் வீட்டில் தனது பத்னியும் தாம்பூலங்கொண்டு விளங்கினன். மற்றோரிடத்துத்தனது மைத்துனனிடம் தனது பத்னியின் சில விஷயங்களை உபந்யஸித்துக் கொண்டிருந்தனன். வேறோரிடத்து, தனது குழந்தையின் மழலைச் சொற்

களைக் கேட்டுச் சொல்லாலாகிய தேனைத் தனது காதிற் குணவாக்கினன். ஓரிடம் தனது பத்னியின் மொழிகளைத் தடுத்து எளனம் செய்து கொண்டிருந்தனன். தனது புத்திரனுடைய ஆண்டிடுநிமித்தம் ஹோமாதிகள் மற்றோரிடத்துச் செய்தனன் ஓர் மனையில் அந்தப்புரத்துள்மனைவியிடம் இன்ப மொழியிலாழ்ந்து விளங்கினன். இவ்வகை பலவிதமாக, எம்பெருமான் கண்ணன் ஒருவன், ஒவ்வொரு தேவி ஒவ்வொருவருக்கும் தனிக் கண்ணனாக விளங்கி, அவர் கருத்துக்கிணங்க இல்லற வொழுங்கிற்கும் பொருந்த தனது தெய்விகத்தன்மையைக்காட்டிக்கொண்டு விளங்கினன். எங்கு நிறைந்து எண்ணுவார் எண்ணிய விதத்தை நோக்கிய ஸ்ரீ நாரதமுனிவன் பரந்தாமனது ஸர்வ வியாபகத்வத்தைக் கண்டு வியந்து பிரமையில் விளங்கி வந்தனன்.

இதைக்கண்ட அம்முனிவன் ஒவ்வோர் அகமாகச் சென்று சென்றுயோக க்ஷேமங்களை விசாரித்து ஸத்யபாமையின் அந்தப்புரம்அடைந்து மேல் வருமாறு கூறினார்:—

“நல்ல வம்சத்தில் தோன்றிய பாமா! ஸத்தியபாமை! உனது குணமும், பெருமையும், சீருமடைந்து விளங்குகின்றாய். உன்பாக்கியமே பாக்கியம். யாவர் வீட்டிலும் இருக்கும் கண்ணன் உன்னிடம் தனியாகத்தான் விளங்குகின்றனன் உன்னிடம் கொண்ட மோஹம் எம்பெருமானுக்கு ஒருவிடத்திலுமுண்டாகவில்லை. உனது அழகுங் குணமேஅவரை உன்னிடம் மயங்கச்செய்தது அதுஉண்மை. உன்விரிந்து நீண்டக் கண்களிவிருந்துசெல்லுமம்புகள் அவனை யுன்பால் அடங்கச் செய்து விட்டனவென்பதற்குச் சிறிதும் ஸந்தேஹமில்லை. உன்னுடைய அழகும் அதற்குதவியாகியது; உன்மொழிகளும் அதற்குடந்தையாய் விளங்கியது. உனக்கு ஸமானமினி எங்கு இருக்க முடியும்? கண்ணனை உனது சொத்தாகஅடைந்த உன்னால் என்னதான் செய்யமுடியாது? உன்னால் செய்ய முடியாத காரியங்களிருக்கவும் முடியுமோ? நமக்கு உன்னால் எதுதான் அடைய முடியாது? உன்னிடம் பெறாதபொருள் வேறு யாரிடம் என்னால் பெறமுடியும்? ஹே! பாமா! உன் பெருமையே பெருமை. உன் பெருமிதமே பெருமிதம். எது இருப்பினும் நாரதன் ஒருவன் இருக்கிறான் என்று மாத்திரம் தங்களுக்கு ஞாபகமிருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். உமக்கு எம்போன்றவர்களைப்பற்றி கவனம்வேண்டியதில்லை; ஆனாலும் என்னைப்பற்றி ஞாபகம் உமக்கிருக்காமல் போகாது. தமது பெருமை எங்கும் பிரஸித்தம் அல்லவா? அதைச் சொல்லவும் வேண்டுமா?”

“தாங்கள் அவ்வாறு கூறுதல் நியாயமோ? உமக்கேதேனும் யான் ஒன்றேனும் தடுத்ததுண்டா? தாங்களிவ்வாறு சொல்வதும் தகுமோ?”

“அவ்வாறு யான் கூறவில்லை. தங்கள் பெருமையில் எனது சிறுமை மறைந்துவிடு மல்லவா? அதற்கே கூறினேன். ஆனாலும் தாங்கள் எதையும் கொடுக்கக் கூடியவரென்று அறியாதா உம்மிடம் நான் இப்பொழுது வந்தேன்? ஆனாலும் தங்களை யான் எண்ணியவாறு கேட்பது தகுதியன்று. உம்மைக் கேட்பது தகுதிக்கூடவில்லை. கேட்டால் உமது பெருமை குன்றிவிடும். உமது ஈகை குணமும் கெட்டுவிடக் கூடியதாகும். அதுவும் தவறு. உங்களால் நான் பெறாவிடில் யாரிடம் பெறுவேன்? ஆனாலும் பெறக்கூடியதாகுமோ? ஸந்தேஹம் தான்“

“ஒன்றும் ஸந்தேஹம் கிடையாது. தாங்கள் தேஹி என்று கேட்டால் மாட்டேன் என்று மறுப்பதுமுண்டோ. அதிதியாகிய தாங்கள் கேட்டபோது இல்லை என்று சொல்வேனா?”

“எனக்கு ஸரியாகப் படவில்லை. நான் கேட்பதைத் தாங்கள் கொடுப்பீர்களென்று தோன்றவேயில்லை.”

“அது வீண் மொழி. நீங்கள் எது கேட்பினும் கொடுக்கப் பந்தப்பட்டிருக்கிறேன். அதற்கொன்றும் ஸந்தேஹம் அணுவளவும் வேண்டாம். உமக்கென்ன வேண்டும் சொல்லும்.”

“ஆனாலும் ஸந்தேஹம்தான். எது தாங்கள் கொடுப்பீரென்று எனக்குத் தோன்றவில்லை. நீர் கொடுக்கவே மாட்டீர்கள். அது நிச்சயமாக நான் சொல்லக்கூடியது.”

“என்ன நாரதா! நீ அவ்வாறு சொல்கிறாய். கேட்டார்க்கு இல்லையென்று சொல்லியதாகக் கேட்டதுண்டோ என் கிருஷ்ணனைக் கேட்டால் கூடக் கொடுக்கநான் ஸித்தமாயிருக்கிறேன். வார்த்தையை வளர்க்காது கேளும் சீக்கிரம்!

“சீக்கிரமாச்சு; எல்லாமாச்சு! நீங்கள் எதைக் கேட்டாலும் கொடுக்க ஸித்தம் என்பதாக வாக்களித்தால் நான் பின் சொல்லுகிறேன். உம்மிடம் இப்பவும் நம்பிக்கையில்லை.”

“நான்தான் முன்னமே கூறினேனே. என் கிருஷ்ணனைக் கேட்டால்கூட கொடுக்க ஸித்த

மாயிருக்கிறேன் என்றேனே. உன் காதில் விழ வில்லையா!

"ஆனால் தாங்கள் நிச்சயமாகக் கொடுக்கப் போகிறீர்களா? இப்பொழுதும் எனக்கு நம்பிக் கையில்லை."

"என்ன உளறுகிறாய். கேளும்: நான் கொடுக்கமாட்டேன் என்றால் பின்சொல்லேன்—"

"நிச்சயந்தான்"

"நிச்சயமாகத்தான்"

"ஆனால் நீர் கொடுக்கிறேன் என்று எள்ளும் நீருமாகத் தத்தம் செய்துகொடும்."

ஸத்யபாமை தனது பாங்கியைக் கூவி எள்ளும் நீரும் கொண்டுவரச்செய்து நாரதரிடம் அவர் எது கேட்டாலும் கொடுப்பதாகத் தத்தம் செய்து கொடுத்தாள். பின் நாரதர் கேட்டனர்.

"முன் சொன்னாயே அந்தக் கிருஷ்ணனைத் தான் எனக்குக் கொடும். வேறு ஒன்றும் நான் கேட்கவில்லை. நீ எல்லாம் கொடுக்கக்கூடிய பாக்கியசாலி!"

"இவ்வளவுதானே. இதோ! இக்கண்ணனை உமக்குத் தத்தம் செய்தேன்" என்று மந்திர பூர்வகமாக எம்பெருமான் வாஸுதேவனை எள்ளும் நீரும் விட்டு நாரதரிடம் ஒப்புவித்தனள்.

நிற்க. வேதங்களுள்ளும் கட்டுப்படாத பெரியோன், பரந்தாமன், அந்த மந்திரத்திற்குள் கட்டப்பட்டவனாய் நாரதரிடம் சேர, அங்கங்குத் தனியாக விளங்கிய கண்ணனைக் காணாத ஸ்ரீ வாஸுதேவனது மனைவிகள் துக்கத்திற்குட்பட்டவர்களாய், நடந்ததை அறிந்து ஸத்தியபாமையின் வீடை அடைந்து ஸத்தியபாமையை நோக்கி பின்வருமாறுகேட்கலாயினார்:--

"அடீஇ ஸத்யபாமை! என்னடீஇ செய்துவிட்டாய்? கண்ணனை நீஎப்படியடிநாரதனுக்குத் தத்தம் செய்தாய்? உன் சொந்த சொத்தா அவர்? எங்களுக்கெல்லாம் அவர்க்கும் உனக்கும் இருக்கும் அந்த உறவு கிடையாதோ? எங்களைக் கேட்காமல் நீ எவ்வாறடீ இவ்வாறு செய்தாய்? அடி படுபாவி! எங்களை எல்லாம் கெடுத்துவிட்டாயேடீ! அடி துஷ்டை! உன்னால் நாங்கள் எல்லாம் எம்பெருமானைத் துறக்கலாகுமோ? நீ இப்பொழுது அக்கண்ணனை மீட்டி எம்மிடம் ஒப்பிவிக்காவிடில் உன்னைச் சும்மாவிடோம்? என்ன செய்கிறோம் பார். அழகு மினிக்கி! யாரிடம் உன் நடத்தை செல்லும்- இனிப் பொறுக்கோம். ஜாக்கிரதை! உடனே எந்த உபாயத்தைக்கொண்டேனும் எமது கண்ணனை எம்மிடம் ஒப்புவிப்பாயாக. இல்லாவிடில் உன் அகந்தை எல்லாம் ஒழிக்கச் செய்வோம். நீலி! பலகாலும் எங்களுக்கு முள்ளாய் எதிர்வந்து நிற்கிறாய். உன் கொடுமை அழகியது! வெகு நேர்மை! பலபேர்கள் உன் ஒருவள் நிமித்தம் கஷ்டப்படவேண்டும்? பாவி என்ன காரியம் செய்துவிட்டாய்."

"இது ஏது கிணறு வெட்ட பூதங்கிளம்பி விட்டாற்போல இருக்கிறது. நான் என் கண்ணனை அவரை விரும்பிய நாரதனுக்குக் கொடுத்தால் உமக்கென்ன கடுப்பு. நான் உங்களுக்கு என்ன செய்தேன்? என்னை ஏன் நீங்கள் அநியாயமாக இவ்வாறு கூறுகிறீர்கள். இது நன்றாகவே இல்லை."

"சீ! மாயக்கள்ளி! உன் பேச்சுக்கடையைக் கட்டு. கிருஷ்ண பகவான் உனது சொந்தப் பொருளோ. உனது பெட்டியில் அடக்கஞ் செய்து வைத்திருக்கும் நகைகளில் ஒன்றோ? ஊரிலிருக்கும் குளம்போல் யாவர்க்கும் பொதுவாயிருக்கும் மாயனை நீ எவ்வாறடீஇ நாரதனுக்களித்தனை? அவர் விரும்பினார்; நீ கொடுத்து விட்டாய். வெகு நன்று! அவரை நீ விரும்பவில்லை. ஏன் விரும்புவாய்? உன் கொழுப்பு; நீ என்ன செய்வாய்? போதும் உன் வார்த்தை. கண்ணனை முதலில் எங்களிடம் ஒப்புவித்துவிட்டு மறுவேலையைப் பார்—"

என்று இவ்வாறு இவர்கள் கூவின மொழிகள், முன் யோசியாது தான் செய்தது பிசகு என்று அறிந்த ஸத்யபாமை தன்னை நொந்தாளாயினும் பின்வருமாறு கூறினாள்:—

"ஏன் வீணில் வாயில் வந்தவாறு சொல்கிறீர்கள். எனக்கென்ன புத்தியில்லை என்று எண்ணினீர்களா? கண்ணனை நாரதனுக்களித்தவாறு உங்களுக்களிக்கமாட்டேனா? இது ஒரு பிரயாசை என்றுஎண்ணிஎன்னைவைகிறீர்கள். வெகு நன்று, போதும். கண்ணன் வேண்டுமென்றால் கண்ணன் வேண்டுமென்றுகேட்கிறதுதானே. வீணில் வேறு பெரும் விசேஷங்கள் ஏன் சொல்லவேண்டியது."

பின் நாரதரை நோக்கி கூறுகிறாள்:—

"நாரதரே! நான் இவர்களுடைய ஸ்வபாவம் தெரியாமல் செய்து விட்டேன். தாங்கள் தயவு செய்து கண்ணனை இவர்களிடம் ஒப்புவித்துவிடும்."

"நன்றாயிருக்கிறது! தத்தம் செய்த பொருளைக் கேட்பதும் பொருந்துமா?"

"அவர்க்குபதிலாக நீர் என்ன கேட்ட போதிலும் கொடுக்கிறேன். இந்தக் கொடியவர்களிடமிருந்து காப்பாற்றும். தயவு செய்யும்."

"பதிலா! உன்னிடம் என்ன இருக்கிறது.—அவ்வெம்பெருமானிற்கு ஸமானமான இடையுள்ள பொற்குவியலைக் கொடுத்தால் அது போதும். அதற்குமேல் வேண்டாம்."

"அவ்வளவுதானே!"

"அவ்வளவுதான்.—அதுபோதும்"

உடனே ஸத்யபாமை தனது தோழிகளைக் கூவி ஓர் திராசு கொண்டுவரச் செய்து அதில் ஓர் தட்டில் கண்ணனை உட்கார்த்தினள். மற்றோர் தட்டில் தன்னிடமிருந்த பொக்கிஷப் பொருள் முற்றும் வைத்தாள். கண்ணனிருந்த தட்டு சிறிதும் அசையவில்லை. தன்னிடமிருந்த தங்கக் குவியல் முழுதும் வைத்தாள்; அப்பொழுதும் அசையவில்லை. பின் தனது அணி முதலியாவையும் வைத்தாள்; அப்பொழுதும் அசையாமலே இருந்தது. முகம் வாடி, வெயர்வை சிந்த, ஒன்றும் தோன்றாது வெருண்டு அலண்ட கண்களையுடைய, ஸத்யபாமையைப் பார்த்து நாரதர் கூறுகின்றனர்:—

"இவ்வளவுதானா? இன்னம் இருக்கும் எடுத்துவா. பரிகாஸம் செய்யாதே. உடனே கொண்டுவா. என்னைப் பார்த்துக்கொண்டு இவர்கள் ஏன் நிற்கவேண்டும். போய்கொண்டுவா?"

"இன்னம் என்ன இருக்கிறது கொண்டுவா. என்னிடம் வேறு ஒன்றுங் கிடையாது. தயவு செய்து என்னைக் காப்பாற்றும். உமது காலில் விழுகிறேன். இவர்களிடமிருந்து காப்பாற்றுமே.'

"நான் எப்படிக் காப்பாற்றுவேன். கண்ணனுடைய கனம் உனக்குத் தெரியாததா? நீ அவரை என்றும் அறிந்தே இருந்தாயே? அவரை மதிக்க முடியாதா போயிற்று.—ஸரி அம்மணீ! ருக்மணீ! நீ யல்லவோ பெரியவள். உனக்கில்லாத புத்தி யாருக்குண்டு? நீயே யல்லவா எம்பெருமானது ஹிருத்புண்டரீகத்தில் வாழ்வது. இந்தக் கண்ணனை மீட்டி உன் சகக்களித்திரங்கான இவர்களது தாபத்தைப் போக்காயா? நீ செய்யாவிடில் இவர்களுக்கு வேறு யார்கதி. உலகமாதா அல்லவா நீ? தாயில்லாவிட்டால்குழந்தை வாழுமோ? தயவுசெய்து இவர்களைக் காப்பாற்றி இந்த ஸங்கடத்திற்குடந்தையாக இருந்த என்னையும் காப்பாற்றும்."

இவ்வாறு நாரதன் ருக்மணியை நோக்கிக் கூறியதும், அனைவரும் அப்பிராட்டியாரை நாவாரத் துதித்துக் கெஞ்சினர். பெருமாட்டியும் ஸத்யபாமையைத் திராசிலிருந்த நகைகளை எல்லாம் எடுக்கச் செய்துவிட்டு தான் ஒரு துளசி தளத்தை எடுத்து,

"எம்பெருமானது பெருமைக்கு ஸமானமானதும், தரித்தவர்க்கு எம்பெருமானது ஸந்நிவேசத்தை யுண்டாக்கக்கூடியதும், எம்பெருமான் தனது எனக் கொண்டாடி அணிவதும் இத்துளசிதளமே. வனமாலையைச்சாற்றும் அன்பர்க்குத் திருமாலை யுறவாக்குவது நிச்சயம். பைந்துளபத்தில் கசியும் தேனில் ஈடுபடும் ஈக்களும் எம்பெருமானது பதத்துணையாகிய பத்மங்களை அடைவது உண்மை. இவை எல்லாம் உலகில் யாவரும் ஒப்புவதன்றிப் பெரியோனும் ஒப்பும்படிக்கு நான், எளியவள், கேவலம் ஓர் அற்பப்பெண், அவர்க்குத்தக்க பெருமித மில்லாதவள்; அத்தகைய யானும் என் உள்ளன்போடு இடும் இத்துளஸிதளம் இருதட்டுகளையும் ஸமஞ்செய்யுமாக. அதுவும் எம்பெருமானே, என்பால் காதலித்து செய்யும்."

என்று கூறி தட்டில் இட்டதும் இருதட்டும் ஸமநிலை யடைந்தது. கஷ்டமடைந்த ஸ்திரீகளின் மனநிலைமையும் ஒருநிலை யடைந்தது. பின் யாவரும் பிராட்டியாரைத் துதித்தனர். நாரதரும்,

"அம்மணீ சரணம். யான் தங்களிக்கிட்ட பிரயாஸைப் பொறுக்க வேண்டும். இச்செயல் உமது மெய்யன்பை வெளியிட்டதாயினும் யான் சொல்லத்தகுந்தவனல்ல. அருள் நிறைந்த உமது கண்ணோட்டத்திற்கு யான் இலக்காக இருக்க எனக்கு ஆசீர்வாதம் செய்யும் யான் உமது பெயரன். உமக்கு நமஸ்கரிக்கிறேன். தாங்கள் ஜகன்மாதா, மோன முதல்வி. உம்மைச்சரண மடைந்தேன். உமது பக்தியின்விருத்திபோல் எனக்கும் எம்பெருமான்பால் அன்பும், ஆதாவும், பக்தியும் விருத்தி பெற ஆசி செய்யும். இதோ நமஸ்கரிக்கிறேன்."

பிராட்டியாரும் ஆசி கூற யாவரும் அவரவரிருப்பிடம் சென்றார். கண்ணன் எம்பெருமாட்டியின் மனக்குகையுள் ஒளிந்து விளையாடிக் கொண்டிருந்தனர்.

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

### காலஞ்சென்ற மிஸ்டர் W. T. ஸ்டெட்.

டிடானிக் என்னும் புகைக்கப்பல் உடைந்த பேராபத்தில் உலகப்பிரசித்தி யடைந்த மிஸ்டர் W. T. ஸ்டெட் அகாலமரணம் அடைந்தார் என்பதைத் தெரிய நாம் மிக்க விசனிக்கிறோம். இவர் நம் காலத்தில் முதன்மையானவர்கள் என்று சொல்லப்படுபவரில் ஒருவர். இவர் மிகுந்த மேம்பாடுடையவர். இவர் அநேக விதங்களில் தன் பெருமையை ஸ்தாபித்து, நாம் எல்லோரும் அவரை பத்திரிகாசிரியர்களின் தலைவன் என்று எண்ணும்படி கீர்த்தி வாய்ந்தவர். இவரது சரித்திரத்தைச் சுருக்கமாகச் சொல்வோம். இவர் 1849-ம் வரு ஜூலை 5-ந்தேதி இங்கிலாந்தில் "நார்த்தம்பர்லாண்ட்" (Northumberland) என்னும் மாகாணத்தில் "எம்பில்டன்" Embleton) என்னும் இடத்தில் பிறந்தவர். இவர் பாதிரி ரெவரெண்ட் மிஸ்டர் W. ஸ்டெட் குமாரராதலால், அதற்கேற்ப சிறுவயதில் பள்ளிக்கூடத்தில் வாசித்து வந்த காலத்திலேயே மதவிஷயத்தில் பயிற்சியடைந்து வந்தார் இவர் ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆதலால் 14-ம் வயதிலேயே பள்ளிக்கூடம் போவதை நிறுத்தி "நியூகாஸில்" (New Castle) என்ற விடத்திலுள்ள ஒரு வியாபாரசாலையில் வெகு சாதாரண வேலையிலமர்ந்தார். ஆனால் அவர் ஜனோபகாரமான காரியங்களிலேயே மிக்க ஆசையுள்ளவராயிருந்தார் அங்ஙனமே அவர் "நார்த்தன் எகோ" (Northern Eeho) என்னும் பத்திரிகைக்கு தவாது எழுதி வந்தார் கடைசியாக அப்பத்திரிகைக்குத் தனது 23-ம் வயதில் பத்திரிகாசிரியமானார். இதுகாலம் தொடங்கி மரணபரியந்தம் உலகவிர்த்தியைக் கருதியே ஓய்வில்லாது பாடுபட்டு வந்தார்.

மிஸ்டர் ஸ்டெட்டின் நடத்தையையும் சாமர்த்தியத்தையும் நோக்குங்கால் அவர் எக்காலத்திலும் எல்லோராலும் மதிக்கப்படக் கூடியவர் என்பதிற் சையமேயில்லை. என்றாலும் அவரது பெருமை முக்கியமாகப் பத்திரிகாசிரியராகவே மிக நன்கு விளங்கும். அவர் சென்ற நாற்பது வருஷங்களாக ஓய்வில்லாது, பிறர் தன்னைப் பற்றி மேன்மைப்படுத்தியோ அல்லது தாழ்மைப்படுத்தியோ பேசுவது ஒன்றையும் கவனியாது எவ்விதத் துன்பம் வந்த காலத்திலும் மனஞ் சலியாது உழைத்து வந்தார். மிஸ்டர் ஸ்டெட் பத்திரிகை எழுதுவதில் புது மாதிரியைக் கண்டுபிடித்தவர் என்று பெருமைபொருந்திய மாத்தியூ ஆர்னல்ட் (Matthew Arnold) என்பவர் சொல்வதுண்டு. பத்திரிகைகளால் முக்கியமாகப் பலன் அடையவேண்டியவர்கள் சாதாரண ஜனங்களே. மிஸ்டர் ஸ்டெட் இவ்விஷயத்தில் பூராவாய் வெற்றி அடைந்தார். இவரது பத்திரிகைகளால் சாதாரண ஜனங்கள் ஒருபோது அபிப்பிராயத்தை எவ்விஷயத்திலும் கொடுக்கக்கூடிய நிலைமையும், தங்களது புத்தியையும் செயலையும் சன்மார்க்கங்களில் செலுத்



சென்ற ஏப்ரல்மீ 15உ 2674 ஜனங்களுடன் மூழ்கின "டியானிக்" கப்பல் $1\frac{1}{2}$ கோடி பவுன் விலையுள்ளது.



காலஞ்சென்ற உ வில்லியம் டி. ஸ்டெட் ரிவியு ஆப் ரிவியூஸ் பத்திராதிபர்.

தும் வல்லமையையும் அடைந்தார்கள்.

மிஸ்டர் ஸ்டெட்டைப்பற்றி அநேகர் பெருமையாகப் பேசியிருக்கிறார்கள். அவர்களில் முக்கியமானவர்களில் சிலராவன:—இங்கிலாந்து தேசத்து முதன் மந்திரியாய் இருந்து காலஞ்சென்ற மிஸ்டர் கிளாட்ஸ்டன் (Mr. Gladstone), சிறிதுகாலத்திற்கு முன் நம் இந்தியாவிற்கு மந்திரி ஸ்தானத்தை வகித்து வந்து வந்தவரும் (Secretary of State), தற்காலம் லார்ட் சபையில் மெம்பருமான (House of Lords), லார்ட் மார்லி (Lord Morley.)

1880-ம் ௵ செப்டம்பர் ௴ த்தில் மிஸ்டர் ஜான் மார்லி நடத்தி வந்த பால்மால் கெஜட்டிற்கு (Pall Mall Gazette) உதவிப் பத்திரிகாசிரியராய்ச் சேர்ந்து பின் 1883-ம் ௵ முதல் 1889-ம் ௵ வரை மேற்படி பத்திரிகைக்குப் பிரதமப் பத்திரிகாசிரியரானார். இதற்குப் பின்தான் மிஸ்டர் ஸ்டெட் பெருமை வாய்ந்த "ரிவியூ ஆப் ரிவியூஸ்" (Review of Reviews) என்னும் பத்திரிகையை ஆரம்பித்தார்.

இவர் நம் இந்தியாவின்பேரில் மிக ஆசையுள்ளவர். இந்தியாவிற்கு இவர் 2 வருஷங்களுக்கு முன்னமே காங்கிரஸ் மகாசபையைக் குறித்து வந்து இருப்பார். ஆனால் தடுக்கமுடியாத அசந்தர்ப்பத்தால் அவர் வர முடியவில்லை. கடைசியாக இந்தியாவின் கரையைக் காணமலே அவர் இறக்கவேண்டி வந்தது. ஆனால் அவர் இந்தியா பாராவிட்டாலும் இந்தியாவின் க்ஷேமத்தைக் கருதி ஏற்படும் எல்லாவித ஏற்பாடுகளிலும் வெகு சிரத்தைக் காட்டி வந்தார். இந்தியாவின் தற்கால நிலையின் உண்மையை அறிந்து அவர் இந்தியா சட்டச்சபைகளில் அவசியமான சீர்திருத்தங்களை ஏற்படுத்தவேண்டியது அவசியம் என்று எழுதினார். அவர் காங்கிரஸ் சபையைப்பற்றி ஆதரவாகப் பேசுவோரில் ஒருவர்.

இவர் கடைசி காலத்தில் "இறந்தவர்களுடன் பேசுதல்" என்றகொள்கையில் நம்பிக்கை வைத்து 1909-ம் ௵த்து பட்ஜட் விஷயமாக மிஸ்டர் கிளாட்ஸ்டன் (Mr. Gladstone) உடன் பேசினதாக சொல்லப்படுகிறதுண்டு.

மிஸ்டர் ஸ்டெட் மிகவும் நல்லவர். உலக நன்மைக்காகவே பாடுபட்டவர். மிக்க தேசாபிமானி. எப்பொழுதும் ஓயாது உழைத்து வந்தவர். இப்பொழுது நாம் அவரது அகாலமரணத்திற்காகத் துக்கப்படுவதோடு நில்லாது அவரது ஞாபகம் என்றும் நிலைத்திருக்கும்படி நாம் அவரது நற்குணங்களை கைக்கொண்டு பரோபகாரத்திலேயே உழைப்போமாக.

* * *

**பூமியின் கீழே வீடுகள்.**—ஆப்பிரிக்காவில் கேப்ஸ் நகரம் முதல் ட்யூனிஸ் நகரம் வரையில் உள்ள தேசத்தில் மட்மாடான் என்கிற ஜாதியார் 3000 ஜனங்களுண்டு அந்தப் பிரதேசம் கல்பூமியானதினால் பூமிக்குள்ளேயே குகையைப்போல் வீடுகள் தோண்டிக்கொண்டு வசிப்பார்கள். சிலர் மாடிகள் கூட அமைத்துக் கொள்வார்கள்.

**பர்மாவிலிருந்து லண்டனுக்கு அனுப்பப்படும் பணத்தொகை.**—பர்மா அச்சிறைக்கணக்குத் திட்டத்தின்படி 1912, 13-ம் வருஷத்தில் லண்டன் கஜானுவுக்கு அனுப்பப்படவேண்டிய மொத்தத்தொகை 15,500,000 பவுன் காளது எப்பிரல் மாதம் 1-ந் தேதியிலிருந்து 6-ந்தேதிக்குள்ளாக ஆலோசனை சபையாரின் பில்லுகளின்படி அனுப்பப்பட்ட பவுன் 67 74, 185. பாக்கி 15,094,723 பவுனையும் 1913-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ந் தேதிக்குள்ளாக அனுப்பப்படும்.

**ஒரு வெள்ளிச் சுரங்கம்.**—மலையாளத்திலிருக்கும் பொன்னனி தாலூக்காவில் ஒரு வண்ணன் கிணறு தோண்டிக்கொண்டிருக்கும்போது வெள்ளி கலந்த களிமண்ணிருந்ததாம். அக்களிமண்ணின் மாதிரி கொஞ்சம் டிப்டி கலெக்டருக்கும், சென்னை மியூசியத்திற்கும் பரீட்சார்த்தமாக அனுப்பப்பட்டிருக்கின்றது.

**வாழைச் சாராயம்.**—வாழையிலிருந்து சாராயமெடுக்குமுறை பிரான்சு தேசத்துள்ள செய்கனில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. வாழைச்சாறென்ற, வாழைப்பழத்திலிருந்தெடுக்கும் ஈஸ்டு என்னுமொரு பதார்த்தத்தைப் போட்டுக் காய்ச்சினால் அதிலிருந்து சாராயம் உண்டாகின்றதாம். இந்தியாவில் வாழையாயிருப்பதால், வாழைச்சாராய மெடுக்குந்தொழில் மிகுதி இங்குக் கைப்பற்றப்படும்.

**சிருங்கேரி மடத்தைப்பற்றிய விஷயங்கள்.**—இப்போது விதேகமுத்தியடைந்த சிருங்கேரி மடத்து ஆசாரிய சுவாமிகளின் ஞாபகார்த்தமாக அவரைச் சமாதி செய்தவிடத்தில் 50000 ரூபாய் செலவு செய்து கோயிலொன்று கட்ட அங்குள்ளாருத்தேசித்திருக்கின்றார்கள். அதற்காக இப்போது பலர் பொருளுதவி செய்து வருகின்றனர். ஷை மடத்தில் இப்போது ஆசாரிய சுவாமியாக நியமிக்கப்பட்டிருக்கின்றவர்க்குச் சந்திரசேகர பாரதி சுவாமிகளென்று பெயரிடப்பட்டிருக்கின்றது. இவ்வாறாக இவர்க்கிட வேண்டுமென்பது இதற்கு முன்னிருந்த சுவாமிகளது அபிப்பிராயமாம்.

## புத்தக வரவு
## BOOKS RECEIVED

**ஞானகாந்தி.**—ம-ா-ா-ஸ்ரீ செங்கை இராஜுலுசெட்டியார் எம். பி. பி. ஐ. அவர்களெழுதியது. விலை அணா 12.

**வேலையின் கூலி அல்லது கள்வா கவர்ந்த கலியாணப்பெண்.**—ம-ா-ா-ஸ்ரீ M.S. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் எழுதியது. விலை அணா—6.

**ஜனகா மோஹன சாதுரியம் அல்லது எலிபிடிக்கும் பொறி** ம-ா-ா-ஸ்ரீ S. G. இராமாஞ்சலு நாயுடு அவர்கள் எழுதியது. விலை அணா 5.

**சுகுமார திலகம் அல்லது கற்பு லக்ஷணம்.**—ஷையார் எழுதியது. விலை அணா 2.

**நாகரீக பாரிஜாதம் அல்லது பெண்மக்கள் துயரம்.**—ஷையாரால் எழுதியது. விலை அணா 4.

**மாங்கல்யப் பிச்சை அல்லது கற்புக்காசி.**—ம-ா-ா-ஸ்ரீ ஏகாம்பர முதலியார் அவர்கள் எழுதியது. விலை அணா 12.